

கல்கி
KALKI 19.3.89 ரூ. 2
ஆண்
வடிவத்தில்
ஓர் அன்னை...


இப்பொழுது!
நறுமணமிக்க ஓர்
புதிய வேவ்
ஒவ்வொரு குளியலிலும் அலையலையாய் பூவின் நறுமணம். நாள் முழுவதும் புதுப் பொலிவுடன் இருக்க.புதிய 'வேவ்' உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் சகாய விலையில் கிட்டும் ஒரு குளியல் சோப்.
புதிய வேவ்
குடும்பத்தினரின் குளியல் சோப்
உபயோகித்து பாருங்கள்!
நீங்கள் அதையே
விரும்பி நாடுவீர்கள்.
Wave
FAMILY
BATH SOAP
Rs. 3.87
+ L.T. Extra
MSIL
A product of
Mysore Sales International Limited, Bangalore-560 052.
MCA/Wave/5 Tam



* முன்பு மலை போல் குவிந்திருந்த மணல் மேடுகள்....


"மணலிலிருந்து விடுபட்டோம்; மகிழ்ச்சியாக இருக்கிறோம்..!"

கடந்த 17.7.88 தேதியிட்ட கல்கி இதழில் நெல்லை — கட்டப்பொம்மன் மாவட்டத்திலுள்ள கூடுதாழை என்ற மீனவக் கிராமத்திலுள்ள வீடுகள் மணலில் புதைந்து கொண்டிருப்பதாகச் செய்தி வெளியிட்டிருந்தோமல்லவா? அதன் பிறகு என்ன நடந்தது?

கல்கியில் செய்தி, வெளியானவுடனேயே, நெல்லை கட்டப்பொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் எம். ராமனும் மற்றும் சம்பந்தபட்ட உயர் அதிகாரிகளும் விரைந்து செயலாற்றினார்கள். அதன் படி, 'புல்டோஸர்கள்' மூலம் குவிந்து கிடக்கும் மணல் மேடுகளை முற்றிலுமாக அகற்றுவது என்று முடிவு செய்யப்பட்டது. இதற்கிடையில், திருநெல்வேலி சங்கர் நகரிலுள்ள இந்தியா சிமெண்டின் பொது மேலாளர் என். லோகநாதன், கல்கியில் கூடுதாழை பற்றிய செய்தியைப் படித்ததும் அந்த மணல் மேடுகளை அகற்றும் பணிக்காக, ஒரு 'ராட்சத' புல்டோஸரைக் கூடுதாழைக்கு அனுப்பி வைத்தார்.

கடந்த வாரம், நாங்கள் மீண்டும் கூடுதாழைக் கிராமத்திற்குச் சென்ற போது, மலை போலக் குவிந்து கிடந்த மணல் மேடுகள் இப்போது மாயமாக மறைந்திருந்தன. மணல் மேடுகளை அகற்றிய இடங்களில், மேலும் மணல் குன்றுகள் உருவாகாமல் தடுக்கும் வகையில், காற்று அரிப்புத் தடுப்புத் திட்டத்தின் கீழ், திருச்செந்தூர் உதவிச் செயற் பொறியாளர் முயற்சியில், மணல் மேடு நிலை நிறுத்தும் பணி தொடங்கப்பட்டுச் சுமார் இரண்டு கி. மீ. நீளத்திற்குச் சவுக்கு மற்றும் வேலிக்கருவைமுள் செடிகள் நடப்பட்டிருந்ததைக் கண்டோம்.

* இப்போது மணல் மேடுகள் அகற்றப்பட்டு, சவுக்கு மற்றும் வேலிக்கருவை முள் செடிகள் நடப்பட்டுள்ளன.....




மணல் மேடுகள் அகற்றும் பணியில் முயற்சி எடுத்து, ஒத்துழைத்த மாவட்ட ஆட்சித்தலைவர் எம். ராமன், சங்கர் நகர் இந்தியா சிமெண்ட் பொது மேலாளர் என். லோகநாதன், தனுஷ்கோடி ஆதித்தன் எம். பி., சப்—கலெக்டர் சண்முகம், ராதாபுரம் ஒன்றியப் பெருந்தலைவர் கார்த்திஸன் வட்டார வளர்ச்சி அதிகாரி ஜி.டி. தாம்ஸன் ஆகியோருக்குக், கூடுதாழை மக்கள் பாராட்டு விழா நடத்தியிருக்கிறார்கள். அவ்விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் எம். ராமனுக்கும், இந்தியா சிமெண்ட் லிமிட் பொது மேலாளர் என். லோக நாதனுக்கும் கூடுதாழை கிராம மக்கள் சார்பில் ஆளுக்கொரு வலம்புரிச் சங்கு பரிசளிக்கப்பட்டிருக்கிறது!

இப்போது கூடுதாழை மக்கள், எங்களை அடையாளம் கண்டதும், எல்லோருமாகக்கூடி வந்து, "நீங்க 'கல்கி'யில் முதன் முதலாகப் போட்டோவோட செய்தி வெளியிட்டதாலதான் இன்னைக்கு மணல் மேடுகள் மறைந்து.... நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம்!" என்று கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

செய்தி, புகைப்படங்கள்:
குளச்சல் இப்ராஹீம்

இளம் வக்கீல் கொலை— பின்னணி என்ன?



கொலையுண்ட மோகனன்

"குழித்துறை குற்றவியல் நீதிமன்றம் — II இன் மாஜிஸ்திரேட் (பாலையா) சிலகள்ளச் சாராய வியாபாரிகளுடன் தமது சேம்பரில் நீதியை விலை பேசுகிறார். அவருடைய செயல்களுக்கு எதிரான எங்கள் (வழக்கறிஞர்கள்) போராட்டம் தொடர்கிறது. உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்...."

இவ்வாறு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை (பொறுப்பு) நீதிபதி மோகன் அவர்களுக்கு ஒரு தந்தி கொடுக்கிறார், வழக்கறிஞர் மோனன் நாயர்.

இது நடந்தது சென்ற மாதம் 9 ஆம் தேதி மதியம் 2.15 மணிக்கு. கன்னியா குமரி மாவட்டத்திலுள்ளது குழித்துறை. இங்கு மாஜிஸ்திரேட் பாலையாவை எதிர்த்து, மறு நாள் நடக்கவிருக்கும் தங்கள் போராட்டம் தொடர்பாக, அடுத்தநாள் காலை பதினொரு மணிக்கு முடிவு செய்ய இருப்பது பற்றி மற்ற வழக்கறிஞர்களுக்குத் தகவல் கொடுத்து விட்டு மாலைக்கோடு என்ற சிற்றூரிலிருக்கும் தமது வீட்டிற்குப் புறப்படுகிறார் மோகனன். அதற்காகக் குழித்துறை அருகிலுள்ள தொடுவட்டி என்ற நகரிலிருந்து ஆறுகாணி செல்லும் பஸ்ஸில் (தடம் எண் 105D) ஏறிக் கடைசி இருக்கைக்கு முன் இருக்கையில் அமர்கிறார்.

அப்போது இருட்டி விடுகிறது. மதுவின் மயக்கத்தோடு ஏழு பேர் வந்து அதே பஸ்ஸில் ஏறுகிறார்கள். டிரைவர் பக்கத்தில் நிற்கிறார்கள். பயணிகளுக்கு டிக்கெட் கொடுத்து முடிப்பதற்காகப் புறப்பட்ட பஸ் ஓரிடத்தில் நிறுத்தப் படுகிறது. டிரைவர் கீழே இறங்குகிறார். அவரோடு அந்த ஏழு பேரும் இறங்குகிறார்கள். டிரைவர் சந்திரனோடு ஏதோ பேசுகிறார்கள். அருகிலிருந்த வெற்றிலை பாக்குக் கடையில் பழம், சர்பத் சாப்பிடுகிறார்கள்.

மீண்டும் பஸ் புறப்பட்ட போது, அந்த ஏழு பேரும் முன் பக்கமிருந்த பெண்களைக் கிண்டல் செய்கின்றனர். முறைத்த பெண்களிடம், 'தாய்க் குலமே நாங்க கொஞ்சம் தண்ணியடிச்சிருக்கோம்..... அதனால பொறுத்துக்குங்க.....' என்கிறார்கள். பயணிகள் தொடர்ந்து பயணம் செய்யப் பயப்படும் நிலை. எனவே, பயணிகளில் சிலரும் கண்டக்டரும், டிரைவரிடம் பஸ்ஸைக் காவல் நிலையத்திற்கு ஓட்டுமாறு சொல்கின்றனர். டிரைவரோ, 'இவங்க நமக்கு வேண்டப்பட்டவங்க... ஒண்ணும் பிரச்னையில்லை...'' என்று சமாதானம் செய்கிறார்.

பஸ் தொடர்ந்து செல்கிறது. வழக்கமாக நிறுத்த வேண்டிய பஸ் நிறுத்தங்களில் பஸ் நிற்காமல் சற்றுத் தள்ளித் தள்ளியே நிற்கிறது. இறங்குகிறவர்களை இறங்க அனுமதித்துப் புதிதாகப் பயணிகளை ஏற்றாமலேயே செல்கிறார் டிரைவர். கூடவே அந்த 'ஏழு பேரின்' அட்டகாசமும் அதிகமாகிக் கொண்டே வருகிறது.

இதற்கிடையில் மோகனன் இறங்க வேண்டிய மாலைக்கோடு ஸ்டாப்பிங் வருகிறது. இறங்குவதற்காக எழுகிறார் மோகனன். கண்டக்டரும் விசில் கொடுக்கிறார். ஆனால் அந்த விசில் சப்தத்தைக் காதில் வாங்காதவர் போல் பஸ்ஸை நிறுத்தாமல் செலுத்திச் செல்கிறார் டிரைவர். மீண்டும் கண்டக்டர் விசில் கொடுக்க, ஒரு வளைவான பாதையில் பஸ்ஸை ஓரங்கட்டுகிறார் டிரைவர்.

இதற்கிடையில் முன் பக்கமிருந்த ரவுடிக் கும்பல் மோகனனை நெருங்குகிறது. இறங்குவதற்காகப் படிக்கட்டில் காலை எடுத்து வைத்த மோகனனை எட்டி உதைக்கிறான் ஒருவன். 'அம்மா' என்று அலறியபடியே மோகனன் பஸ்ஸுக்கு வெளியே ஒரு புதரில் விழுந்ததும், ஒருவன் கத்தியை எடுத்துக் குரல்வளையில் வெட்டுகிறான். இரத்த வெள்ளத்தில் மிதந்த மோகனன் துடிதுடித்துப் பரிதாபமாக இறக்கிறார்.

அப்போது சுமார் இரவு ஏழரை மணி இருக்கலாம். கத்தியால் வெட்டியவனையும் டிரைவரையும் போலீஸார் கைது செய்கிறார்கள். மற்ற ஆறுபேரும் தப்பிச் சென்று விடுகிறார்கள்.....

பஸ்ஸில் நடந்த சம்பவத்தை அன்றைய



கொலையைத் தடுக்க முயன்ற கோபால்

தினம் மோகனன் பயணம் செய்த அதே பஸ்ஸில் பயணம் செய்த கோபால் என்பவர் நடந்தது நடந்தபடி அப்படியே விவரித்தார். மோகனனைக் கத்தியால் வெட்டிய போது தடுக்கச் சென்றதில் தமது இடது கையிலும் குத்துப்பட்டுக் காயம் ஏற்பட்டிருப்பதைக் காட்டினார். அவர்தான் குத்துப்பட்ட கையோடு அருகிலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நடந்தவற்றைக் கூறினாராம்.

வழக்கறிஞர் சி. சாந்த குமாரைச் சந்தித்த போது, "மாஜிஸ்திரேட் பாலையா இங்கு மாற்றலாகி வந்ததுமே இங்குள்ள கள்ளச் சாராய வியாபாரிகளைக் கைக்குள் போட்டுக் கொண்டு நீதியை விலைபேசத் துவங்கி விட்டார். அது பற்றிக் கேட்ட எங்களை மிரட்ட ஆரம்பித்தார். தொடர்ந்து அவருடைய சமூக விரோதச் செயல்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் கடந்த டிசம்பர் மாதம் வழக்கறிஞர் சங்கப் கூட்டப்பட்டு 20.12.88 முதல் மாஜிஸ்திரேட் பாலையாவின் கோர்ட்டைப் புறக்கணிப்பதாக முடிவு செய்தோம். அதன்படி எங்கள் போராட்டம் நடந்து கொண்டிருந்த போது, வழக்கறிஞர் சங்கத் தலைவர் பாக்கியநாதன் தலைமையில் நானும், ராதாகிருஷ்ணன், ஜார்ஜ், ராஜன், ஜாஸ்பர் ஜோசப் ஆகியோரும் சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) மோகன் அவர்களைச் சந்தித்து எங்கள் போராட்டம் பற்றிய மனுவையும் கொடுத்தோம்.

"அதைக் கேள்விப்பட்டதுமே மாஜிஸ்திரேட் பாலையா எங்கள் வழக்கறிஞர் சங்கக் கட்டடத்திற்கே வந்து எங்களை மிரட்டினார். அதற்கு நாங்கள் பயப்படவில்லை. போராட்டத்தைத் தொடர்ந்தோம். ஆரம்பத்திலேயே தக்க நடவடிக்கை எடுத்திருந்தால் மோகனன் கொலையைத் தவிர்த்திருக்கலாம்...." என்றார்.

"வழக்கறிஞர் சங்கத் தலைவர் பாக்கியநாதனை மாஜிஸ்திரேட் பாலையாவே தாக்கிக் காயப்படுத்தினார். இது தொடர்பாக களியக்காவிளை காவல் நிலையத்தில் வழக்கு (குற்ற எண் 9/89)ப் பதிவு செய்யப் பட்டுள்ளது...." என்றார் வழக்கறிஞர் ஆர். எஸ். ராதா.

"மோகனன் மிகவும் அமைதியானவர். முப்பத்திரண்டு வயதான அவருக்குச் சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்புதான் திருமணமாயிற்று. ஒன்றரை வயதில் ஆண் குழந்தை இருக்கிறது. அவரை நம்பித்தான் அவருடைய குடும்பமே என்ற நிலை. அதனால் குமரி மாவட்ட அனைத்து வழக்கறிஞர்களும் சேர்ந்து ஏதாவது நிதி திரட்டி அவர் குடும்பத்திற்கு உதவ எண்ணியுள்ளோம். எது எப்படியானாலும் மோகனன் கொலை திட்டமிட்ட தொரு கொலை தான்..." என்றார் மோகனனின் சீனியர் கே. சந்திரசேகரப் பிள்ளை.



• கொலையுண்ட மோகனனின் மனைவி சசிகலா வும் குழந்தை விக்னேஷும்...

மோகனனின் வீட்டிற்குச் சென்ற போது, குடும்பமே அந்தத் துக்கத்திலிருந்து மீளாமல் கிடந்தது. அழும் முகங்களோடு காட்சியளித்த அவர்களை என்ன சொல்லித் தேற்ற முடியும்?

படங்களும் கட்டுரையும்:

பானு மணாளன்




• வழக்கறிஞர் சாந்தகுமார்



• வழக்கறிஞர் சந்திரசேகரப் பிள்ளை

இது தொடர்பாகச் சென்னையிலுள்ள உயர்நீதி மன்றத் தலைமை (பொறுப்பு) நீதிபதி மோகன் அவர்களிடம் கருத்துக் கேட்ட போது, "எனக்குத் தந்தி வந்தது மட்டுமில்லாமல், வழக்கறிஞர்களின் கண்டன ஆர்ப்பாட்டம் நடக்க ஆரம்பித்தவுடனேயே குறிப்பிட்ட அந்த மாஜிஸ்திரேட் மாற்றப்பட்டு விட்டார். தொடர்ந்து விசாரணைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. Law will take its course" என்றார். — ஆசிரியர்.



● வித்யாகர்

ஆலய வடிவத்தில் ஓர் அன்னை...

இவன்தான் என் முதல் குழந்தை. பெயர் பிரபு. ஐந்து வயதாகிறது.....'' — சுற்றிலும் ''அப்பா அப்பா'' என்று மொய்த்துக் கொண்டிருந்த ஏராளமான குழந்தைகளில் ஒன்றை மட்டும் தனியாக நம்மிடம் அறிமுகப்படுத்தி வைத்தார் வித்யாகர்; முப்பத்து நான்கு வயது இளைஞர்!

''கொஞ்சம் புரியும்படி சொல்லுங்கள்...'' என்றோம் நாம்.

''கடந்த 84 ஆம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் எனக்கு ஏற்கெனவே அறிமுகமாகியிருந்த தொழுநோயாளியும் ரிக்ஷாக்காரருமான ஒருவர் என்னிடம் வந்தார். அவர் கையில் ஒரு பத்துமாதக் குழந்தை. முந்தைய நாள் இரவு அமைந்தகரையிலுள்ள பழனியப்பா தியேட்டரில் அந்தக் குழந்தை அனாதையாகக் கிடந்ததைத் தாம் கண்டு எடுத்து வந்ததாகவும் அக்குழந்தையை நான் வைத்துக் கொண்டு வளர்க்க முடியுமா என்றும் கேட்டார். நானும் சரியென்று வாங்கிக் கொண்டேன். அவன்தான் இந்தப் பிரபு. இவனைக் கொண்டுதான் 84—மார்ச் 10 ஆம் தேதி இந்த இல்லத்தை ஆரம்பித்தேன். அப்போது ஒரு சாதாரணக் குடிசையில்தான் ஆரம்பித்தேன். அன்று ஒரேயொரு குழந்தையோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த இல்லம் இப்போது ஐம்பதுக்கும் மேலான குழந்தைகளைக் கொண்டதாக வளர்ந்துவிட்டது.....''

''உங்கள் கரங்கள் இப்படி 'உதவும் கரங்களாக' உருமாறியதற்கு ஏதாவது காரணங்கள் உண்டா?''

''நான் பிறந்து வளர்ந்தது மைசூரிலுள்ள கொள்ளேகால். ஒருநாள் நான் பள்ளியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த போது ஒருவர் மோட்டார் பைக் விபத்தில் சிக்கிச் சுயநினைவு இழந்த நிலையில் கிடப்பதைப் பார்த்தேன். அவரை நானே மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அட்மிட் செய்தேன். மூன்று நாட்கள் நான் வீட்டுக்குக் கூடச் செல்லாமல் அவருடனேயே இருந்தேன். அவருக்கு நினைவு திரும்பிய போது, அவர் பெயர் ராமகிருஷ்ணன் — சென்னையில் ஆட்டோமொபைல்ஸ் வியாபாரம் செய்பவர் என்று தெரிய வந்தது.

''முன்பின் தெரியாத நான் அவருக்கு உதவி செய்தது அவருள் என்மேல் ஒரு தனி



● தையற்பயிற்சி நிலையத்தில்...



* குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதோடு, இல்லத்திலும் பாடம் சொல்லித் தரப்படுகிறது.

ஈடுபாட்டை வளர்த்து விட்டது. சென்னைக்குத் தம்மோடுவந்தால் எனக்கான எல்லா உதவிகளையும் செய்வதாகச் சொன்னார். நானும் சரியென்று வந்து அவர் குடும்பத்துள் ஒருவனாகி விட்டேன். அவர்தான் என்னை எம். ஏ. வரையிலும் அ த ற் கு மேலும் படிக்க வைத்தார். வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் மனிதர்களின் பிரச்னைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு உதவும் பயிற்சியையும் முடித்தேன்.

''ராமகிருஷ்ணன் அவர்களின் ஆட்டோமொபைல் கடையில் அவருக்கு உதவியாக இருந்து கொண்டே மற்றவர்களின் மனரீதியான பிரச்னைகளுக்குத் தீர்வும் வழிகாட்டுதலும் செய்வதற்காக 'உதவும் கரங்கள்' என்று ஒரு பிளாஸ்டிக் ஷீட்டில் பெயர் எழுதி வைத்துச் சிறு சமூக சேவையை ஆரம்பித்தேன்.

''கொஞ்சம் கொஞ்சமாக என்னை நாடி வருபவர்களின் கூட்டம் அதிகமானது. ஆட்டோமொபைல் கடை போத வில்லை. மேலும் மனரீதியான பிரச்னைகள் போன்றவற்றை அந்த இடத்தில் வெளிப்படையாகப் பேசவும் தயங்கினார்கள். இ தை ராமகிருஷ்ணன் அவர்களிடம் சொன்னபோது, நான் தனியாகவே வந்து இந்த இடத்தில் உதவும் கரங்களை ஆரம்பிக்க உதவினார்.

''அதன் ஒரு பகுதியாகத்தான் 'பாலமித்ரா' என்னும் இந்தக் குழந்தைகள் இல்லமும் பிரபு என்ற இந்தக் குழந்தையால் ஆரம்பமானது. அனைவரையும் ஒரே ஜாதியான மனித ஜாதியாகப் பார்க்கும், அன்பையே ஆதாரமாகக் கொண்டு இயங்கும் ஓர் இல்லம் இது.



* பிரபு: முதல் குழந்தை.

''பிரபு என்ற முதல் குழந்தை வந்ததும் பிறகு ஒவ்வொரு குழந்தையாக வர ஆரம்பித்தன. வரும் குழந்தைகளின் பெற்றோர்களைக் கண்டு பிடிக்க முடிந்தால் அவர்களிடம் அந்தக் குழந்தைகளை ஒப்படைத்து விடுவேன். முடியாத சமயங்களில் தான் — பெற்றோர்களைப் பற்றிய செய்திகளோ தெரியாத நிலையில்தான் இங்கேயே அக்குழந்தைகள் தங்கிப்படிக்க ஏற்பாடு செய்கிறேன்.

''இந்தக் குழந்தையைப் பாருங்கள்.... பெயர் சுதாகர். திருமணமாகாத ஒரு பெண்ணுக்குப் பிறந்து விட்டான். விளைவு அம்மாவின் அன்பு கிட்டவில்லை. குப்பைத் தொட்டியில் போடப்பட்டு விட்டான்.... இந்தக்



* உழைக்கும் கரங்களோடு ஐக்கியமாகிவிட்ட இளைய தலைமுறையினரோடு வித்யாகர்.....

குழந்தை (அட்டைப் படத்தில் பால் குடிக்கும் குழந்தை) பெயர் சுரேஷ். திருமணமாகாத ஒரு நடிகைக்குப் பிறந்து விட்டான். குழந்தை தனக்குப் பாரமாகிவிடக் கூடாது என்பதற்காக இவனை அவள் தன் டிரைவரிடம் கொடுத்து வளர்க்கச் சொல்லியிருக்கிறாள். டிரைவர் இவனைத் தமது வீட்டுக்குக் கொண்டு சென்றால், தமது மனைவி தம்மைச் சந்தேகிக்க வாய்ப்பிருக்கிறது; அதனால் தமது குடும்ப வாழ்க்கை பாழாகிவிடும் என்று அஞ்சி இங்கு கொண்டு வந்து கொடுத்துவிட்டார். எனக்கு அந்த நடிகையின் மீது கோபமும் வெறுப்பும் இருந்தால் கூட இந்தக் குழந்தை என்ன செய்யும் பாவம் என்று வாங்கிக் கொண்டேன்.... இப்படி இப்போது எனக்கு ஏராளமான குழந்தைகள் 'பிறந்து' விட்டார்கள்....." என்று சிரித்தார் வித்யாகர்.

"இந்தக் குழந்தைகள் இல்லத்தைத் தவிர உதவும் கரங்களின் வேறு பணிகள் என்ன?"

"மன நோயாளிகள். நடுத்தரக் குடும்பங்களிலும் சரி, வசதியுள்ள குடும்பங்களிலும் சரி மனநோயாளிகள் நல்ல முறையில் கவனிக்கப்படுகிறார்கள். பல மனநோய் மருத்துவ மனைகள் வசதியுள்ளவர்களுக்கு நல்லபடியாக மருத்துவமும் செய்கின்றன. ஆனால் ஒன்றுமே இல்லாத ஏழை மனநோயாளிகளுக்கு யார் இருக்கிறார்கள்? அதனால்தான் அவர்கள் பிறரின் வேடிக்கைப் பொருள்களாகத் தெருவில் சட்டையைக் கிழித்துக் கொண்டு அலைகிறார்கள். அவர்களுக்குச் சரியான மருத்துவ வசதி கிடைத்தால் நல்லபடியாகக் குணமாகிவிடுவார்கள். எனவேதான் 'கருணாலயம்' என்று உதவும் கரங்களின் ஒரு பிரிவு அப்படிப்பட்டவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டு வசதி செய்யப்பட்டிருக்கிறது. அவர்களில் பலர் இப்போது

* அச்சுக்கூடப் பிரிவில்......



நல்ல குணமடைந்து எங்கள் உதவும் கரங்களின் அச்சுக் கூடத்தில் அற்புதமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அச்சுக் கூடம் உடல் ஊனமுற்றோருக்காக ஏற்படுத்தப் பட்டது. அவர்கள் இங்கே பயிற்சி பெறுகிறார்கள்......

"மேலும் 'தாயகம்' என்ற ஓர் அமைப்பையும் ஏற்படுத்தியிருக்கிறோம். அது பெரம்பூரில் இருக்கிறது. அது யாருமில்லாத அனாதைகளாக — இறக்கும் தறுவாயிலுள்ள முதியோர்களுக்கானது. தெருவோரத்தில் அவர்கள் பட்டினி கிடந்து கஷ்டப்பட்டுச் சாவது எத்தனை கொடுமை? இருக்கும் சில மாதங்



* மனநோயாளிகளுக்கான கருணாலயத்தில்......

களாவது அவர்கள் நிம்மதியாக உண்டு உறங்கட்டுமே என்று அமைக்கப்பட்டது. அதில் இப்போது பெண்கள் மட்டும்தான் இருக்கிறார்கள் என்பதால் — இடவசதியும் போதாது என்பதால் ஆண்களைச் சேர்த்துக் கொள்ள முடிவதில்லை. ஆக, அது இன்னும் முழுமையடையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.


"கடைசியாக ஒன்று. நாங்கள் நடத்தும் டெய்லரிங் யூனிட். இதில் குடிசைப் பகுதிகளில் உள்ள பெண்களுக்குத் தையற் பயிற்சியளிக்கப்படுகிறது. மாதம் இருபது ரூபாய் என்று அவர்களிடம் கட்டணம் வசூலிக்கிறோம். அனேகமாக அனைவரும் இரண்டே மாதங்களில் நல்ல பயிற்சி பெற்று ஏற்றுமதித் தையலகங்களில் வேலைக்குச் சென்று விடு

பானி மிக்ஸ்®

உடனடியாகத் தயாரிக்கக்கூடிய பாரிட்ஜ்.

தானியங்கள், பழங்கள், முந்திரி கலந்த ஆகாரம்.

பானி மிக்ஸ் கோதுமை, சோளம், அரிசி, தேங்காய், ஆப்பிள், பேரீச்சை, திராட்சை மற்றும் முந்திரி போன்ற சுவையிலான ஊட்டமிகு, எளிதில் ஜீரணிக்கக்கூடிய பாரிட்ஜ் ஆகாரம். குடும்பத்தினருக்கு காலைச் சிற்றுண்டிக்கும் மாலையில் பள்ளி அல்லது அலுவலக வேலைகளுக்குப் பின் அளிக்கவும் உகந்தது. முதியோருக்கும் நோயிலிருந்து குணம் அடைவோர்க்கும் ஏற்ற உணவு.




நிமிடங்களில் தயார்


பானி மிக்ஸை விரைவாகவும், எளிதாகவும் தயாரிக்கலாம்.



கிண்ணத்தில் தேவையான பானி மிக்ஸை எடுக்கவும்.



அதோடு முன்னமே கொதித்த பாலை போதுமான அளவு மெதுவாகச் சேர்க்கவும்.



மிருதுவான கிரீம் போன்ற பாரிட்ஜ் ஆகாரம் பெற மெதுவாகக் கலக்கவும்.



சுவையான ஒவ்வொரு ஸ்பூன் பாரிட்ஜ் உணவையும் உங்கள் குடும்பத் தினர் சுவைத்து மகிழ்வார்கள்.

பானி மிக்ஸ்®

இந்தியாவிலேயே முதன் முறையாக!



வழங்குவோர்: க்ளிண்டியா லிமிடெட் (முன்னாள் க்ளாக்ஸோ)

குடும்ப உணவுகளில் நம்பிக்கைக்கு உகந்த பெயர்

GL/2/88 TAM



நல்லதோர் துவக்கம்—நலம் தரும் இணைக்கம்...
சிட்டி யூனியன் வங்கியுடன்!

வளமான வருங்காலத்திற்கு வழிவகுக்க, ஒவ்வொருவர் தேவைக்கும் ஏற்ப பல நல்ல சேமிப்புத் திட்டங்களை அளிக்கிறது—சிட்டி யூனியன் வங்கி!

- சேமிப்புக் கணக்குகள்
- மாதாந்திர சேமிப்புத் திட்டங்கள்
- ரொக்கச் சான்றிதழ்கள்
- வாமன விஸ்வரூப திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டங்கள்
- குடிபெயர்ந்தோர் கணக்குகள்
- மற்றும் உங்கள் தேவைக்கேற்ற எண்ணற்ற சேமிப்புத் திட்டங்கள் உள்ளன.

CUB

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,

பதிவு அலுவலகம்: கும்பகோணம்—612 001.

CUB—உங்கள் வளர்ச்சிக்கேற்ற வங்கி.

கிறார்கள்......

''எல்லாம் சரி, இதற்கெல்லாம் ஏராளமாகப் பணம் செலவாகுமே, அதற்கு என்ன செய்கிறீர்கள்?''

''உதவும் கரங்களிலுள்ள அனைவரின் சாப்பாட்டுத் தேவைக்கும் மாதம் ஒன்றுக்கு ஒன்பது மூட்டை அரிசியும் ஐம்பது கிலோ பருப்பும் செலவாகிறது. இதில் மூன்று மூட்டை அரிசி மாதாமாதம் தவறாமல் மூன்று அன்பர்கள் — தங்கள் சக நண்பர்களிடம் பணம் சேகரித்து வாங்கி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மற்றவற்றுக்கு நான் வீடு வீடாகச் சென்று யாசகம்தான் கேட்கிறேன். ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களின் மாலை வேளைகளில் கடற்கரையிலுள்ள காந்தி சிலைக்கருகில் சென்று அங்கு கார்களில் வருவோரிடம் உதவும் கரங்களைப் பற்றி எடுத்துச் சொல்லி உதவக் கோருகிறேன். மின்சார ரயில்களில் சென்று கேட்கிறேன்.....

''பலர் உதவுகிறார்கள். சிலர் 'இத்தனை அழகாக ஆங்கிலம் பேசிக் கொண்டு இப்படியொரு கௌரவப் பிச்சையா? உழைத்துச் சம்பாதி.....!' என்று அறிவுரை கூறுவார்கள். கேட்டுக் கொள்வேன். வேறு வழி?

''அண்மையில் ஓர் அன்பர் வேடந்தாங்கலுக்கு அருகில் இரண்டு ஏக்கர் நிலத்தை எங்களுக்குத் தந்திருக்கிறார். இங்குள்ள இடமெல்லாம் வாடகை இடங்கள்தான் என்பதால் அந்த இடத்திற்குக் கட்டட வசதிக்கு வழியில்லையென்றாலும்—வெறும் கீற்றுக் குடிசைகளையாவது கட்டிக் கொண்டு சென்றுவிடத் தீர்மானித் திருக்கிறோம்.

''மேலும் பெரம்பூரிலுள்ள 'தாயகம்' ஒரு பிளாட்டில் இருக்கிறது. அதன் உரிமையாளர் கருணையோடு வாடகையில்லாமல் அதை எங்களுக்குக் கொடுத்திருந்தாலும் — அங்கு இறக்கும் தறுவாயிலுள்ள முதியோர்களே இருப்பதால் — அடிக்கடி சாவும் நடப்பதால் மற்ற குடித்தனக்காரர்கள் தங்களுக்கு அது வோர் இடைஞ்சலாக உணருகிறார்கள். அதையும் மாற்றியாக வேண்டிய சூழ்நிலை.

''கடைசியாக ஒன்று. இப்போது செய்து கொண்டிருக்கும் பணிகள் தவிர புதிய திசைகளிலும் உதவும் கரங்கள் நீள வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு இருக்கிறது. அனைவருமே இதுபோன்ற சமூக சேவை அமைப்புகளுக்கு உதவுவது என்றால் பண உதவி செய்வது என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இல்லை.

''பணம் ஒரு பகுதிதான். உங்களுக்கு ஓய்வு நேரம் இருக்கிறதா? வாருங்கள். எங்கள் குழந்தைகளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுங்கள்; பாடம் சொல்லிக் கொடுங்கள்; அன்புக்காக ஏங்கும் அவர்களுக்கு அன்பு காட்டிச் செல்லுங்கள். எங்கள் மன நோயாளிகளிடம் வந்து பேசுங்கள். சமூகத்தால் வேடிக்கை பார்க்கப்படும் அவர்களிடம் நீங்கள் சென்று அன்பு வார்த்தைகளைப் பேசும் போது அது எவ்வளவு பெரிய மாற்றத்தை அவர்களுக்குள் உருவாக்



உணவு வேளையில்......

கும் என்பதைப் போகப் போக உணருவீர்கள். எங்கள் தாயகத்திலுள்ள முதியோர்கள் தங்கள் வாழ்நாளைத் தன்னந்தனியாகக் கிடந்து எண்ணிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் உங்கள் அன்பு வார்த்தைகள் அவர்களின் ஆத்ம சாந்திக்கு நிச்சயமாக உதவ முடியும் என்பதை நினைவு கொள்ளுங்கள்.


''சிலர் தங்கள் ஓய்வு நேரங்களை இப்படி வந்து எங்களோடு செலவிடுவது எங்களுக்கும் உற்சாகமாக இருக்கிறது. இன்னும் சிலர் எங்கள் உதவும் கரங்களில் உள்ள அனைவருக்கும் ஒரு வேளை சாப்பாட்டுச் செலவான இருநூறு ரூபாயைத் தங்கள் பிறந்த நாள் போன்ற விசேஷ தினங்களன்று கொடுப்பார்கள். நாங்கள் சமைத்து வைப்போம். அவர்கள் வந்து அன்போடு பரிமாறித் தாங்களும் எங்களோடு உண்டு செல்வார்கள். இன்னும் சிலர் தங்கள் தொடர்புடைய திருமண விழாக்களில் மீதமான உணவுப் பொருள்களை எங்களிடம் கொண்டு வந்து கொடுத்து உதவுவார்கள்.

''இப்படிப்பட்ட அன்பு உள்ளங்களோடு இளைஞர்களும் யுவதிகளுமாகப் பதினைந்து பேர் சமூக சேவகர்களாக உதவும் கரங்களோடு ஐக்கியமாகித் தொண்டு புரிகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் மூலமாகத்தான் நான் இயங்கிக் கொண்டிருக்கிறேன்.....'' என்றார் வித்யாகர்.

— இளங்கோவன்

அட்டை வண்ணப்படமும், படங்களும்:


கே. வி. ஆனந்த்


பிகார் முதல்வர் பதவி
யாருக்குக் கீழே நாற்காலி சொருகுவாரோ?.. எப்ப உருவுவாரோ? எதுக்கும் தயாரா இருக்கணும்!
ஐயோ! என்னை அடிக்கப் பார்க்கிறீரே! என்கிட்ட பணமே இல்லையே!
கை மாறிய பணம்
ஸி.பி.ஐ.
இ காங்கிரஸ் ஆட்சி செய்யும் காந்தி பிறந்த குஜராத்திலேயே கள்ளச் சாராயம்!
சாராய சாம்ராஜ்யத்தையே ஒழிச்சுட்டேன்னு சொன்னீங்க... கள்ளச் சாராயத்தை ஒழிக்கத் தெரியலையே!
சிதம்பரம்
குஜராத்தில் கள்ளச் சாராய சாவு 150



கல்கி

1989 மார்ச் 19
மலர் 47 இதழ் 33
விபவ பங்குனி 6



பெரியம்மா கொடுத்தார்! சின்னம்மா பெற்றுக் கொண்டார்!

“ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபாய்! பெரியம்மா கொடுத்தார்; சின்னம்மா பெற்றுக் கொண்டார்! இதுதான் இணைப்பு நாடகம்!'' என்கிறார் கருணாநிதி. மத்திய அமைச்சர் சிதம்பரமும் 'இதற்கு விளக்கம் தேவை' என்று தட்டிக் கேட்டு விட்டுத் திரும்பிப் போனார்.

'இது கட்சிப் பணம்; அவர் தந்தார், இவர் பெற்றுக் கொண்டார். இடையில் கருணாநிதிக்கு ஏன் ஆத்திரம் வருகிறது?' என்ற ரீதியில் ஜெயலலிதா ஆதரவாளர்கள் பேசுகின்றனர். 'கருணாநிதி தேர்தலுக்குச் செலவழிக்கவில்லையா? அவருக்கு ஆந்திராவி லிருந்தும் கர்நாடகாவிலிருந்தும் பணம் வரவில்லையா?' என்று கேட்கின்றனர். 'பதின் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த அவருடைய ஆட்சியின் ஊழல்களைப் பட்டியலிடு வோம்' என்று மிரட்டியும் பார்க்கின்றனர்!

'கட்சிப் பணம் என்றால் அது ஜெயலலிதா பெயரில் வங்கியில் இருப்பானேன்? கட்சிக்கு என்று வங்கிக் கணக்கு கிடையாதா? ஜெயலலிதாவின் வங்கிக் கணக்குகளை ஸி. பி. ஐ. ஆராய்ந்து கொண்டிருப்பது தெரியாதா?' என்றெல்லாம் பிரதிவாதங்களுக்கு எதிர்வாதங்கள் கிளம்புகின்றன.

இந்தச் சொற்போர்களுக்கிடையில் நமக்குப் பொதுவான சில உண்மைகள் புரி கின்றன. முதலாவது, ஊழலின் பரிமாணம் எக்கச்சக்கமாக வளர்ந்து விட்டது. முன்பெல்லாம் லஞ்சம்—ஊழல் என்று நூற்றுக்கணக்கில் அல்லது பல்லாயிரக் கணக்கில் தான் பேசுவார்கள். இன்று கோடிக்குக் குறைந்து ஊழலே கிடையாது! முன்பு தேர்தல் செலவுக்கு என்று கட்சிகள், தொழில் வர்த்தக நிறுவனங்களிடம் நன்கொடைகள் பெற்று வந்தன. ராஜாஜி போன்ற பெரியவர்கள் இதையே தவறு என்றும் 'தடை விதிக்க வேண்டும்' என்றும் கூறி வந்தனர். 'நன்கொடை என்ற பெயரில் ஒரு கட்சி பெறுகிற லஞ்சம், நாளை அக்கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் தொழில் வர்த்தக நிறுவனங்களுக்குச் சலுகை காட்டுவதற்கே வழிவகுக்கும்' என வாதாடி வந்தனர். ஆனால் இன்றோ, ஆட்சியில் உள்ளவர்கள், கம்பெனிகளிடம் நன்கொடைக்குக் கையேந்தி நிற்பதில்லை. அதைவிட மிகச் சுலபமான விதத்தில், மிக அதிகமாகப் பணம் திரட்டும் சாகசத்தைக் கற்றுக் கொண்டு விட்டனர்! மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு வாங்கப்படும் பண்டங்களின் விலையைப் பேரம் பேசாமல் ஏற்று, 'கமிஷன்' அல்லது 'கிக்பேக்' பெறுகின்றனர். யாரும் சந்தேகிக்க முடியாதவாறு ஒரு சின்ன சலுகை காட்டி அதன் மூலம் ஒரு பண முதலை பணத் திமிங்கில மாக மாற வழிவகுத்து, பின்னர் அதில் பங்கு கேட்டுப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு பெறப்படுகின்ற கோடிக்கணக்கான ரூபாய்கள் மக்களுக்குச் சேர வேண்டிய, மக்களுடைய பணம் என்ற அடிப்படை உண்மையை யாரும் யோசித்துக் கூடப் பார்ப்பதில்லை! மனச் சாட்சியைக் கொன்ற பிறகு இது எப்படி நினைவு வரும்?

இவ்வாறு இமாலய ஊழல் புரிந்து சேகரிக்கப்படும் பணம், சொந்தப் பெயரில் வங்கியில் போடப்பட்டாலும், 'கட்சிப் பணம்' என்று சொல்லித் தப்ப முடிகிறது. கணக்கு வழக்கு, தணிக்கை என்பதொன்றும் இல்லை. ஸி. பி. ஐ. விசாரணை முதலியன இருந் தாலும் உண்மைகளைச் சாட்சியங்களுடன் நிரூபிக்க முடிவதில்லை. அதனால் மக்களுக்கு நீதி கிடைப்பதும் சாத்தியமில்லை!

அடிப்படைக் கோளாறு, பல கோடி செலவழித்தால்தான் சில ஆயிரம் வோட்டுக் களைப் பெற முடியும் என்ற அளவில் நடக்கும் நமது தேர்தல் முறையில் இருக்கிறது. புதிதாக ஆட்சிக்கு வரும் ஒரு கட்சி கூட, ஆரம்பத்தில் யோக்கியப் பொறுப்புடன் நடந்து கொண்டாலும் தேர்தல் நெருங்க நெருங்கப் பதவியை இழக்காமல் காத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலையில் அதற்குத் தேவைப்படும் பணத்தைத் திரட்ட, ஊழல் புரிய ஆரம்பிக்கிறது!

எனவே, தேர்தல் முறையை எளிமைப்படுத்தி, வேட்பாளரும் சரி, கட்சியும் சரி செலவழிக்க வேண்டிய அவசியமில்லை என்ற நிலையை உருவாக்கினால்தான் பண நாய கத்தின் கொடுங்கோன்மையிலிருந்து மக்கள் விடுதலை பெற முடியும். அப்போது கணக் கின்றிப் பணம் வைத்திருப்பவர் 'கட்சிப் பணம்' என்று கூறித் தப்பவும் முடியாது!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

டீவி-வீடியோ பக்கங்கள்...

●● இந்தியா பாகிஸ்தானுடன் கிரிக்கெட் விளையாடித் தோற்ற நாள். கபில் கேப்டன். அன்று இரவு என் பேரனுக்கு வழக்கம் போல் 'பூஸ்ட்' பானத்தைக் கொடுத்தபோது, "இனி நான் இதைச் சாப்பிட மாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்தான். காரணத்தைக் கேட்ட போது, "இதைத் தினமும் சாப்பிடும் கபில் தேவுக்கு என்ன பலம் இருக்கிறது? மாட்சில் தோற்றுவிட்டாரே!" என்று அவன் கூறியவுடன் நாங்கள் வாய் விட்டுச் சிரித்து விட்டோம்.

— எம்.கே. நாராயணன், ஸ்ரீரங்கம்

●● எம்.ஜி.ஆர். பிறந்தநாள் விழாவிற்காக விடியவிடிய மூன்று எம்.ஜி.ஆர். படங்களைப் போடுவதாக ஏற்பாடாகியது. ஆயிரம் பேருக்கு மேல் இருந்த அந்தக் கூட்டம் அமைதியாகப் படம் பார்த்துக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு 'குடி'மகன் "எங்கடா என் பெண்டாட்டி?" என்று கத்திக் கொண்டுவர, கூடியிருந்தவர்கள் அவரை சமாதானப் படுத்த முடியாமல் "யாரும்மா அது, இந்தாளு பொஞ்சாதி.... எந்திரிச்சு வா!" என்று அவரை இழுத்துக் கொண்டு வந்து பெண்கள் பகுதியில் நிறுத்த, பதினைந்து நிமிடம் வரை யாரும் எழுந்து வரவில்லை. சரி, குழப்பம் தீரட்டும் என்று படம் காண்பிப்பதை நிறுத்தினார்கள். உடனே பெண்களிடையே இருந்து ஒரு தாய்க்குலம் எழுந்து, நேராய் அந்த மனிதரின் காலரைக் கொத்தாய்ப் பிடித்து, "நிம்மதியா அவுரு மூஞ்சியப் பார்த்துக்கிட்டு இருக்கலாம்னா... அது உனக்குப் பொறுக்கலியே... ஐயா நீங்க படத்தப் போடுங்க... நான் இதக் கொண்டு போய் வீட்லதள்ளிக் கதவைப் பூட்டிட்டு வறேன்" என்று தள்ளிக் கொண்டு போன போது, கும்பல் முழுவதும் கோரஸாகச் சிரித்துக் கைதட்டி அவர்களை வழியனுப்பியது!

— டி.வி. ராஜன், நெய்வேலி—3

●● எனது தாயார் கிராமத்திலேயே இருந்தவர். எங்களுடன் இருக்க டில்லிக்கு அழைத்து வந்தேன். ஆரம்பத்தில் ஆவலுடன் டீ.வி.யின் முன் உட்கார்ந்து பார்த்துக் கொண்டே இருப்பார். நிகழ்ச்சிகள் அநேகமாக ஹிந்தியிலும் ஆங்கிலத்திலுமாகவே இருந்ததால் சிக்கிரமே அவருக்கு டீ.வி. பார்ப்பதில் உற்சாகம் குறைந்து விட்டது. அவர் பொழுது போக்குக்காக ஒருநாள் என் மகன் ரவி வி.ஸி.ஆர் வாடகைக்கு எடுத்துத் தமிழ் சினிமா போட்டான். நான் மாலையில் ஆபீசில் இருந்து வந்ததும் தாயார் மகிழ்ச்சியுடன் கூறினார்: "அம்பி! நம்ப ரவி ஹிந்தி டீ.வியைக் குடுத்துட்டுத் தமிழ் டீ.வி. வாங்கிண்டு வந்திருக்கான் பார்!"

— பி. கிருஷ்ணமூர்த்தி, புது டில்லி

●● அக்கா வீட்டில் டீ.வி. பார்த்துக்கொண்டிருந்தோம். குடும்பக்கட்டுப்பாடு பற்றி அதில் ஓர் விளம்பரம் வந்தது. டாக்டர் ஒருவர் நிரோத் பாக்கட்டை, மற்றொருவரிடம் கொடுப்பார். அதை அவர் தம் பாண்ட் பாக்கட்டில் வைத்துக் கொள்வார். இதைப் பார்த்த ஐந்து வயது ரவி, தன் தந்தையிடம், அது என்னப்பா? என்று கேட்டான். தந்தையும் குடும்பக்கட்டுப்பாட்டை நாசுக்காக, அவனுக்கு விளக்கினார். "அது சரி, அதுக்கு நிரோத்தை என்ன செய்யணும்?" என்று கேட்டான், அவன்! "அதான் பார்த்தாயே, பாண்ட் பாக்கட்டில் வைத்துக் கொள்ள வேண்டியது தான்! குடும்பக் கட்டுப் பாடு பூர்த்தி!" என்றார் அவர்!

மறு நாள் அவன் 'சித்தி, என்னிடம் பேசிக் கொண்டிருந்தாள். ரவியும் அங்கு இருந்தான். "இந்தக் குழந்தையோட குடும்பக் கட்டுப் பாடு ஆபரேஷன் செஞ்சுக்கப் போறேன் மாமி. ஆனா ஆபரேஷன் பண்ணிக்கிட்டுக் கொஞ்சம் கஷ்டப் படணுமேன்னுதான் கவலையா இருக்கு" என்றாள். எங்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த ரவி, "நீ ஏன் சித்தி, ஆபரேஷன் பண்ணிக்கிட்டுக் கஷ்டப்படணும்? சித்தப்பாவை, ஒரு நிரோத் பாக்கெட் வாங்கி, பாண்ட் பையில் வைத்துக் கொள்ளச் சொல்லு.



குடும்பக் கட்டுப் பாடு, பூர்த்தி'' என்றான்!

நாங்கள் ஏன் சிரிக்கிறோம் என்று விளங்காமல், அவனும் கூடச் சேர்ந்து சிரித்து வைத்தான்!

— என்.கே. சகவரி, பெங்களூர்—560 010

●● பக்கத்து வீட்டில் டீ.வி. வாங்கிய புதிது. டெக்னீசியன் வந்து 'ஆன்டென்னா' அமைத்து டீவியை இயங்கச் செய்து விட்டுச் சென்றிருந்தார். மறுநாள் இவர்கள் டீவியை இயங்கச் செய்தபோது திரையில் படம் வரவில்லை. டீவியில் ஏதோ கோளாறு என்று கருதி உடன் மலருக்கு போன் செய்வதற்காக எங்கள் வீட்டிற்கு வந்தார். மலரும், உடன் மெக்கானிக்கை அனுப்புவதாகக் கூறி விட்டார். இவர் வீட்டிற்குத் திரும்பிச் சென்று பார்த்தபோது, டீ. வி. யின் ஒயர் பொருத்தப்பட்டிருக்கும் போர்டின் ஸ்விட்ச் 'ஆஃப்' செய்த நிலையில் இருந்ததைக் கண்டார். அதை 'ஆன்' செய்தபோது டீவி முன்போல் இயங்க ஆரம்பித்துவிட்டது. எனவே, மெக்கானிக்கை வரவேண்டாம் என்று சொல்வதற்காக மீண்டும் எங்கள் வீட்டிற்கு போன் செய்ய வந்தார். அப்போது அவர் முகத்தில் இருந்த 'கலையை' நினைத்தால் இப்போதும் சிரிப்பு வருகிறது.

— என். முரளி, நாகப்பட்டினம்.

●● முன்பு இங்கட்கிழமை இரவு 9.50 க்கு தேசிய நிகழ்ச்சியில் ஒளிபரப்பான "சித்ரமாலா" என்கிற பன்மொழித் திரைப்படப் பாடல் காட்சி இப்போது சில வாரங்களாக இரவு 8.10க்கே ஒளிபரப்பாகிறது. ஞாயிறு இரவு 9 மணிக்கு ஒளிபரப்பான சார்க் குவிஸ் (SAARC QUIZ) இப்போது வெள்ளி இரவு 8.10க்கே ஒளிபரப்பாகிறது. வியாழக்கிழமை பஞ்சாயத்து ராஜ் என்ற மத்திய அரசின் கொள்கை விளக்கக் கருத்தரங்கு இரவு 8.10 க்கே ஒளிபரப்பானது.

அதாவது இதுவரை இரவு 9 மணிக்கு தொடங்கிய டில்லியின் இந்தி ஆதிக்கம், இப்போது வரம்பு மீறி வாரம் 3 நாட்கள் இரவு 8.10 க்கே மாநில மொழி நிகழ்ச்சிகளுக்குக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் (மாலை 5.30 மணி முதல் இரவு 9 வரை) அத்துமீறி ஆக்ரமிப்புச் செய்வதை தமிழ் உணர்வுள்ளவர்கள் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். பொழுது போக்கு நிகழ்ச்சி தானே என்று இதை அலட்சியப்படுத்தினால் இக்கொடுமை இன்னும் வளர்ந்து பெரும் பண்பாட்டுச் சீரழிவிற்கும், மொழி வழிப்பட்ட நாகரிகத்தின் நலிவிற்கும் வழி வகுத்துவிடும்.

— ரா. சிவகுமார், சென்னை — 15.



● என். சம்பத்



●● ஒலிப்பதிவாளர் என். சம்பத் அவர்களுடைய மலரும் நினைவுகள் ஒளிபரப்பப்பட்டது. பேட்டி கண்ட ஸ்ரீதர் அளந்து கேள்விகள் கேட்டார். அதற்குச் சம்பத் அளித்த பதில்கள் சுவையாக இருந்தன. ஆனால் மிக்ஸிங், சிங்க்ரனைசிங், பேஸ், டிராக் போன்ற வார்த்தைகள் பார்ப்பவர்களில் எத்தனை பேருக்குப் புரிந்திருக்கும். யாமறியோம் பராபரமே.

ஆரம்பத்தில் ஒலியே இல்லாமல் காட்சிகளைப் போட்டு, பின் ஒலியுடன் அதே காட்சிகளைப்போட்டு, ஒலியின் இன்றியமையாத தன்மையை விளக்கியது நல்ல யுக்தி.

பழைய படக்காட்சிகளைப் பார்த்தபின் மலரும் நினைவுகள் தயாரிப்பாளருக்கு ஒரு யோசனை. எங்களைப் போன்ற இளம் தலைமுறையினருக்குக் காலம் சென்ற நடிகர்கள் தியாகராஜ பாகவதர், சின்னப்பா, என். எஸ். கே., கே. ஆர். ராமசாமி, இசையமைப்பாளர் சி. ஆர். சுப்பராமன், ஜி. ராமனாதன் போன்றவர்களை முழுமையாகத் தெரியாது. அவர்கள் இல்லையெனினும் அவர்களுடன் பழகிய, பணியாற்றிய மூத்த கலைஞர்கள், நடிகர்கள் உள்ளனர். அவர்களிடம் சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் பழகிய போது ஏற்பட்ட நிகழ்ச்சிகளை, படப்பிடிப்பின் போது நிகழ்ந்த சம்பவங்களைக் கூறச் செய்து, படமாக்கி மலரும் நினைவுகள் சின்னப்பா பற்றி, கலைவாணர் பற்றி, சந்திரபாபு பற்றி என்ற தலைப்பில் ஒளிபரப்பினால் சிறப்பாக இருக்குமே?

— டி. எஸ். கண்ணன், திருப்பரங்குன்றம்

●● நடந்து முடிந்த தேர்தலில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் டீ. வி. யில் பிரசாரம் செய்தனர் அல்லவா? ஒரு நாள் ஒரு தலைவர் பேசும்போது ஒரு சிறுவன், தன் அம்மாவிடம் 'டீ. வி. யில் பேசுபவர் யார்?' என்று கேட்டான். அவரும் அவரைப் பற்றிப் பெருமையாகச் சொன்னார். அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்ட அந்தச் சிறுவன், கடைசியில், "அப்ப இவர் செத்தா ஸ்கூல் லீவு விடுவாங்களா, மாமா?" என்று கேட்டானே, பார்க்கலாம்!

— தமிழ் எழிலன், காஞ்சிபுரம் — 1.

நீங்கள் கேட்டவை — தராசு

அன்றைய முதல்வர் கருணாநிதிக்கும் இன்றைய முதல்வருக்கும்

* போத்தனூர் புலிச்சோழன், கோவை—45.

? ஹெல்மெட் அணிவது கட்டாயம் என்ற நிலை தளர்த்தப்படுமா?

! அதுகுறித்து மறுபரிசீலனைக்கு இடம் இருப்பது போல் முதல்வர் பேசியிருப்பது தவறு. ஹெல்மெட் அத்தியாவசியமானது. ஹெல்மெட் அணியாதவர்கள் தண்டிக்கப் படுவதும் சரிதான். ஆனால் போலீஸார் பல சந்தர்ப்பங்களில் வாகன ஓட்டிகளைத் துன்புறுத்துவது போல் நடந்து கொள்கிறார்கள். போலீஸின் அணுகுமுறையில்தான் மாற்றம் தேவை.

* கே. எஸ். சுப்பிரமணியன், விழுப்புரம்.

? தேசிய முன்னணி — கரு முதிர்ந்து சுகப் பிரசவம் ஆகுமா?

! சுகப்பிரசவம் தேர்தலுக்கு முன் நடந்து விடும். ஆனால் குழந்தையைக் காப்பாற்றுவார்களா என்பதுதான் சந்தேகம்.

* மு. தேன்மொழி, மேட்டுப்பாளையம்.

? நதிகளைத் தேசியமயமாக்கினால் வறுமை அகன்று விடுமே... ஏன் தயக்கம்?

! வறுமை அகன்று விடப் போகிறதே என்றுதான் தயங்குகிறார்கள், போலும்!

* ஜி. நீலா, மன்னார்குடி.

? 'பெண்கள், அவர்கள் இருக்கும் கௌரவத்தில்தான் எல்லாமே இருக்கிறது. பௌடரும் மேக்கப்புமாக வந்து கவர்ச்சி அரசியலாக மாறும் போதுதான் பிரச்னைகளே எழுகின்றன' என்று அமைச்சர் சுப்புலட்சுமி ஜகதீசன் கூறியிருக்கிறாரே?

! அவர் யாரை நினைத்துக் கொண்டு பேசியிருக்கிறார் என்று நமக்குப் புரிகிறது... ஆனால் இது சரியான வாதம் அல்ல. தில்லியில் சமீபத்தில் நேரு நூற்றாண்டு ஓட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் துன்புறுத்தப்பட்டது எதனால்? ஆண்கள் கண்ணியக் குறைவாக நடந்து கொண்டது ஏன்? பெண்களுக்குச் சம அந்தஸ்து மட்டுமின்றி, மரியாதையும் கொடுத்துப் பழகும் மனோபாவம் இன்னும் அதிகமாக ஆண் வர்க்கத்திடம் பரவ வேண்டிய அவசியம் இருக்கிறது.

* ராமாபுரம் சந்துரு, சென்னை.

? கல்கி, தி.மு.க. ஆதரவுப் பத்திரிகையாக மாறிவருகிறதே. ஏதேனும் பதவி கிடைக்கும் என்ற நப்பாசையா?

! நல்லதற்கு ஆதரவு தந்தும் கெட்டதைக் குறைகூறியும் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்கியும் மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செயல்பட்டு வருகிறோம். பதவி தரப்பட்டாலும் மறுதலித்து விடுவோம். இதை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையெனில் உங்களுக்காகப் பரிதாபப் படுகிறோம்.

* ஜி. என். சரவணன், பழனி.

? மழைக்காகவாவது பள்ளியில் ஒதுங்கியது உண்டா?


! 'மழைக்காகப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கிய போது கூட, மழையைத்தான் ரசித்தேன், பாடத்தை அல்ல!' என்று கி. ராஜநாராயணன் எழுதிய வரிகள் நினைவுக்கு வருகின்றன. அந்த அதிர்ஷ்டம் எனக்கில்லை. நான் பாடத்துக்காகவே பள்ளி சென்ற, கல்லூரிக்குப் போன, துரதிர்ஷ்டசாலி.

* அ. ஜெயவேல் முருகன், சாத்தூர்.

? முன்பு இருந்த முதல்வர் கருணாநிதிக்









* புது நடவடிக்கை

கும் இன்று உள்ள முதல்வர் கருணாநிதிக் கும் வேறுபாட்டைக் காண்கிறீர்களா?

! நான் ஏதாவது சொன்னால் நடுநிலை இழந்து ஜால்ரா தட்டுவதாக ராமாபுரம் சந்துரு வீண் வம்பு செய்வார். எதிர்க்கட்சியில் உள்ள (இ. காங்கிரஸ்) பீட்டர் அல் போன்ஸ், 'காயாக இருந்த கருணாநிதி, கனி



* அன்றும் இன்றும்

வித்தியாசம் என்ன?

யாகப் பழுத்து விட்டார்' என்று சட்டசபையில் கூறியதை நினைவூட்டுவதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

* மூ. செ. முருகேசன், குமாரபாளையம்.

? 'உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயகக் கட்சி காங்கிரஸ்' என்று ராஜீவ் கூறியுள்ளாரே?

! ஒரு திருத்தம். உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாட்டிலே உள்ள உட்கட்சி ஜனநாயகமே நிலவாத கட்சி என்பது சரியாக இருக்கும்.

* தமிழ் எழிலன், காஞ்சிபுரம்.

? ஓட்டல்களில் ஏற்கெனவே உள்ள விலைகளே, குறைக்கப்பட்ட விலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளதே?

! கட்டாயப்படுத்திவிலையைக்குறைத்தால் உணவுப் பண்டத்தின் தரம் குறையும். இயற்கையில் சில நியதிகள் எப்படி உண்டோ, அப்படி பொருளாதாரத்திலும் உண்டு. அவற்றைஅதிகாரத்தைக்காட்டியோ, சட்டம் போட்டோ மாற்ற முடியாது. விலைவாசி உயர்வுக்குக் காரணம் மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளே.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? பஞ்சாப் பிரச்னைக்கு ராஜீவ் மேற்கொண்டிருக்கும் புதிய நடவடிக்கைகள் பற்றி...?

! பாதிக் கிணறு தாண்டினால் என்ன நடக்கும் என்பது நான் சொல்லித்தானா தெரிய வேண்டும்?

* எஸ். பேபி காயத்ரி, விருத்தாசலம்.

? கருணாநிதி காலில் பள்ளிக் கல்வி இயக்குனர் விழுந்து வணங்கியுள்ளாரே?

! அதிகாரிகளிடம் வேகமாகப் பரவி வரும் இந்த வைரஸ், அவர்களைத் தன்மானமிழக்கச் செய்கிறது. முதல்வர் மனம் வைத்தால் இதற்குத் தடுப்பூசி போடுவது சாத்தியமே.

* டி. சீனிவாசன், சென்னை.

? பிரபாகரனைக் கோபால்சாமி இலங்கை சென்று சந்தித்துத்திரும்பியதில் உள்ள முக்கியத்துவம் என்ன?

! 'ஒரு பயனும் இல்லை' என்றுதான் முதல்வரே சொல்லிவிட்டாரே. நாளிதழ்களுக்குச் சில தினங்களுக்குப் பரபரப்பான செய்தி அகப்பட்டதுதான் ஒரே பலன்.

* த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? நகைச்சுவை என்றால் என்ன?

! சில காலம் பேசாமலே இருந்த ஜெயலலிதா திடுமென்று வாய் திறந்து, 'மது வியாபாரத்துக்குச் சலுகை காட்டப்பட்டதில் தவறேதும் இல்லை' என்று வாதாட ஆரம்பித்திருக்கிறாரே, அதுதான்!

* பி. நாகலெட்சுமி, சென்னை. *

? வரவர நீதித் துறையை விமர்சனம் செய்வது அதிகரித்துள்ளதே?

! தீர்ப்பை விமர்சனம் செய்வதில் தவறில்லை; நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கப்படும்போதுதான்—அதுவும் ஆதாரமின்றி — சிக்கல் ஏற்படுகிறது. வேங்கடராமைய்யாவின் வேதனை இதுதான்.

* ஸ்ரீவத்ஸன், மன்னார்குடி.


? குஜராத்தில் மதுவிலக்கு தோற்று விட்டதா?

! மதுவிலக்குக்குத் தோல்வியே கிடையாது. அந்த மிகச் சிறந்த கொள்கையை ஏனோதானோ என அமல்படுத்தும் முறைகளில் தோல்விகள் சந்திக்கப்படுகின்றன. மது விலக்கே இல்லாத மாநிலங்களிலும் கள்ளச்சாராயம் உண்டு; கள்ளச் சாராய மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

பி. நாகலெட்சுமி,
AP-59, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்,
சென்னை — 101.

அதிக தண்ணீர் எதனாலே?



எல்ஜி போர்வெல்பம்ப் பொருத்தியதாலே!

தொழில் நுட்ப வல்லுநர்களால், தரமிக்க உபகரணங்களைக்கொண்டு தயாரிக்கப்படும் எல்ஜி போர்வெல் பம்ப், குறைந்த செலவில் அதிக நீரை வெளியேற்றுகிறது. நீர் ஓட்டத்தைப் பொறுத்து இப்பம்புகள் சில இடங்களில் நிமிடத்திற்கு 30 முதல் 50 லிட்டர் தண்ணீரை வெளியேற்றும். உங்கள் வீட்டு போரில் நீங்களும் எல்ஜி போர்வெல் பம்ப் இன்றே பொருத்திடுவீர்!


எல்ஜி எக்யுப்மெண்ட்ஸ் லிமிடெட்
"இந்தியா ஹவுஸ்" திருச்சி ரோடு,
கோயமுத்தூர்-641 018.

எல்ஜி
போர்வெல்பம்ப்

கிளைகள் : சென்னை : எல்ஜி எக்யுப்மெண்ட்ஸ் லிமிடெட்., 40, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-600 008; போன் : 566694 & 560095. ● மதுரை : எல்ஜி எக்யுப்மெண்ட்ஸ் லிமிடெட், "காந்தாபவனம்", 3, தேனி ரோடு, பிச்சைப்பிள்ளைச்சாவடி, மதுரை-625 016; போன் : 31404 & 37651
● சேலம் : எல்ஜி எக்யுப்மெண்ட்ஸ் லிமிடெட், கதவிலக்கம் 4/20, ஓமலூர் ரோடு, சுவர்ணபுரி, சேலம்-636 004. போன் : 7920 & 77437.

சமீபத்தில் சென்னையில், கல்யாணி ஓர் எக்ஸிபிஷன் நடத்தினார். அங்கே விதவிதமான டிசைன்களில் தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள் இடம் பெற்றன. இவற்றின் தனித்தன்மை என்ன தெரியுமா! இவை அனைத்துமே 'பாட்ச் ஒர்க்' (Patch work) முறையில் தயாரிக்கப்பட்டவை. அதாவது, வண்ணவண்ணத் துணிகளை வாங்கி, அவற்றை ஒரே சீரான சிறு துண்டுகளாய்க் கத்திரித்து மறுபடி ஒட்டுப் போட்டுப் புதுப் புது டிசைன்களில் படுக்கை விரிப்புகள், உறைகள் தயாரிப்பது.

''இது இங்கே ரொம்பப் பாபுலர் ஆகாத ஒரு கலை! 'நல்ல துணியை வாங்கித் துண்டுதுண்டாய் வெட்ட எப்படித்தான் மனசு வருகிறதோ!' என்று என் எக்ஸிபிஷனுக்கு வந்திருந்த இரண்டு பெண்மணிகள் பேசிக்கொண்டதைக் கேட்ட போது, எனக்குச் சிரிப்பாக வந்தது. இதை கலைக்கண்ணுடன் பார்க்கவேண்டும். ஒட்டுப்போட்டு ஒரு படுக்கை விரிப்பை உருவாக்குவதில் எத்தனை மணி நேர வேலை கரைந்திருக்கிறது என்பதை அறிந்தவர்களால் மட்டுமே, இவற்றின் முழு மதிப்பையும் உணர முடியும்'' என்கிறார் கல்யாணி பிரமோத்.



நான் செய்த டிசைனுடன் கல்யாணி பிரமோத்...

"ஒட்டுப் போடுவதும் ஒரு கலைதான்..."


கல்யாணியின் இன்னொரு ஸ்பெஷாலிடி, குழந்தைகளுக்கான 'க்வில்ட்'. இங்கே ஒட்டுப் போடும் கலையை வித்தியாசமாய்ச் செய்கிறார். பிரபலமான குழந்தைப் பாடல்கள், சிறுவர் கதைகளைத் துணியில் சித்திரிக்கிறார். பாடல் அல்லது கதையினைப் பத்து சீன்களாய்ப் பிரித்துக் கொண்டு கதாபாத்திரங்களை, வண்ணத் துணிகளில் வரைந்து வெட்டியெடுத்து அவற்றைப் பெரிய துணிகளில் வைத்துத் தைக்கிறார். ஒரு 'க்வில்ட்' தயாரிக்கப் பன்னிரண்டு நாட்கள் கூடப் பிடிக்குமாம். விலை சுமார் 600 ரூபாய். இந்தியர்கள் இதை ரசிக்கிறார்கள்; ஆனால் வாங்குவதில்லை. ஆனால் அயல் நாட்டு டூரிஸ்ட்களோ, கண்டதும் அள்ளிக்கொண்டு போகிறார்கள். காரணம் இவற்றின் விலை அவர்கள் நாடுகளில் ஆயிரக்கணக்கில்.

பூம்புகார் நிறுவனம் அண்மையில் பாய்மரம் என்று ஒரு கண்காட்சியை நடத்தியது. ஆரம்பமே அமர்க்களம். முதல் நாள் வந்த இத்தாலிய டூரிஸ்ட் நாலரை லட்சம் ரூபாய்க்கு மரம் மற்றும் உலோகச் சிற்பங்களை வாங்கி அசத்தினார். சாமானியர்கள் வாங்கும்படியாயும் நிறைய ஐட்டங்கள் இடம் பெற்றிருந்தன.

கண்காட்சி அரங்கை ஏதோ சினிமா செட்டினுள் நுழைந்ததுபோன்ற உணர்வை ஏற்படுத்தும் படியாய் மாற்றி அமைத்திருந்தார்கள். ''மொத்த விற்பனை பத்துலட்சத்தை நிச்சயம் தாண்டும்'' என்றார் அதிகாரி ராமலிங்கம். பாராட்டும்படியான அரங்க நிர்மாணிப்பைச் செய்தவர் பிரபல சினிமா ஆர்ட் டைரக்டர், நாயகன் புகழ் தோட்டா தரணி!

சந்திப்பு: எஸ். சந்திரமௌலி

வண்ணப்படம்: கே. வி. ஆனந்த்




VIKRANT
TRACK KING

சுகபோகத் தீவுகள் 10

கிருஷ்ணமூர்த்திக்கும் கூட மிகுந்த அதிர்ச்சியும் ஆச்சர்யமுமாகத்தான் இருந்தது.

"என்ன சொல்கிறீர்கள், கோகிலா?"

"உண்மையைத்தான் சொல்கிறேன். கமலா டீச்சர், தெய்வநாயகத்தோட மனைவிதான்."

"அப்படியானால், மாமா ஏன் அந்த அம்மாவைப் பிரிந்து வாழ்கிறார்?"

"ரெண்டு பேருக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. பிரிந்துவிட்டார்கள். இதில், நீங்கள் இவ்வளவு அதிர்ச்சியடைய என்ன இருக்கிறது?"

பிரபஞ்சன்

"இல்லையா? ஒரு தலைவர். பெயர் சொன்னால் எல்லார்க்கும் தெரியும் நிலையில் இருப்பவர். அவர், இப்படி கட்டின பெண்டாட்டியைக் கண் கலங்க விட்டுவிடுவது எந்த வகையில் சரி?"

அவர்கள் சென்னையை அடுத்த ஒரு மணியில் அடைய இருந்தார்கள். கோகிலா வெளியே பார்த்தாள். விடிந்து கொண்டிருந்தது. கரி அடுப்பில் யாரோ தீ மூட்டியது மாதிரி வானம் பொங்கிக் கொண்டிருந்தது. கோகிலா கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்துச் சொன்னாள்.

"நாம் வார்த்தைகளில் வாழ்கிறோம், கிருஷ்ணமூர்த்தி. இந்தக் கண் கலங்க விடுதல், கைவிடுதல், கற்பழித்தல், ஓடிப்போதல், எல்லாம் சாயம் வெளுத்து நைந்து போன வார்த்தைகள் என்பதை நீங்கள் உணர வேண்டும். தெய்வநாயகமும் கமலாவும் கணவன் மனைவியாக இணைந்தவர்கள். ஒரு கட்டத்தில், அந்த உறவை மேலும் தொடர முடியாது என்று அவர்கள் உணர்ந்தார்கள். ஏதோ ஒரு பிணக்கு. சரி, பிரிந்து கொள்வோம் என்று தீர்மானித்து, கௌரவமாகப் பிரிந்து கொண்டார்கள். மனம் ஒப்பவில்லை யென்றால் பிரிவதுதானே மனித



நாகரிகம்? இடையில் நீங்கள் புகுந்து கண்ணீர் விடுவது அவர்களுக்காகவா, உங்களுக்காகவா? அவர்களுக்காக என்றால், அது வீண். நீங்கள் உங்களுக்காக, பெரும்பாலானவர்கள் செய்வது மாதிரி, எதிர் காலத்தில் உங்கள் மனைவி உங்களை விட்டு நீங்கிவிடுவாளோ என்கிற அச்சத்தில், இறந்த காலத்து யார் மனைவிக்கோ வருத்தம் தெரிவிக்கிறீர்கள். இதெல்லாம் வேண்டாமே!''

கிருஷ்ணமூர்த்திக்குச் 'சுரீர்' என்றது. இது என்னவிட்டேத்தியான பேச்சு. அவளை அழவைக்க வேண்டும் போல் தோன்றியது அவனுக்கு. யாருக்கு உள்ளேதான் ஒரு மிருகம் இல்லை? எந்த நாளில்தான் அது விழித்துக்கொண்டு எதிராளியைக் காயப்படுத்துவதில்லை?

''மாமா, கமலா டீச்சர் பிரிவுக்கு நீங்கள்தான் காரணம் என்று ஊரில் பேசிக்கொள்கிறார்கள்!''

ஓர் அஸ்திரம் மாதிரி இந்த வார்த்தைகள் கோகிலாவின் மேல் பாயும் என்று எதிர்பார்த்தான் அவன். ஏமாந்துதான் போனான். அவள் பிரதியாகச் சிரித்தாள்.

''ஊரார் பேசுபவையெல்லாம் வன்மையாக எடுத்துக் கொண்டால் வாழவே முடியாது, கிருஷ்ணமூர்த்தி. அவர்கள் உண்மையைத் தேடுவதில்லை. வதந்தியை ரசிப்பவர்கள். யாரேனும் ஒரு பெண்ணைக் குறித்துக் கிளுகிளுப்புக்காகப் பேச வேண்டும் அவர்களுக்கு. உங்கள் மாமாவும் கமலாவும் பிரிந்தார்கள் என்பதுதான் விஷயம். அந்தப் பிரிவு என்னால் அல்ல. கோகிலா என்கிற ஒருத்தி இல்லையென்றாலும் அவர்கள் பிரி வார்கள். பிரிவுக்குப் பிறகுதான் நான் அவரோடு சேர்ந்தேன்.''

ஏதோ ஒரு பெரிய ஏரியையொட்டிச் சென்று கொண்டு இருந்தது ரயில்.

''இருந்தாலும் கோகிலா, ஏற்கெனவே மணமான ஒருத்தரோடு நீங்கள் இணைந்திருப்பது சரிதானா?''

கோகிலா அவனைப் பார்த்துச் சிரித்தாள். சிங்கமும் பாம்பும் சண்டை போட்டால் எது ஜெயிக்கும் அப்பா என்று கேட்கிற குழந்தையைப் பார்த்து அப்பா சிரிக்கிற வகையான சிரிப்பு அது.

''கிருஷ்ணமூர்த்தி! மனித இயல்பைச் சட்டமும் சம்பிரதாயமும் மாற்றி விடும் என்று நீங்கள் நம்பு



கிறீர்களா? சமூகம், ஓர் ஒழுங்குக்காகச் சில விதிகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறது. அதை நான் விமர்சிக்கவில்லை. எப்போது விதிகள் உருவாகின்றதோ, அப்போதே விதி விலக்குகளும் உருவாகும் தானே? மனித மனத்தின் ரஸாயனத்தை யார்தான் தடுத்து நிறுத்திவிட முடியும்?''

''இருந்தாலும், கமலா டீச்சர் பாவம் இல்லையா?''

கோகிலா தெளிவாகச் சொன்னாள்.

''உலகத்தில் யார்தான் பாவம் இல்லை, கிருஷ்ணமூர்த்தி? கமலாவின் மேல் பரிதாபப்படும் நீங்கள் என் மேல் ஏன் பரிதாபப் படவில்லை? நானும் மனுஷிதானே? எனக்கும் ஒரு கணவர் இருந்தார். அது ஒரு காலம்.....''

கோகிலா, வெளியே பார்த்தாள்.

மரத் தொடர்கள் அவளுடன் ஓடி வந்து கொண்டிருந்தன, அவளின் நினைவுத் தொடரைப் போல. அவள் கண்கள் கலங்கியதை அவன் பார்த்தான். மனித உறவின் மகத்தானதும் மென்மையானதுமான ஓரிடத்தைத் தான் தொட்டுவிட்டதை உணர்ந்தான் கிருஷ்ணமூர்த்தி. தேங்கி, கன்னத்திலும் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி கோகிலா சொன்னாள்.

''எனக்கும் ஒரு கணவர் வாய்த்தார், கிருஷ்ணமூர்த்தி. சரி, இந்தத்துடுப்பு என்னைக்கரையேற்றும்என்றுதான் நானும் நம்பி அவரை ஏற்றுக் கொண்டேன். எனக்குக் கல்யாணம் ஆனபோது எனக்கு என்ன வயசு தெரியுமா? பதினாலு. அவர் ஏதோ கமிஷன் ஏஜெண்ட் என்று அப்பா சொன்னது தெரியும். கொஞ்ச நாட்கள் கழித்துத் தான் தெரிந்தது, அவர் எதுவுமே செய்யாதவர் என்பது, எந்தத் தொழில் செய்யவும் அவர் தகுதியற்றவர் என்பது. நகைகளையெல்லாம் அவிழ்த்துக் கொண்டு போய்க் குடித்துத் தீர்த்தார், தான் ஒன்றுக்கும் உதவாதவன் என்கிற நினைப்புத் தோன்றும் போதெல்லாம், என்னை அவர் அடித்து வதைத்தார். அவரிடம் ஒரு குழந்தைக்கும் தாயானேன். வீட்டு வேலை செய்தேன். பத்துப் பாத்திரம் தேய்த்து, அண்டாத் துணிகளைத் துவைத்துப் போட்டேன். ஒரு டீ. அப்போது அதன் விலை ஒன்றரை அணா. ஒரு கப் டீ கிடைக்காதா என்று பறந்த காலம் எனக்கு இருந்தது கிருஷ்ணமூர்த்தி. திடீரென்று ஒருநாள் அவர் காணாமல் போனார். ஏதோ ஒரு பிழைப்பு என்றுதான் நடிகை ஆனேன். கொஞ்சம் காசும் புகழும் சேர்ந்தது. கணவரும் வந்து சேர்ந்தார். நான் அப்போதும் அவரைப் புறக்கணிக்கவில்லை. ஆதரிக்கவே செய்தேன். குடித்துக் குடித்தே அவர் ஒரு நாள் செத்தார். எங்கள் இல்லற வாழ்வு எத்தனை நாட்கள் என்கிறீர்கள்? இப்போது எனக்கு முப்பத்தாறு. கல்யாண வாழ்க்கை அதிகம் போனால் இரண்டு, இரண்டரை வருஷம். நீங்கள் சொல்லுங்கள், எனக்கு ஒரு துணை வேண்டாமா? உங்கள் மாமா உதவினார். அவ்வளவு தான்...''

''கமலா டீச்சர் மாமாவை விட்டு எதற்குப் பிரிந்தார், தெரியுமா கோகிலா உங்களுக்கு...?''

''அதை எப்படிச் சொல்ல முடியும்? பிரிவு நேர்ந்தமைக்கான காரணத்தை அந்த இருவரைத் தவிர வேறு யார் உணர முடியும்? என்னையும் உங்களையும் போன்ற மூன்றாம் மனிதர்கள் உண்மையை அறிதல் கடினம். குருடர் யானையைப் பார்த்த மாதிரிதான். ரொம்ப நுணுக்கமான விஷயம் அது... நான் கமலா டீச்சரின் வாழ்க்கையைத் தட்டிப் பறித்து விட்டதாகத் தயவு செய்து நினைக்காதீர்கள்...''

ரயில் சென்னையை அடைந்து மூச்சிரைக்க நின்றது.

''**வ**ருடத்தில் பத்து மாதங்கள் பனி விழும், பனியும் கட்டி கட்டியாக விழும் ஓர் ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்தவர், பால் எலுவார். அந்த நாட்டின், மிகப் பெரும் நிறுவனத்தின், மிகப் பெரும் மனிதர் அவர். அவரிடம் ஒழுங்காக, நான் உனக்குச் சொன்னபடி, இங்கிலீஷில் பேசிக் காரியத்தை முடித்துக் கொடுக்க வேண்டியது உன் பொறுப்பு. ஜாக்கிரதை'' என்றார் மாமா.

''ஆகட்டும், மாமா'' என்றான் கிருஷ்ணமூர்த்தி.

''இரண்டு பேர் அவனை அணுகாமல் நீ பார்த்துக் கொள்ள வேண்டும். ஒருத்தன் கலைக்கோவன். பதவியைச் சொல்லி, ஆளை அசத்தி, 'கலாசாரத் தூது' என்ற பெயரில் அயல்நாடு செல்லத் துடிக்கிற ஆள். அவனை ஜாக்கிரதையாக வெட்டிவிடு. இரண்டாவது, இந்த ராகினி சாம்பசிவம். சமூக சேவகி என்கிற பெயரில், வெளிநாட்டுக்காரன் எவன் வந்தாலும், அவன் மேல் உரசி உரசிப் பேசி நிதி கறக்கிற ஜந்து. அவளைத் தூரத்திலேயே வைத்துவிடு.''

''சரி மாமா.''


மாமா இருநூறு ரூபாய்க்கு ஓர் ஏலக்காய் மாலையும், இருபத்தி ஐந்து ரூபாய்க்கு ஒரு ரோஜா மாலையும் வாங்கிக் கொண்டு வந்திருந்தார். பால் எலுவார், விமான நிலையத்திலேயே இந்த மலர் மாலை உபசாரத்தில் மயங்கித்தான் போனான்.

''இந்தியர்கள், விருந்துபசாரத்தில் மிகவும் உயர்ந்தவர்கள்'' என்று எங்கோ புத்தகத்தில் எழுதி வைத்திருந்த பொய்யை, மனசார நம்பிச் சொன்னான் அவன், ஆங்கிலத்தில்.

''தம்பி, இது ஆட்டுக்குப் போடுகிற மாலை. அடுத்தது கத்திதான்'' என்றார் மாமா, தமிழில்.

பால், திரும்பி கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து, ''என்ன?'' என்றான்.

''ஒன்றுமில்லை... நாங்கள் எங்கள் அண்டை வீட்டார்க்கு எப்போதுமே நண்பர்களாக இருக்கவிரும்புபவர்கள் என்று சொல்கிறார் அவர்'' என்றான் கிருஷ்ணமூர்த்தி.



சாவி வேண்டாம்
பொருத்தும் நிலையில் தொல்லை இல்லை
எண்ணெய் வேண்டாம்
தூக்கம் கெடாது
வேளைக்கு நினைவூட்டும்
மணிக்கொரு இன்னிசை
அனைவருக்கும் ஆனந்தம்
இனிமையான சங்கீதம்
எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கிறது
Ajanta®
QUARTZ
நாளைய தொழில்நுட்பம் இன்றே தொடக்கம்
பதிவு அலுவலகம்:
அஜந்தா டிரான்ஸிஸ்டர் க்ளாக்
மேன்யுபாக்சரிங் கம்பெனி
பிருதிவிராஜ் ப்ளாட், த.ப்ப.
எண்: 115, மோர்பி-363 641
தொலைபேசி: 3627, 2280, 2457, 2433
டெலெக்ஸ்: 0168212 ATCM
GRAM: VANITHA
இன்னிசை ஒலிக்கும்
கடிகார தயாரிப்பில்
இந்தியாவில் முன்னோடிகள்
எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கிறது.
KPS/AM/1-89/TAM



''தேர்தலில் தோற்றுப் போனதும் ஏதோ சபதம் எடுத்திருக்கீங்களாமே...?''

''ஆமாண்ணே... எத்தனை வருஷமானாலும் ஜெயிச்சு எம். எல். ஏ. ஆனால் தான் சட்டசபைக்குள் அடியெடுத்து வைப்பேன், அதற்குமுன் நுழைய மாட்டேன்னு சபதமெடுத்திருக்கேன்.''

— சுரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.

பால் தலையசைத்து மாமாவுக்கு நன்றி சொன்னான்.

அரசு சார்பாக, அரசின் விருந்தினராக அவன் வந்திருந்தான் எனினும், மாமா, ஏதோ அவனைத்தம் வீட்டுக்கு வந்த விருந்தினனாகவே கருதி உபசரித்தார். நட்சத்திர ஓட்டலில் 'சூட்' ஒன்று அவனுக்கு ஏற்பாடாகியிருந்தும்,மாமா அவனுக்குவீட்டு இட்லிகளையே காலைப் பலகாரத்துக்கு எடுத்துப் போனார்.

ஹாட் பேக்கில் வைக்கப்பட்டு எடுத்து வந்த அந்த ஆவி பறக்கும் இட்லிகளைத் தான் அறிந்த ஆங்கிலத்தில், 'மல்லிகை இட்லி' என்று விளக்கினார் மாமா. மல்லிகையால் கூட இட்லி செய்ய முடியுமா என்று பதிலுக்குக் கேட்டான் பால். மல்லிகை பயன்படுத்தப்பட்டது வெறும் உவமைக்காகத் தான் என்று கிருஷ்ணமூர்த்தி விளக்க வேண்டியிருந்தது.

பால்,தமிழகத்தில்தங்கியிருந்தசிலவாரங்களில், மாமா மிகமிகச் சாமர்த்தியம் காட்டுவதாகக் கிருஷ்ணமூர்த்திக்குத் தோன்றியது. பாலை முதல்வரைச் சந்திக்க அழைத்துப் போகும் பணியை மாமாவே முன்னின்று ஆற்றினார். முதல்வரின் அறைக்குள் அவர்கள் இருவரையும் அனுப்பி வைத்து விட்டுக் கிருஷ்ணமூர்த்தி காத்திருந்தான். அனைத்துக்கும் அர்த்தம், பாலை அவர்கள் கூட சுவாரஸ்யமாய் இருக்கட்டுமே என்று ராகினி சாம்பசிவத்தையும் சேர்த்துக் கொண்டு மகாபலிபுரத்துக்கு அழைத்துச் சென்ற அன்றுதான் கிருஷ்ணமூர்த்திக்குப் புரிந்தது.

ராகினி,பாலுக்கு ரதங்கள் ஒவ்வொன்றையும் தன் கற்பனைக் கைவண்ணம் சேர்த்து விளக்கிக் கொண்டிருந்தாள். மாமாவும் கிருஷ்ணமூர்த்தியும் ஒரு கல்லின் மேல் அமர்ந்தார்கள்.

''பால் பணியாற்றும் கம்பெனி, தமிழகத்தில் ஒரு பெரிய தொழிற்சாலையைத் தோற்றுவிக்கப் போகிறது.''

''அரசு அனுமதித்து விட்டதா?''

''மத்திய அரசு கொள்கை அளவில் அதை ஒப்புக் கொண்டுவிட்டது. நம் முதல்வரிடம் அதற்கான அனுமதியையும் பெற்றுத் தந்து விட்டேன்.''

''ரொம்ப நல்ல காரியம், மாமா. தொழிற்சாலை அமையப் போவது ரொம்பவும் பின் தங்கிய நம் மாவட்டத்தில் என்பதையும், நம் மாவட்டத்து மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதையும் அறியும் போது ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறது.''

மாமாவின் முகம் பிரகாசமடைந்தது.

''மக்கள் அவ்விதம் எண்ணுவார்கள், அல்லவா? அது, அடுத்த முறை நம் தொகுதியில் தேர்தலில் நிற்கவும், ஜெயிக்கவும் போதும். ஆனால் பணம்? பணமில்லாமல் எப்படி அரசியல் பண்ணுவது? ஒரு கல்லில் இரண்டு மாங்காய். பால் மூலமாக எனக்கு இரண்டு இலாபம். ஒன்று தொழிற்சாலை; அதன் மூலம் உயரப் போகும் என் செல்வாக்கு. இரண்டு எனக்குக் கிடைக்கப் போகும் சுமார் ஐம்பது லட்சம்.''

''ஐம்பது லட்சமா? எப்படி மாமா பணம் வரும்?''

''நீயும் கோகிலாவும் சேர்ந்து வாங்கிக் கொடுத்தீர்களே, சில நூறு ஏக்கர்கள். அத்தனைக்கும் பினாமிகளாக நான் உன்னையும், கோகிலாவையும், இன்னும் இரண்டு பேர்களையும்தானே போட்டிருக்கிறேன். அத்தனை நிலங்களையும் நீங்கள் பாலுக்கு, அவன் சார்ந்த கம்பெனிக்கு விற்கிறீர்கள்.''

''விற்கிறோம். ஆனால் பணம்?''

''பொறு. ஏக்கர் எவ்வளவுக்கு வாங்கினீர்கள்?''

''சுமார் முப்பத்தையாயிரத்திலிருந்து ஐம்பதாயிரம் வரை கொடுத்திருக்கிறோம்.''

''ஆனால், பாலைப் பொறுத்தவரை, அவை பொன் விளையும் பூமி என்றே நாம் குறிப்பிட்டுச் சொல்வோம். ஒரே தாக்கலாக இத்தனை நிலம் தமிழகத்தில், அதுவும் அவன் புறப்படுவதற்குள் எப்படிக் கிடைக்கும்? நாம் அவன் அவசரத்தை, தேவையைப் பயன்படுத்திக் கொள்கிறோம். அவ்வளவுதான். ஏக்கர் இரண்டிலிருந்து, இரண்டரை லட்ச ரூபாய் வரை போகும் என்பது என் கணக்கு. ஆகவே நம் பங்கு ஐம்பது லட்சத்துக்குக் குறையாது.''

''மீதி?''

''அது மேலிடத்துக்கு!''

கிருஷ்ணமூர்த்தி அமைதியாகிவிட்டான்.

அவர்கள் மாலை சென்னை திரும்பி வீடு வந்து சேர்கையில், அவர்களுக்காக ஒரு தகவல் காத்திருந்தது.

முதல்வர் மாமாவையும் கிருஷ்ணமூர்த்தியையும் உடனே சந்திக்க விரும்பிச் செய்தி அனுப்பி இருந்தார்.

கிருஷ்ணமூர்த்தி பரபரப்படைந்தான்.

(தொடரும்)



பிறந்த நாள் இன்று... அரும்பெரும் பரிசு ஒன்றை மீனுவுக்கு அளித்துவிட்டது ஃபேர் அண்ட் லவ்லி.

இந்த நாளுக்காகவே மீனா ஒரு முயற்சி எடுத்திருக்கிறாள். இரு மாத முன்னேற்பாடுகள்— அதில் முக்கியமானது ஃபேர் அண்ட் லவ்லி ஒத்துழைத்த மகிமை. அவள் மேனிமீது வெண்ணிலவைப் பொழிந்துள்ளது இதமாக, இயல்பாக. பரிசுப் பெட்டகத்தை அவளிடம் நீட்டும் ரவி, பால்நிலா முகத்தழகை பருகுகிறான் சக்கரவாகப் பறவை போல். அதை வாங்கும் மீனாவின் இதயம் பாடுகிறது நன்றிக் கீதம்— ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமுக்கு!

மீனாவைப் போலவே நீங்களும், கவனிக்கத் தக்க சிகப்பழகை அடைந்திட முடியும் ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...
ஃபேர் அண்ட் லவ்லி இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா— இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது. ஒன்று: சருமத்தின் அடியாழத்தில் செயல்பட்டு, உடல்



ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்



ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்



கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது— வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை.

மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்க்ரீன் ஆற்றல், உடல்கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சரும படலங்களில் செவ்வையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி— நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகி விடும்.

உபயோக முறை:
கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள் மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்ட பின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி, செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படுமானால் கவலை வேண்டாம், விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும் குழைவு குணமோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி. ஒரே சீராகப் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப் படுகிறது.

உடலார உணருவீர் இம் மாறுதலை...பிறகு காண்பீர் கண்ணார.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு:
திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி அட்வைசர், பி.ஒ. பாக்ஸ் 758, பம்பாய்-400 021.

ஃபேர் அண்ட் லவ்லி
சிகப்பழகு க்ரீம்



கண்காணும் சிகப்பழகை உமதாக்கும்...இயற்கைக்கே உரிய இதமான வழியில்

LINTAS FAL 59 2517 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்



Mrs. BHANDARKAR

நேற்றுதான் ரெஜினு கிட்டேயிருந்து லெட்டர் வந்தது. இந்த வெகேஷனுக்கு பசங்களை அழைத்துக் கொண்டு வரேன்னு எழுதி யிருக்கா.

மகளையும் பேரப்பசங்களையும் ரொம்ப நாள் கழிச்சு பார்க்கப் போறோம்னு ரொம்ப சந்தோஷமா இருந்தாலும் பேரப்பசங்க என்னை படுத்தின பாட்டை நினைச்சா எனக்கு பயமா இருக்கு.

ஆறு வருஷத்துக்கு முன்னால அவங்க அமெரிக்காவில் செட்டில் ஆனதனால பசங்களுக்கு தாய்மொழி கம்ப்ளீட்டா மறந்தே போயிடுச்சு. அவங்க எதுக் கெடுத்தாலும் இங்கிலீஷ்லயே கேட்டு என்னை தொல்லைப்படுத்துவாங்க.

நானும் S.S.L.C. வரை படிச்சிருந் தாலும் இந்த பொடிப்பசங்களுக்கு சமமா என்னால இங்கிலீஷ்ல பேச முடியலே. அவங்க கேக்கர கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாம திண்டாடிப் போயிடுவேன்.

போன வருஷம் வெகேஷன் முடிஞ்சு அவங்க ஊருக்குபோன உடனேயே என்னுடைய இங்கிலீஷ் நாலட்ஜ்ஜை இம்ப்ரூவ் பண்ணிக்கிட்டு அவங்களோட நல்லா இங்கிலீஷ்ல பேசணும்னு தீர்மானிச்சு நிறைய புத்தகங்களை வாங்கிப்படிச்சேன். ஆனா, நான், எதிர் பார்த்த முன்னேற்றம் கிடைக்கல. அப்போதான் மெட்ராஸ்ல இருக்கர விவேகானந்தா கல்வி நிலையத்தைப் பற்றி கேள்விப்பட்டு அவங்க நடத்தர "ஸ்போக்கன் இங்கிலீஷ்" கோர்ஸ்ல சேர்ந்தேன். அவங்க அனுப்பர பாடங்களை வீட்ல இருந்தபடியே படிச்சு அவங்க சொன்ன மாதிரி ப்ராக்டிஸ் பண்ணி பார்த்தேன். எனக்கே இப்ப ஒரு ஸெல்ப் கான்பிடன்ஸ் ஏற்பட்டிருக்கு பயப்படாம . இங்கிலீஷ்ல பேச முடியும்ங்கர நம்பிக்கை ஏற்பட்டிருக்கு.

இந்த முறை என் பேரப்பசங்க இன்னும் கொஞ்சம் சீக்கிரமா வர மாட்டாங்களான்னு ரொம்ப ஆவலுடன் எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன்.

ஆங்கிலத்தில் பேச விரும்பும் அனைவருக்கும் மிகச்சிறந்த முறையில் தபால் மூலம் விவேகானந்தா கல்வி நிலையத்தினர் பயிற்சியளிக்கிறார்கள்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு" பெண்களுக்கு தனி வகுப்புகள் நடத்தப் படுகிறது.

இப்பயிற்சியில் சேர்ந்து பயன் பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

விவேகானந்தா கல்வி நிலையம்

P.B. No. 4986

9, மேட்லி ரோடு, தி.நகர்,

சென்னை-600 017

— NAGA

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 28
பாதாளப் பாதை

நாற் புறமும் நன்றாகப் பார்த்துவிட்டு ரவிதாஸன் திறந்திருந்த நிலவறைக் கதவைச் சுட்டிக் காட்டிச் சோமன் சாம்பவனைஅதன் உள்ளே போகச் சொன்னான்.

"முதலில் இருட்டில் கண் தெரியாது. அதற்காகக் கதவின் அருகிலேயே நின்று விடாதே! உள்ளே கொஞ்சம் தூரமாகவே போய் நின்று கொள்!" என்றான்.

சோமன் சாம்பவன் நிலவறைக்குள் புகுந்ததும் அவனை இருள் விழுங்கி விட்டது போலிருந்தது.

பிறகு, ரவிதாஸன் நடைபாதை வழியாகத் திரும்பி நந்தினிதேவியின் வஸந்த மண்டபம் வரையில் சென்றான். அங்கிருந்து பழுவேட்டரையரின் அரண்மனையைப் பார்த்துக் கொண்டிருந்தான். தாதிப் பெண்ணைத் தவிர வேறு யாராவது வந்துவிட்டால் அவனும் நிலவறைக்குள் அவசரமாகச் சென்று கதவைச் சாத்திக் கொள்வது அவசியமாயிருக்கலாம் அல்லவா?

ரவிதாஸன் அவ்விதம் வஸந்த மண்டபத்தில் நின்று கொண்டு அரண்மனை வாசலையே பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், மந்தாகினி சிறிதும் சத்தமின்றி நடந்து வந்து திறந்திருந்த நிலவறைக்குள் பிரவேசித்தாள். அடர்ந்த காடுகளில் நள்ளிரவில் எத்தனையோ நாள் இருந்து பழக்கப்பட்டவளுக்கு அந்த நிலவறையின் இருட்டு ஒரு பிரமாதமா என்ன? சில வினாடி நேரத்தில் கண் தெரிய ஆரம்பித்தது. ரவிதாஸனுடன் வந்தவன் சற்றுத் தூரத்தில் ஒரு தூணுடன் முட்டிக் கொண்டு தவித்ததைப் பார்த்தாள். இவள் அதற்கு நேர்மாறான திசையில் சென்றாள். அங்கே ஒரு படிக்கட்டு காணப்பட்டது. நிலவறைப் பாதை அங்கே கீழே இறங்கிச் சென்றது. படிகளின் வழியாக இறங்கிக் கீழே நின்று கொண்டாள்.

சோமன் சாம்பவனுக்கு ஏதோ சிறிது சத்தம் கேட்டிருக்க வேண்டும். "யார் அது? யார் அது?" என்று குரல் கொடுத்தான். அது திறந்திருந்தவாசல் வழியாகப் போய் ரவிதாஸனுடைய காதில் இலேசாக விழுந்தது.

அதே சமயத்தில் அரண்மனை வாசல் வழியாகத் தாதிப் பெண் கையில் தீவர்த்தியுடன் வந்து கொண்டிருந்ததை ரவிதாஸன் பார்த்தான். தான் முன்னால் சென்று சோமன் சாம்பவனுக்கு எச்சரிக்கை செய்வதற்

அமரர் கல்கி

காக விரைந்து நடந்தான். நிலவறை வாசற்படிக்குள் புகுந்ததும், "சாம்பவா! எங்கே இருக்கிறாய்? என்னைக் கூப்பிட்டாயா?" என்றான்.

"ஆமாம்; கூப்பிட்டேன்!"

"அதற்குள்ளே அவசரமா? உன் குரல் வெளியிலே யாருக்காவது கேட்டால் என்ன செய்கிறது? உன்னை இங்கே இப்படியே விட்டுவிட்டுப் போய் விடுவேன் என்று நினைத்தாயா?"

"இல்லை; இல்லை! ஒரு விஷயம் கேட்பதற்காகக் கூப்பிட்டேன்!" என்று சொல்லிக்கொண்டே சோமன் சாம்பவன் ரவிதாஸனை அணுகி வந்தான்.

இச்சமயத்தில் நிலவறையின் வாசலில் பிரகாசமான வெளிச்சம் தெரிந்தது. "ஓகோ! அந்தப் பெண் தீவர்த்தியுடன் வந்து விட்டாள். உன்னைப் பார்த்து விடப் போகிறாள். போ! போ! தூரமாகச் சென்று தூண் மறைவில் நில்! சீக்கிரம்!" என்றான் ரவிதாஸன்.

சோமன் சாம்பவன் அவசரமாகப் பின் வாங்கிச் சென்றான்.

அடுத்த வினாடி நிலவறையின் வாசலில் தாதிப் பெண் கையில் தீவர்த்தியுடன் வந்து நின்றாள். "மந்திரவாதி! ம ந் தி ர வா தி! எங்கே போனாய்?" என்றாள்.

"எங்கேயும் போகவில்லை. உனக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன்" என்று கூறிக்கொண்டே ரவிதாஸன் அவளை அணுகித் தீவர்த்தியைக் கையில் வாங்கிக் கொண்டான்.

"பெண்ணே! வெளியில் கதவைப் பூட்டிக் கொள். இன்னும் ஒரு நாழிகைக் கெல்லாம் சாவியுடன் திரும்பி வா! கதவைத் தட்டிப் பார்! நான் குரல் கொடுத்தால் திறந்து விடு! ஒருவரும் இல்லாத சமயமாகப் பார்த்துத் திற!" என்றான் ரவிதாஸன்.

"ஆகட்டும், மந்திரவாதி! ஆனாலும் உனக்கு எச்சரிக்கை செய்கிறேன். சின்னப் பழுவேட்டரையருக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. நீ அகப்பட்டுக் கொண்டால் என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே!" என்று கேட்டுக் கொண்டாள் தாதிப் பெண்.

"பெண்ணே! வீணாகக் கலவரப் படாதே! நான்தான் சொன்னேனே! காலாந்தக கண்டனுக்கே இறுதிக் காலம் நெருங்கி விட்டது!"

"என்னை ஏன் மறுபடி வந்து கதவைத் திறக்கச் சொல்லுகிறாய்? நிலவறையிலிருந்து வெளியில் போவதற்குத்தான் வேறு வழி இருக்கிறதே!"

"அந்தவழி இன்றைக்கு உபயோகப் படாது. வெட்டாற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. நீ போ! சரியாக ஒரு நாழிகைக்கெல்லாம் திரும்பி விடு!"

தாதிப் பெண் வெளியில் சென்று கதவைச் சாத்தினாள். அவள் வெளியில் கதவைப் பூட்டிய அதே சமயத்தில் ரவிதாஸன் உட்புறத்தில் தாளிட்டான். பின்னர், கையில் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு சோமன் சாம்பவன் இருக்குமிடம் நோக்கி விரைந்துவந்தான்.

"சாம்பவா! என்னை என்னமோ கேட்க வேண்டுமென்று சொன்னாயே? இப்போது கேள்" என்றான்.

"நீ இதற்கு முன் ஒரு தடவை இங்கு வந்தாயா?" என்று சோமன் சாம்பவன் கேட்டான்.

"ஒரு தடவை என்ன? பல தடவை வந்திருக்கிறேன். நாம் சேர்த்து வைத்திருக்கும் பொருளெல்லாம் வேறு எங்கிருந்து வந்ததென்று நினைத்தாய்?" என்றான் ரவிதாஸன்.

"நான் அதைக் கேட்கவில்லை. நீ சற்று முன் என்னை இங்கு விட்டு விட்டுவெளியில்போனாய் அல்லவா? மறுபடியும்....."

"இப்போதுதான் வந்திருக்கிறேனே?"

"நடுவில் ஒரு தடவை வந்தாயா?"

"நடுவிலும் வரவில்லை; ஓரத்திலும் வரவில்லை. எதற்காகக் கேட்கிறாய்?"

"நீ போன சிறிது நேரத்துக்கெல்லாம் வாசற் படியின் வெளிச்சம் சட்டென்று மறைந்தது. நான் தூணில் முட்டிக் கொண்டேன்."

''ஒரு வேளை கதவு தானாகச் சாத்தித் திறந்து கொண்டிருக்கும்.''

''ஏதோ ஓர் உருவம் உள்ளே வந்தது போலத் தெரிந்தது, காலடிச் சத்தமும் நன்றாகக் கேட்டது.''

''உன்னுடைய சித்தப் பிரமையாயிருக்கும். இந்த நிலவறையே அப்படித்தான். இருட்டிலே நிழல் போலத் தெரியும். திடீரென்று வெளிச்சம் தோன்றி மறையும். விசித்திரமான ஓசைகள் எல்லாம் கேட்கும். இங்கு நுழைந்தவர்கள் சிலர் பயப் பிராந்தியினாலேயே செத்துப் போயிருக்கிறார்கள். அவர்களுடைய எலும்புக் கூடுகள் அங்கங்கே கிடக்கின்றன. பழுவேட்டரையன் வேண்டுமென்றே அந்த எலும்புக் கூடுகளை எடுக்காமல் விட்டு வைத்திருக்கிறான். ஒருவரும் அறியாமல் இந்த நிலவறைக்குள் நுழைகிறவர்கள் எலும்புக்கூடுகளைப் பார்த்துப் பயந்து சாகட்டும் என்று...'

''அப்படி யாருக்கும் தெரியாமல் இந்த நிலவறையில் பிரவேசிக்க முடியுமா என்ன?''

''சாதாரணமாக யாரும் நுழைய முடியாது. என்னைத் தவிர அப்படி யாரும் நுழைந்திருப்பார்கள் என்று தோன்ற வில்லை. நானும் இளைய ராணி அல்லது அவளுடைய தோழியின் உதவியினால்தான் இங்கு வந்திருக்கிறேன்.......''

''பின்னே மனிதர்களின் எலும்புக் கூடுகளைப் பற்றிச் சொன்னாயே?''

''அதுவா? பழுவேட்டரையன் யாரையாவது பயங்கரமாகத் தண்டிக்க விரும்பினால், நிலவறைக் கதவை இலேசாகத்திறந்து வைத்து விடுவான். பொக்கிஷ நிலவறையைப் பற்றிக் கேட்டிருப்பவர்கள் பொருளாசையினால் இதில் நுழைவார்கள். அப்புறம் இதை விட்டு வெளியில் போவதில்லை.''

''நீ ஒருவனைத் தவிர இங்கு வந்தவன் யாரும் வெளியில் போனதில்லை என்றா சொல்லுகிறாய்?''

''முன்னேயெல்லாம் அப்படித்தான். இப்போது இரண்டு பேரைப் பற்றி எனக்குச் சந்தேகமாயிருக்கிறது........''

''யாரைச் சொல்லுகிறாய் என்று எனக்குத் தெரியும். வல்லவரையனையும் கந்தமாறனையும் சொல்லுகிறாய்.''

''ஆமாம்.''

''அவர்களை நாம் இன்னும் உயிரோடு விட்டு வைத்திருக்கிறோமே?"

''எத்தனை தடவை உனக்குச் சொல்வது? வல்லவரையனை ஒரு முக்கியமான காரியத்துக்காகத்தான் இளைய ராணி விட்டு வைத்திருக்கிறாள். சுந்தர சோழனுடைய குலம் நசிக்கும்போது வந்தியத் தேவனும் சாவான். அதற்குக் காலம் நெருங்கி விட்டது. வா! வா! இந்த நிலவறையிலுள்ள சுரங்கப் பாதைகளையெல்லாம் உனக்குக் காட்டுகிறேன்...... ஒரு காரியத்தில் மட்டும் ஜாக்கிரதையாயிரு! இங்கே நவரத்தினக் குவியல் வைத்திருக்கும் மண்டபம் ஒன்றிருக்கிறது. அதில் நூறு வருஷங்களாகச் சோழர்கள் சேர்த்து வைத்த நவரத்தினங்களைக் குப்பல் குப்பலாகப் போட்டுவைத்திருக்கிறார்கள். அங்கே போய் மட்டும் அகப்பட்டுக் கொள்ளாதே. அந்த நவரத்தினங்களின் மோகத்தில் மனத்தைப் பறிகொடுத்து விட்டால், நீ வந்த காரியத்தையே மறந்து போனாலும் போய் விடுவாய்!"

''ரவிதாஸா! யாரைப் பார்த்து இந்த வார்த்தை சொல்கிறாய்? உன்னைப் போல் நானும் வீர பாண்டியனுடைய தலையற்ற உடலின் மீது சத்தியம் செய்து கொடுத்தவன் அல்லவா?''

''யார் இல்லை என்றார்கள்? அந்த நவரத்தினக் குவியல்களைப் பார்த்த போது என் மனசுகூடச் சிறிது சலித்துப் போய் விட்டது; அதனாலேதான் எச்சரிக்கை செய்தேன். இருக்கட்டும், வா, போகலாம். முதலில் சோழன் அரண்மனைக்குப் போகும் வழியை உனக்குக் காட்டுகிறேன். அதைக் காட்டிவிட்டு நான் போனபிறகு நீயே சாவகாசமாக இந்த நிலவறை முழுவதையும் சுற்றிப் பார்த்துக்கொள். பின்னொரு காலத்தில் உபயோகமாயிருக்கலாம்.''

ரவிதாஸன் தீவர்த்தியைப் பிடித்துக் கொண்டு மேலே நடந்தான். சோமன் சாம்பவன் பக்கத்திலேயே சென்றான்.

முன்னொரு சமயம் பெரிய பழுவேட்டரையரும் இளைய ராணி நந்தினியும் சென்ற அதே பாதையில் அவர்கள் சென்றார்கள்.

தீவர்த்தியின் புகை சூழ்ந்த வெளிச்சத்தில் நிலவறையின் தூண்களும் அவற்றின் நிழல்களும் கரிய பெரிய பூதங்களைப் போல் தோன்றின. இருளில் வாழும் வௌவால்கள் பயங்கரமான குட்டிப் பேய்களின் தோற்றம் கொண்டிருந்தன. ஆங்காங்கு பிரம்மாண்டமான சிலந்திக் கூடுகளும் அவற்றின் மத்தியில் ராட்சஸ சிலந்திப் பூச்சிகளும் காணப்பட்டன. தரையிலோ விசித்திர வடிவங்கள் கொண்ட ஜீவராசிகள் சில அதிவேகமாகவும் சில மிகவும் மெதுவாகவும் ஊர்ந்து சென்றன. ரவிதாஸன் கூறியது போலவே இனந் தெரியாத பலவிதச் சத்தங்கள் கேட்டன. வெளியே இன்னமும் அடித்துக் கொண்டிருந்த புயலின் சத்தமும் எப்படியோ எங்கிருந்தோ அந்தச் சுரங்க நிலவறைக்குள் வந்து எதிரொலி செய்தது.

சோமன் சாம்பவன் திடீரென்று திடுக்கிட்டு நின்று, "ரவிதாஸா! ஏதோ காலடிச் சத்தம் போல் கேட்கவில்லை?" என்று கேட்டான்.

"கேட்காமல் என்ன? நம்முடைய காலடிச் சத்தம் கேட்கத்தான் கேட்கிறது. வீணாக மிரண்டு விடாதே! இப்போது நானும் இருக்கும்போதே இப்படி பயப்பட்டாயானால், இங்கே இரண்டு மூன்று தினங்கள் எப்படியிருப்பாய்?" என்றான் ரவிதாஸன்.

"நான் ஒன்றும் பயப்படவில்லை. நீ போன பிறகு வீண் பிராந்திக்கு உள்ளாவதைக் காட்டிலும் நீ இருக்கும்போதே கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த நிலவறைக்குள் புகுந்தவர்கள் சிலர் இங்கேயே செத்துப் போனார்கள் என்று சொன்னாயல்லவா?" என்றான் சோமன் சாம்பவன்.

"ஆமாம்; அவர்களுடைய ஆவிகள் இங்கே உலாவிக் கொண்டுதானிருக்கும். அதனால் என்ன? பேய்கள் தான் நம்மைக் கண்டு பயந்து அலறுமே? அந்தச் சிறு பையன் வந்தியத்தேவன் இந்த நிலவறையில் பயப்படாமல் இருந்து எப்படியோ தப்பி வெளியேறியிருக்கிறான். எத்தனையோ பேய் பிசாசுகளைப் பார்த்த நானும் நீயும் ஏன் பயப்பட வேண்டும்?"

"பேயும் பிசாசும் இருக்கட்டும். அதற்கெல்லாம் யார் பயப்படுகிறார்கள்? வேறு பிராணிகள், விஷ ஜந்துக்கள் இங்கே இருக்கலாம் அல்லவா?"

"பாம்புக்கும் தேளுக்கும் பயப்படப் போகிறாயா? நம்மைக் கண்டாலே அவைகள் வளைகளில் போய் ஒளிந்து கொள்ளும்......"

"இருந்தாலும் இரண்டு மூன்று நாட்கள் இங்கேயே இருக்கிறது என்றால் யோசனையாகத்தான் இருக்கிறது! ரவிதாஸா! அதற்கு முன்னாலேயே ஒருவேளை சந்தர்ப்பம் கிடைத்தால்.........?"

"வேண்டாம், வேண்டாம்! அந்தத் தவறு மட்டும் செய்து விடாதே! இன்றைக்குச் செவ்வாய்க் கிழமை. புதன் வியாழன் இரண்டு நாளும் நீ காத்திருக்க வேண்டும். சுந்தர சோழன் தனிமையாக இருக்கும் நேரம் எது என்பதைப் பார்த்து வைத்துக் கொள். சுந்தர சோழனுடைய பட்ட மகிஷி எப்போதும் அவர் அருகிலேயே இருப்பாள். வெள்ளிக் கிழமை இரவு நிச்சயமாகத் துர்க்கா பரமேசுவரியின் கோயிலுக்குப் போவாள். அன்று இரவுதான் நீயும் உன் காரியத்தை முடிக்க வேண்டும். சுந்தர சோழனுடைய குலம் நிர்மூலமாகும் நாள் வெள்ளிக் கிழமைதான். முன் பின்னாக ஏதாவது நடந்தால் காரியம் கெட்டுப் போகலாம்!" என்றான் ரவிதாஸன்.

இப்படிப் பேசிக் கொண்டே இருவரும் விரைவாக நடந்தார்கள். சோமன் சாம்பவன் மட்டும் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே போனான். ஆயினும் அவர்கள் அறியாமல் தூண்களின் மறைவிலே ஒளிந்

தும் சிறிதும் சத்தமின்றிப் பாய்ந்தும் அவர்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஊமை ராணி அவர்கள் கண்ணில் படவில்லை.

நிலவறைச் சுரங்கத்தின் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கெதிரே நெடுஞ் சுவர் நின்றது. அதில் எங்கும் வாசல் இருப்பதாகவே தெரியவில்லை. ஆனால் சுவரின் உச்சியில் ஒரு சிறுபலகணி வழியாகக் கொஞ்சம் வெளிச்சம் வந்தது.

ரவிதாஸன் தீவர்த்தியைச் சாம்பவன் கையில் கொடுத்து விட்டு அந்தச் செங்குத்தான சுவரில் ஆங்காங்கு நீட்டிக் கொண்டிருந்த முண்டு முரடுகளைப் பிடித்துக் கொண்டு ஏறினான். பலகணி வழியாகச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் கீழே சர சர வென்று இறங்கினான்.

''அந்தப் பலகணி வழியாக வெளியில் குதிக்க வேண்டுமா? அதுதான் வழியா?'' என்று சாம்பவன் கேட்டான்.

''இல்லை; இல்லை. அந்தப் பலகணி வழியாக, எலிதான் நுழைந்து செல்லலாம். ஆனால் அது வழியாகப் பார்த்தால் சோழன் அரண்மனை தெரியும். அந்த அரண்மனையிலும் முக்கியமான இடம் தெரியும்'' என்றான் ரவிதாஸன்.

''சுந்தர சோழன் படுத்திருக்கும் இடமா?'' என்றான் சாம்பவன்.

''ஆமாம், அங்கே ஜன நடமாட்டம் எப்படியிருக்கிறது என்பதை இந்தப் பலகணியின் மூலமாகப் பார்த்து நீ தெரிந்து கொள்ளலாம். இப்போது என்னுடன் வா! நான் செய்கிறதை நன்றாய்ப் பார்த்துக் கொள்!''

இவ்விதம் கூறிவிட்டு ரவிதாஸன் கீழே குனிந்தான். உற்றுப் பார்த்து வட்ட வடிவமான ஒரு கல்லின் மீது காலை வைத்து அமுக்கிக் கொண்டு இரண்டு கையினாலும் ஒரு சதுர வடிவமான கல்லைப் பிடித்துத் தள்ளினான். கீழே ஒரு வழி காணப்பட்டது.

''கடவுளே! நிலவறைக்குள்ளே ஒரு பாதாளப் பாதையா?'' என்று வியந்தான் சோமன் சாம்பவன்.


''ஆமாம்; இந்தப் பாதை இருப்பது பெரிய பழுவேட்டரையனையும் இளைய ராணியையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. மூன்றாவதாக எனக்குத் தெரியும்; இப்போது உனக்கும் தெரியும்! பாதையைத் திறப்பது எப்படி என்று தெரிந்து கொண்டாய் அல்லவா!''

இருவரும் அப்பாதையில் இறங்கிச் சென்றார்கள். தீவர்த்தியின் வெளிச்சம் சிறிது நேரத்திற்கெல்லாம் மறைந்தது.

ஊமை ராணி தான் மறைந்து நின்ற இடத்திலிருந்து ஒரே பாய்ச்சலாக அங்கு வந்தாள். திறந்திருந்த வழியை உற்றுப் பார்த்தாள். அதில் இறங்குவதற்கு ஓர் அடி வைத்தாள். பிறகு புனராலோசனை செய்தவளாய்ச் சட்டென்று காலை வெளியில் எடுத்தாள்.

சிறிது நேரம் யோசனை செய்து கொண்டிருந்து விட்டு, முன்னம் ரவிதாஸன் சுவரின்மீது ஏறிய இடத்தை நோக்கினாள். அங்கே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று அவன் ஏறியது போலவே தானும் சுவர் மீது ஏறினாள். பலகணியை அடைந்ததும் அதில் ஏறி உட்கார்ந்து கொண்டு அப்பால் பார்த்தாள். சுவரை ஒட்டினாற் போல் தோட்டமும் அதற்கப்பால் அழகிய மாடமாளிகையும் தென்பட்டன. அந்த மாளிகையைப் பார்த்ததும் அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. அதற்குள்ளே தனக்கு உயிரினும் இனியவர்கள் இருக்கிறார்கள் என்பதை அவள் உள்ளுணர்ச்சி கூறியது. இரகசிய வழியாகப் போகிறவர்கள் தனக்குப் பிரியமானவர்களுக்குத் தீங்கு செய்யும் நோக்கங் கொண்டவர்கள் என்பதையும் உணர்ந்தாள். அவர்களுடைய தீய நோக்கத்தைத் தடுக்கும் ஆற்றலைத் தனக்குக் கொடுத்து அருள வேண்டுமென்று அவள் அந்தராத்மாவில் குடி கொண்டிருந்த தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

கீழே இறங்கிவிடலாமா என்று அவள் எண்ணிய சமயத்தில், சற்றுத் தூரத்தில் தெரிந்த மாளிகையின் மேன்





மாடத்தில் ஓர் அதிசயக் காட்சி தெரிந்தது. சற்று முன் அந்த இருளடர்ந்த நிலவறையிலிருந்த ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் அதில் ஏறித் தூண்களின் மறைவில் ஒளிந்து நின்றார்கள். அரண்மனையின் உட் பக்கமாக உற்று உற்றுப் பார்த்தார்கள். அப்போது பகல் நேரமாதலால் அந்த மாளிகையின் மேன்மாடம் நன்றாய்த் தெரிந்தது. ரவிதாஸன் கையில் தீவர்த்தி இல்லை. சாம்பவன் கையில் வேல் மட்டும் இருந்தது. ரவிதாஸன் அந்த வேலை வாங்கிக் கொண்டு மாளிகையின் உட்புறத்தை நோக்கி அதை எறிவதற்காகக் குறி பார்த்தான். ஊமை ராணியின் நெஞ்சு அச்சமயம் நின்று விட்டது போலிருந்தது. நல்லவேளையாக,ரவிதாஸன்வேலை எறிய வில்லை. எறிவது போல் பாவனை செய்து விட்டுச் சோமன் சாம்பவனிடம் திரும்பக் கொடுத்து விட்டான். மறு கணம் அவர்கள் இருவரும் அங்கிருந்து மறைந்து விட்டார்கள்.

ஊமை ராணியும் பலகணியிலிருந்து சுவர் வழியாகக் கீழே இறங்கினாள். சுரங்கப் பாதை தென்பட்ட இடத்தையே பார்த்துக் கொண்டு மறைந்து நின்றாள். இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தப் பாதையில் மறுபடி தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. இருவரும் வெளியில் வந்தார்கள். சுரங்கப் பாதையை மூடினார்கள்.

''இதைத் திறக்கும் வழியை நன்றாய்த் தெரிந்து கொண்டாயல்லவா?'' என்று ரவிதாஸன் கேட்டான்.

''தெரிந்து கொண்டேன். இனி உனக்குக் கவலை வேண்டாம். ஒப்புக் கொண்ட காரியத்தை நிச்சயமாகச் செய்து முடிப்பேன்! சுந்தர சோழனுடைய வாழ்க்கை வெள்ளிக் கிழமையோடு முடிவடையும். இம் மாதிரியே நீங்களும் உங்கள் காரியத்தைச் செய்

யுங்கள்!'' என்றான் சாம்பவன்.

''இளைய ராணி கரிகாலனைப் பார்த்துக் கொள்வாள். அதைப் பற்றிக் கவலையில்லை. அந்தக் குட்டிப் புலி கடலிலிருந்து தப்பி வந்து நாகைப்பட்டினத்தில் இருப்பதாகக் காண்கிறது. ஆனால் இந்தத் தடவை அவன் தப்ப முடியாது. அவனைக் காப்பாற்றி வந்த இரண்டு பெண் பேய்களும் இப்போது இத்தஞ்சையில் இருக்கின்றன. ஓடக்காரப் பெண்ணையும் ஊமைச்சியையும் கூட்டத்தில் பார்த்தேன். அந்த வீர வைஷ்ணவத் துரோகிகூட இங்கேதான் இருக்கிறான். ஆகையால் குட்டிப் புலியும் இனித் தப்ப முடியாது. நாகைப்பட்டினத்துக்குக் கிரமவித்தனை அனுப்பப் போகிறேன். சுந்தர சோழனுடைய குலம் இந்த வெள்ளிக் கிழமை நசித்து விடும்....''

''அப்புறம் மதுராந்தகத்தேவன் இருப்பானே?''

''அவன் இருந்தால் இருக்கட்டும். அப்படிப் பட்ட ஒரு பேதை இன்னும் சில காலத்துக்குச் சோழ நாட்டுச் சிங்காதனத்தில் இருந்து வருவது தான் நல்லது. பாண்டிய சக்கரவர்த்திக்கும் வயது வர வேண்டும் அல்லவா?''

இவ்வாறு பேசிக் கொண்டே ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் வந்த வழியோடு விரைந்து சென்றார்கள்.

அத்தியாயம் 29

இராஜ தரிசனம்

அவர்கள் மறைந்த பிறகு ஊமை ராணி சுரங்கப் பாதை தென்பட்ட இடத்துக்கு வந்தாள். உற்று உற்றுப் பார்த்துப் பாதையைத் திறப்பதற்கு முயன்றாள். முடியவில்லை. ரவிதாஸன் அப்பாதையைத் திறந்த போது அவள் தூரத்தில் நின்றபடியால் திறக்கும் வழியை அவள் கவனித்துப் பார்த்துக் கொள்ள முடியவில்லை.

இரண்டு பேரில் ஒருவனாவது அங்கே கட்டாயம் திரும்பி வருவான் என்று அவள் மனத்தில் நிச்சயமாகப் பட்டிருந்தது. ஆகையால், அவ்விடத்திலேயே காத்திருக்கத் தீர்மானித்தாள்.

அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. ரவிதாஸனை வெளியில் அனுப்பி விட்டுச் சோமன் சாம்பவன் அங்கே திரும்பி வந்தான். அவன் கையில் தீவர்த்தி இருந்தது. ஆனால் முன்னைக் காட்டிலும் மங்கலாக எரிந்தது. ரவிதாஸனிடம் அவன் எவ்வளவோ தைரியமாகத்தான் பேசினான். ஆயினும் அவன் மனத்தில் பீதி போகவில்லையென்பது சுற்றுமுற்றும் மிரண்டு பார்த்துக் கொண்டு வந்ததிலிருந்து தெரிந்தது.

சுரங்கப் பாதை திறந்த இடத்தின் அருகில் வந்து அவன் பீதியுடன் உட்கார்ந்து கொண்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் தீவர்த்தி அணைந்து விட்டது.

பிறகு அவன் சுவரின் உச்சியின் மீதிருந்த பலகணியை அடிக்கடி அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அதன் வழியாக உள்ளே வந்த வெளிச்சம் சிறிது சிறிதாக மங்கி



மறைந்து கொண்டிருந்தது.

நன்றாக வெளிச்சம் மங்கிச் சூரியன் அஸ்தமித்து விட்டது என்று அறிந்த பிறகு அவன் சுரங்கப் பாதையை மறுபடியும் திறக்கத் தொடங்கினான். இப்போது மந்தாகினி அதன் சமீபமாக வந்து நின்று கொண்டாள்.

பாதை திறந்தது. சோமன் சாம்பவன் அதனுள் இறங்கப் போனான்.

அப்போது அந்தநிலவறையில், அவனுக்கு வெகு சமீபத்தில், 'கிறீச்' என்ற நீடித்த ஓலக் குரல் ஒன்று கேட்டது. சோமன்சாம்பவன் தன் வாழ்நாளில் எத்தனையோ பயங்கரங்களைப் பார்த்தவன்தான். ஆயினும் அந்த மாதிரி அமானுஷிகமான ஒரு சத்தத்தை அவன் கேட்டதில்லை. பேய் என்பதாக ஒன்று இருந்து அதற்குக் குரலும் இருந்தால், அது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. முதல் தடவை அக்குரல் கேட்டதும் சாம்பவன் தயங்கி நின்றான். அதன் எதிரொலி நிற்கும் வரையில் காத்திருந்தான். இரண்டாந் தடவை அந்த ஓலக் குரலைக் கேட்டதும் அவன் உடம்பின் ரோமமெல்லாம் குத்திட்டு நிற்கத் தொடங்கியது. மூன்றாந் தடவை இன்னும் சமீபத்தில் கேட்ட பிறகு அவனுடைய உறுதி குலைந்து விட்டது. அந்த இருளடர்ந்த நிலவறையில் வழி துறை கவனியாமல் குருட்டாம் போக்காக ஓடத் தொடங்கினான்.

அவன் மறைந்ததும் ஊமை ராணி அந்தப் பாதையில் இறங்கினாள். சில படிகள் இறங்கிய பிறகு சம தரையாக இருந்தது. அதில் விடுவிடு என்று நடந்து போனாள். சோமன் சாம்பவன் அவள் இறங்குவதைப் பார்த்திருந்து திரும்பி வந்தாலும் அவளைப் பிடித்திருக்க முடியாது. அவ்வளவு விரைவாக நடந்தாள். நரகத்துக்குப் போகும் தொலைவில்லாத இருண்ட வழியைப் போல் தோன்றியது. ஆயினும் அதற்கும் ஒரு முடிவு இருந்தது. செங்குத்தான சுவரில் முடிந்த இடத்தில் மேலே இடைவெளி சிறிது தெரிந்தது. சில படிகளும் கைக்குத் தென்பட்டன. அவற்றின் வழியாக ஏறியபோது தலையில் திடீரென்று முட்டியது. பாதாளப் பாதையின் படிகளுக்கும் மேலே தலை முட்டிய இடத்துக்கும் நடுவில் சிறிய சிறிய இடைவெளிகள் காணப்பட்டன. அவற்றுள் ஒன்றில் நுழைந்து வெளியில் வந்தாள். சுற்றிலும் பெரிய பெரிய பூத வடிவங்கள் தென்பட்டன. ஈழத் தீவில் பிரம்மாண்டமான சிலை வடிவங்களைப் பார்த்தவளான படியால் அந்தக் காட்சி அவளுக்குத் திகைப்பை உண்டு பண்ணவில்லை. தான் வெளிவந்த பாதை எங்கே முடிகிறது என்பதை நன்றாய்க் கவனித்துக் கொண்டாள். பத்துத் தலை இராவணன் தன் இருபது கைகளினாலும் கைலயங்கிரியைப் பெயர்த்து எடுத்துக்கொண்டிருந்தான். மலைக்கு மேலே சிவனும் பார்வதியும் வீற்றிருந்தார்கள். இராவணன் மலையைத் தூக்கிய இடத்தில் கீழே பள்ளமாயிருந்தது. மேலே தூக்கி நிறுத்திய மலையை அவனுடைய இருபது கைகளும் தாங்கிக் கொண்டிருந்தன. அவற்றில் இரண்டு கைகளுக்கு மத்தியில் இருந்த இடைவெளி வழியாக அந்தச் சிற்ப மண்டபத்துக்குள் தான் பிரவேசித்திருப்பதைத் தெரிந்து கொண்டாள். கைலையங்கிரிக்கு அடியில் அப்படி ஒரு பாதை இருக்கிறதென்பது சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு ஒரு நாளும் தெரியாது. அதன் அடியில் இறங்கிப் பார்க்கலாம் என்ற எண்ணமும் யாருக்கும் தோன்றாது. சமயத்தில் ஒளிந்து கொள்ளுவதற்குக் கூட அது சரியான மறைவிடந்தான்.

சில மணி நேரம் அந்தச் சிற்பச் சுரங்கப் பாதையின் அதிசயத்தைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மந்தாகினி அச்சிற்ப மண்டபத்தைச் சுற்றினாள். வெளிச்சம் மிகக் குறைவாயிருந்த போதிலும் இரவில் பார்த்துப் பழக்கமுற்ற அவளுடைய கூரிய கண்களுக்கு எல்லாம் நன்றாய்த் தெரிந்தன.

ஓரிடத்தில் சோழ குலத்து முன்னோர்களில் ஒருவரான சிபிச் சக்கரவர்த்தி புறாவின் உயிரைக் காக்கத் தம் உடலின் சதைகளை அறுத்துக் கொடுக்கும் காட்சி சிலை வடிவத்தில்

இருந்தது. சிபியின் வம்சத்தில் பிறந்தவர்களானபடியினால் அல்லவோ சோழர்களுக்குச் 'செம்பியன்' என்னும் பட்டம் உரியதாயிற்று? அந்தச் சிற்பத்தைக் கூர்மையாகக் கவனித்துப் பார்த்த பிறகு ஊமை ராணி அப்பால் சென்றாள். பிரம்மாண்டமான சிவபெருமானுடைய சிலையின் சிரஸிலிருந்து கங்கை நதி கீழே விழும் காட்சி ஒரு சிற்பத்தில் அமைந்திருந்தது. அருகில் பகீரதன் கைகூப்பிய வண்ணம் நின்று கொண்டிருந்தான். கீழே விழுந்த பாகீரதி நதி ஒரு பிரம்மாண்டமான ரிஷியின் வாய்வழியாகப் புகுந்து காது வழியாக வெளியேறியது. அப்படி வெளியேறிய கங்கையில் ஒரு சிறிய முனிவர் குண்டிகையில் தண்ணீர் மொண்டு கொண்டிருந்தார். அவர்தான் குறுமுனிவர் என்று பெயர் பெற்ற அகஸ்தியராக இருக்க வேண்டும். அந்தக் குண்டிகையை அவர் இன்னொரு சிறிய மலையின் மீது கவிழ்த்தார். குண்டிகையிலிருந்து பெருகிய நதி வரவரப் பெரிதாகிக் கொண்டு சென்றது. இந்தச் சிற்பக் கங்கையிலும் காவேரியிலும் அவற்றை அமைத்த போது தண்ணீர் பெருகுவதற்கு ஏற்பாடும் செய்திருக்க வேண்டும். ஆனால் இப்போது அவற்றில் தண்ணீர் இல்லை. காவேரி நீண்டு வளைந்து மலைப் பாறைகளின் வழியாகவும் மரமடர்ந்த சோலைகளின் வழியாகவும் சென்றது. அதன் இருபுறமும் அநேக சிவன் கோயில்கள் இருந்தன. கடைசியாகக் காவேரி கடலில் கலக்க வேண்டிய இடத்தில் அந்தச் சிற்ப மண்டபத்தின் மதில் சுவர் இருந்தது. ஏதோ சந்தேகப்பட்டு ஊமை ராணி அந்த இடத்தில் மதில் சுவரில் கையை வைத்து அமுக்கினாள். சிறிய கதவு ஒன்று திறந்தது. அதன் வழியாக வெளியேறினாள். அவள் வெளியேறிய இடம் அரண்மனைத் தோட்டம். அதற்கு அப்பால் வெகு சமீபத்தில் அரண்மனையின் உன்னதமான மாடங்கள் காணப்பட்டன. சுற்றுமுற்றும் பார்த்தாள். மங்கிய அந்தி மாலையின் வெளிச்சத்தில் தோட்டத்தில் யாருமில்லை என்று தெரிந்தது. பழுவேட்டரையரின் தோட்டத்தில் விழுந்து கிடந்தது போலவே



இங்கேயும் மரங்கள் முறிந்து விழுந்து கிடந்தன. ஆகையால் தோட்டத்தில் யாராவது இருந்தாலும் அவள் சிற்ப மண்டபத்திலிருந்து வெளி வந்ததைப் பார்த்திருக்க முடியாது. இன்னும் நன்றாய் இருட்டட்டும் என்று சிற்ப மண்டபத்தையொட்டியே நின்று காத்திருந்தாள். ஒருவேளை கையில் வேலையுடைய அந்த யமகிங்கரன் வந்தாலும் வரக்கூடும். ஆகையால், சிற்ப மண்டபத்துக்குள்ளும் அடிக்கடி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரண்மனையில் தீபங்கள் ஒவ்வொன்றாகச் சுடர்விட்டு எரியத் தொடங்கின. சிறிது நேரத்துக்கெல்லாம் அரண்மனை முழுதும் ஒரே ஜோதிமயமாகக் காட்சி அளித்தது. கீழ் அறைகளில் ஏற்றிய தீபங்கள் பலகணிகளின் வழியாக வெளியில் ஒளி வீசின. மேல் மாடங்களில் ஏற்றிய தீபங்கள் வானத்து நட்சத்திரங்களுடன் போட்டியிட்டுக் கொண்டு பிரகாசித்தன.

"ஐயோ! பகல் வேளையைக் காட்டிலும் இரவு மிகவும் அபாயகரமானதாகத் தோன்றுகிறதே!" என்று மந்தாகினி எண்ணினாள்.

அரண்மனையை நாலு புறமும் நன்றாக உற்றுப் பார்த்தாள். சிற்ப மண்டபத்துக்குச் சமீபமாக இருந்த அரண்மனைப் பகுதியிலே மட்டும் அதிக விளக்குகள் இல்லை என்பதைக் கவனித்துக் கொண்டாள். காவேரி வெள்ளத்திலிருந்து தான் எடுத்துக் காப்பாற்றிய தன் உயிருக்குயிரான செல்வக் குமாரனை இலங்கையில் கொல்ல முயன்ற பாதகனும் அவனுடைய தோழனும் அரண்மனையின் இந்தப் பகுதியிலேதான் மேல் மாடத்தில் ஏறி நின்றார்கள். ரவிதாஸன் இன்னொருவனிடமிருந்து வேலை வாங்கி யார் மீதோ எறிவது போல் குறி பார்த்த இடம் இதுதான். நல்ல வேளையாக, இந்தப் பகுதியில் அதிகமாக தீபங்கள் ஏற்றவில்லை. அதற்குக் காரணம் யாதாயிருக்கலாம்?...... நல்லது; அதுவும் சீக்கிரத்தில் தெரிந்து போகிறது.

நன்றாக அஸ்தமித்து அரண்மனைத் தோட்டத்தில் இருள் சூழ்ந்தவுடனே மந்தாகினி சிற்ப மண்டபத்தின் வாசலிலிருந்து மிரண்டோடும் மானின் வேகத்துடன் பாய்ந்து சென்று அரண்மனையை அடைந்தாள். அரண்மனையின் அந்தப் பின் பகுதியில் வட்ட வடிவமான தாழ்வாரங்களும் அவற்றைத் தாங்கி நின்ற வரிசை வரிசையான தூண்களும், பல இடங்களில் மேன் மாடத்துக்கு ஏறும் படிக்கட்டுகளும் காணப்பட்டன. தாழ்வாரங்களில், பெரிய விருந்துகளுக்குச் சமையல் செய்ய உதவும் பிரம்மாண்டமான தாமிரப் பாத்திரங்கள், பழசாய்ப் போன தந்தப் பல்லக்குகள், ஒடிந்த சிங்காதனங்கள், — இப்படிப் பல பொருள்கள் இருந்தன. அவற்றின் மத்தியில் சிறிது நேரம் சுற்றிப் பார்த்துவிட்டு மந்தாகினி கடைசியாக ஒரு படிக்கட்டின் மீது துணிந்து ஏறினாள். கீழே இருந்தது போலவே மேன் மாடத்திலும் வட்ட வடிவமான தாழ்வாரங்களும் அவற்றின் மேற்கூரையைத் தாங்கிய சித்திர விசித்திரமான தூண்களும் வேலைப்பாடு அமைந்தபலகணிகளும்நிலாமுன்றில்களும் அவற்றில் பளிங்குக்கல் மேடைகளும் காணப்பட்டன. மனித சஞ்சாரம் அற்றதாகத் தோன்றிய அந்த மேன் மாடக் கூடங்களில் மந்தாகினி சுற்றிச் சுற்றி அலைந்தாள். மாடத்தின் உட்புறத்து ஓரங்களுக்குப் போக அவள் மிகவும் தயங்கினாள். ஓரிடத்தில் உட்புறத்தில் கீழேயிருந்து தீப வெளிச்சம் வருவதைக் கண்டு அங்கே போய்த் தூண் மறைவில் நின்று எட்டிப் பார்த்தாள்.

ஆகா! அவள் பார்த்தது என்ன?

பார்த்தகண்களைத்திருப்பவேமுடியாத காட்சியைப் பார்த்தாள்.

ஒரு விசாலமான மண்டபத்தின் மத்தியில் விசித்திர வேலைப்பாடு அமைந்த சப்ரமஞ்சக் கட்டிலில் ஒருவர் சாய்ந்த வண்ணம் படுத்திருந்தார்.

அவரைச் சுற்றிலும் நாலு ஸ்திரீகளும் இரண்டு ஆடவர்களும் அச்சமயம் நின்றார்கள். படுத்திருந்தவரிடம் அவர்கள் பயபக்தி கொண்டவர்கள் என்பது அவர்களுடைய தோற்றத்திலிருந்து தெரிந்தது. சிறிது தூரத்தில் இன்னும் அதிக மரியாதையுடன் இரு தாதிப் பெண்கள் நின்றார்கள்.

ஒரே ஒரு தீபந்தான் அந்த மண்டபத்தில் எரிந்தது. அதுவும் கட்டிலுக்கு அருகில் இருந்த விளக்குத் தண்டின் மீது பொருத்தப்பட்டு மங்கலான வெளிச்சத்தையே தந்து கொண்டிருந்தது.

சுற்றிலும் நின்றவர்களை முதலில் மந்தாகினி பார்த்தாள். அவர்களில் ஒருத்தி தன் உயிருக்குயிரான சகோதரன் மகள் பூங்குழலி என்பதை அறிந்தாள். மற்றவர்களையும் அவள் முன்னம் சில தடவை மறைவான இடங்களிலிருந்து பார்த்திருக்கிறாள். ஆனால், அவர்கள் எல்லாம் யார் யார் என்பது அவ்வளவு நன்றாகத் தெரியாது.


சுற்றி நின்றவர்களைப் பார்த்துவிட்டு மிக மிகத் தயக்கத்துடன் மந்தாகினி கட்டிலில் படுத்திருந்தவரைப் பார்த்தாள். அவளுடைய நெஞ்சு ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டது.

ஆம்; அவரேதான்! எத்தனையோ யுகம் என்று சொல்லக் கூடிய நீண்ட காலத்துக்கு முன்னால்,தான் சின்னஞ்சிறு பெண்ணாக ஓடி விளையாடிக் காடுகளில் திரிந்து கொண்டிருந்த காலத்தில், ஓடத்தில் வந்து ஒதுங்கி, தன் உள்ளத்தையும் உயிரையும் கொள்ளை கொண்ட மனிதர்தான். தான் வாழ்ந்திருந்த பூதத் தீவைச் சில காலம் சொர்க்க லோகமாக ஆக்கியிருந்தவர்தான். பெரிய கப்பலில் கூட்டமாக வந்தவர்களால் அழைத்துப் போகப்பட்டவர்தான்!

ஆகா! அவர் இப்போது எப்படி மாறிப் போயிருக்கிறார்!

பூர்வ ஜன்மம் என்று சொல்லக் கூடிய அந்த நாட்களுக்குப் பிறகும் மந்தாகினி அவரைப் பல தடவை அவரறியாமல் பார்த்திருக்கிறாள். காவேரி நதி

ஆரோஃபுட் அளிக்கிறது-
சுத்தமான,தரமான கோதுமை மாவு.
வசதியான பேக்கிலே!





கோதுமையைத் தேடி வாங்கி, சுத்தம் செய்து அரைக்கும் தொல்லை இனி இல்லை. இப்போது வந்து விட்டது ஆரோஃபுட் கோதுமை மாவு. உயர்ந்த தரமானது! மிகவும் சுத்தமானது — ஆரோஃபுட் நிறுவனத்தின் மற்ற தயாரிப்புகளான டீ, பிஸ்கட், சேமியா போன்றே!

உங்கள் குடும்பத்தினருக்கு ஆரோஃபுட் கோதுமை மாவால் பூரி, சப்பாத்தி செய்து கொடுங்கள். அதின் அருமையான ருசி அவர்களைக் கவர்ந்துவிடும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாப் கோதுமையில் தயாரிக்கப்படுவது.
- மெஷின்களால் சுத்தம் செய்யப்பட்டு அரைக்கப்படுவது.
- விட்டமின்களும் சத்துகளும் பாதுகாப்பாக உள்ள வகையில் பேக் செய்யப்படுவது.

ஆரோஃபுட் கோதுமை மாவு

தரத்தையும் வசதியையும் நாடும் இல்லத்தரசிகளுக்காக!

ஒரு டீகு தயாரிப்பு. சிறந்த பொருட்களைக் கொண்டு, அன்புடனும் அக்கறையுடனும் தயாரிக்கப்படுவது.

HTA 7292 TM

அருள்வாக்கு

ஒரு சக்கரத்துக்கு இரும்புப் பட்டை அடிப்பதென்றால் மாற்றி மாற்றிக் காய்ச்சியும் குளிர்ந்த ஜலத்தைக் கொட்டியும் மாற்றி மாற்றிவிரிவடையவும் சுருங்கவும் பண்ணுவது வழக்கம். அப்போதுதான் அது சக்கரத்தை நன்றாகக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும். இல்லாவிட்டால் 'லொட லொட' என்றுவிட்டுப்போய்விடும். காய்ச்சி விரிவாக்கணும். ஜலத்தைக்கொட்டிச் சுருங்கவும் பண்ணணும். இந்த மாதிரிதான் ஒரு ஜீவன் ஆத்மஸ்தானத்தைப் போய்க் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்றால் தர்மத்தின் பல கட்டுப்பாடுகளால் அதன் கீழான குணம் குறுகும்படியாகவும் பண்ணணும்; அன்பின் விசாலத்திலே அதன் மேலான குணம் விரியும்படியும் பண்ண வேண்டும்.

கார்யமே இல்லாமல் ஆகிறதற்காகவே எத்தனையோ வகை வகையான கர்மாக்களை, சடங்குகளை, பொதுத் தொண்டுகளை நிறையப் பண்ண வேண்டும். தூக்கம் வரவில்லை என்று சொல்கிறவர்களிடம் என்ன சொல்கிறோம்? "நன்றாக ஓடியாடி, உழைத்து, வேலை பண்ணு. தானே அடிச்சுப் போட்ட மாதிரி தூக்கம் வரும்" என்கிறோமல்லவா! இது சரீர ரெஸ்டுக்கு மட்டும் சொன்னது. ஆத்மாவில் 'ரெஸ்ட்' ஆவதற்கும் கர்மா இப்படியே உபயோகமாகிறது.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

யில் உல்லாசப் படகுகளில் அவர் சென்ற போது கரையில் அடர்ந்த புதர்களின் மறைவில் ஒளிந்திருந்து பார்த்திருக்கிறாள். நகரங்களின் தெருக்களில் வெண்புரவிகள் பூட்டிய தங்க ரதத்தில் வீதிவலம் வந்த போது கூட்டத்தோடு கூட்டமாய் நின்று பார்த்திருக்கிறாள். ஆனால் கடைசியாக அவரைப் பார்த்துக் கொஞ்ச காலம் ஆகிவிட்டது. அந்தக் காலத்திற்குள்ளேதான் இப்படி மாறிப் போயிருக்கிறார். முகத்தில் தாடியும் மீசையும் வளர்ந்திருந்தன. கன்னங்கள் ஒட்டி உலர்ந்து போயிருந்தன. நெற்றியிலே சுருக்கங்கள்.. ஆகா! அந்தக் கண்களில் ஒரு காலத்தில் குடிகொண்டிருந்த காந்த ஒளி எங்கே போயிற்று? தெய்வமே! இப்படியும் மனிதர்கள் மாறுவது உண்டா? இலங்கைத் தீவில் விஷ ஜுரத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் பலரை நீண்ட நாள் காய்ச்சலுக்குப் பிறகு உயிர்போகும் சமயத்தில் ஊமை ராணி மந்தாகினி பார்த்ததுண்டு.

ஆகா! ஒரு சமயம் தங்கச் சூரியனைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்த இவருடைய களை ததும்பிய முகமும் அவ்வளவாக மாறிப் போயிருக்கிறதே?

ஒருவேளை இவருடைய அந்திய காலமும் நெருங்கி விட்டதோ!

திடீரென்று மந்தாகினிக்கு அன்று மாலை தான் பார்த்த பயங்கரக் காட்சி நினைவுக்கு வந்தது. அவள் அச்சமயம் நின்ற இடத்தில்தான் ரவிதாஸன் என்னும் கொலைகாரனும் அவனுடைய தோழனும் நின்றார்கள். அங்கிருந்துதான் வேல் எறியக் குறி பார்த்தார்கள். ஒரு வேளை கட்டிலில் படுத்திருப்பவர் மீது எறியத்தான் குறி பார்த்தார்களோ?

இந்த நினைவினால் மந்தாகினியின் உடம்பெல்லாம் வெடவெடவென்று நடுங்கியது. கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது. மயக்கம் வரும்போலிருந்தது. தூணைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கால்களை ஊன்றி நின்று சமாளித்துக் கொண்டாள்.

(தொடரும்)

NAVAJEEVAN SOCIAL WELFARE CENTRE

(A unit of NBRC)

1 — 57, North Mada St., Near Shankar Mutt,
P.O. — Tirumala — Via — Tirupati (A.P.) Pin — 517 504.

நவஜீவன் நற்பணி மன்றம் திருமலை — திருப்பதி

ஸ்ரீ வெங்கடேச கோடி நாம எழுத்து வேள்வி — பகுதி-II

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான ஸ்ரீ வெங்கடாசலபதி திருக்கோயில் கொண்டிருக்கும் இந்தத் திருமலை— திருப்பதி புண்ய க்ஷேத்திரத்திலிருந்து, "நவஜீவன் நற்பணி மன்றம்" பார்வையற்றவர்களுக்குக் கடந்த 10 ஆண்டுகளாக பலவித உதவிகள் புரிந்து வருவது குறித்து வாசகர்கள் அறிந்ததே. தவிரவும் இந்த நற்பணி மன்றம் மக்களிடையே நாட்டுப்பற்று மற்றும் கடவுள் பக்தி குறித்தும் விசேஷமாகப் பிரசாரம் செய்து வருகிறது.

ஸ்ரீ காஞ்சி ஆசார்ய ஸ்வாமிகளின் விசேஷ அனுக்ரஹத்துடன் கடந்த ஆகஸ்ட் முதல் நவம்பர் 8—ஆம் தேதி வரை 108 நாட்களில் ஸ்ரீ வெங்கடேச திவ்யநாமத்தை எழுதி அனுப்பும்படி நாங்கள் விடுத்த வேண்டுகோளின் படி, பல்லாயிரக்கணக்கான ஆஸ்திகர்கள் பக்தி சிரத்தையுடன் எழுதி அனுப்பியிருந்தார்கள். இப்படி எழுதி அனுப்பிய எல்லா ஆஸ்திக அன்பர்களின் சார்பாகவும் விசேஷ பூஜை, பிரார்த்தனை செய்வித்து, உண்டியில் காணிக்கையும் சமர்ப்பித்துப் பிரசாதம் அனுப்பி வைக்கப்பட்டது. தவிரவும் தேர்ந்தெடுக்கப்பட்ட 108 ஆஸ்திகர் களுக்கும் அவர்களின் இருப்பிடத்திலிருந்து இலவசப் புனிதப் பயணமாக திருப்பதி வந்து செல்ல, ரயில் — பஸ் சார்ஜ் மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

கோடி நாம எழுத்து வேள்வி SVK-II உங்களிடம் சில வேண்டுகோள்

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், அயல்நாடுகளில் இருந்தும் தொடர்ந்து மீண்டும் மீண்டும் பல ஆஸ்திக அன்பர்கள் கேட்டுக் கொண்டபடி, ஸ்ரீ காஞ்சி ஆசார்ய ஸ்வாமிகளின் விசேஷ அனுக்ரஹத்துடன், கோடி நாம யக்ஞத்தின் இரண்டாம் பகுதியை மார்ச் 1 முதல் ஜூன் 9 — ஆம் தேதி வரை 101 நாட்களில், திருமலை — திருப்பதியில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இந்த பக்தி வேள்வியில் கலந்து கொள்ள விரும்பும் ஆஸ்திகர்கள், குறிப்பாக மாணவர்கள், திருமணமாகாத பெண்கள் திருவோணம் மற்றும் சனிக்கிழமை போன்ற முக்கிய தினங்களில் "ஓம் நமோ வெங்கடேசாய." என்கிற திவ்ய நாமத்தை நல்லதொரு வெள்ளைத்தாளில் 1008 முறை எழுதி, அதனுடன் உங்களுடைய சுயவிலாசத்தையும் தெளிவாக எழுதி சாதாரண தபாலில் மேற் காணும் எமது விலாசத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம். மேலும் பூஜை செலவுகள், உங்கள் சார்பாக உண்டியில் செலுத்தும் காணிக்கை, விழியற்றோர்க்கு நித்ய அன்னதானம், கூட்டுத் திருமணத்திற்குத் திருமாங்கல்யம், பக்தர்களின் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்படும் ஆஸ்திகர்களுக்கு வெள்ளிக்காசு போன்றவை செய்ய ஆகும் செலவு, இலவச புனிதப் பயண ஏற்பாடு மற்றும் விசேஷ தபால் செலவிற்காக தயது செய்து ரூ. 50/—க்குக் குறையாமல் தனியாக மணியார்டர் (அ) டிமாண்ட் டிராஃப்ட் மூலமாக மட்டும் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். மணியார்டர் கூப்பனில் உங்களது முகவரியையும் தெளிவாக எழுதும்படி வேண்டுகிறோம். (பின்கோடுடன்)

உங்களுக்காகச் சில தொண்டுகள்:

1. இலவச திருப்பதி புனிதப் பயணம்!
2. தங்கத்தில் திருமாங்கல்யம்!
3. வெள்ளிக்காசு டாலர்!
4. இலவச கூட்டுத் திருமணம்!

இந்தப் புனித எழுத்து வேள்வியில் கலந்து கொண்டு 1008 முறை திவ்யநாமத்தையும் எழுதி ரூ. 50/—க்குக் குறையாமல் காணிக்கை அனுப்பும் ஆஸ்திக அன்பர்களின் சார்பாக விசேஷப் பிரார்த்தனை, பூஜை செய்வித்து உண்டியில் காணிக்கையும் சமர்ப்பித்து, ஸ்ரீவாரி மஹாபிரசாதமும் உடன் அனுப்பி வைக்கப்படும். மேலும் எழுத்து வேள்வியின் நிறைவுநாளான ஜூன் 9—ஆம் தேதியன்று, உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் பக்தர்கள் முன்னிலையில் 101 அன்பர்களைக் குலுக்குச் சீட்டு முறையில் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பூஜைக்குரிய ஒரு வெள்ளிக்காசு டாலர் அனுப்பி வைப்பதுடன், இலவசமாகத் திருப்பதி யாத்திரை வந்து செல்லத் தேவையான ரயில் — பஸ் சார்ஜை உடன் கணக்கிட்டு மணியார்டரும் அனுப்பி வைக்கிறோம். மேலும் இந்த எழுத்து வேள்வி யில் கலந்து கொண்ட திருமணமாகாத பெண்களிலிருந்து 9 பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு, தங்கத் தில் திருமாங்கல்யம் செய்து ஸ்ரீ பத்மாவதி தாயார் பிரசாதமாக வழங்கப்படும். தவிரவும் இந்த பக்தி யக்ஞத்தில் கலந்து கொண்ட 11 ஏழைக் கன்னிப் பெண்களுக்கும் தங்கத்தில் திருமாங்கல்யம் அளித்து இதர செலவுகளையும் மேற்படி மன்றமே ஏற்றுச் சிக்கனமாகத் திருமலையில் கூட்டுத்திருமணத்திற்கும் ஏற்பாடு செய்விக்கிறோம். (இதுகுறித்து விளம்பரம் பிறகு தனியாக வெளியிடப்படும்).

இலவசப் புனிதப் பயணத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் 101 அன்பர்கள் மற்றும் தங்கத் திருமாங்கல்யத் திற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் 9 பெண்களின் பெயர், விலாசத்துடன் ஜூன் — ஜூலை மாத தமிழ்ப் பத்திரிகை களில் விவரம் காணலாம். இந்த எழுத்து வேள்வி நடைபெறும் நாட்களில் தினசரி விசேஷ பூஜை, பார்வையற்ற வர்களுக்கு நித்ய அன்னதானம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

"ஓம் நமோ வெங்கடேசாய"

ஸ்ரீ K. R. ACHARYA,
(Organiser).



நத்தைகள்

காஞ்சனா மன்னார்குடி கல்லூரிக்கு வந்து சேர்ந்த இரண்டே மாதங்களுக்குள், என் பெயரோடு பல வருடங்களாக ஒட்டிப் போயிருந்த 'உம்மணாமூஞ்சி' என்னும் சிறப்புப் பெயர் காணாமல் போய் விட்டது!

அவளது ஆர்ப்பாட்டமில்லாத அழகு, அலட்டிக் கொள்ளாத பேச்சு, ஆடம்பர மில்லாத நடை உடை.... இவையெல்லாம் முதல் பார்வையிலேயே அவள் மீது எனக்கு ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்தி விட்டது.

எந்த வேலையாக இருந்தாலும் எனக் கென்ன வந்தது, நமக்கெதற்கு ஊர் வம்பு என்று ஒதுங்கியிருக்காமல் இழுத்துப் போட் டுக் கொண்டு செய்யும் அவளது சுறுசுறுப்பு, எப்போதும் சிரிப்புத் தேங்கிய அவளது முக வெட்டு, மிகவும் தர்ம சங்கடமான சூழ்நிலை களைக் கூடப் புன்னகை மாறாமல் சமாளிக் கும் அவளது சாதுர்யம்.... இன்னும் எவ் வளவோ சொல்லலாம்.....

இரண்டே நாள் பழக்கத்தில், அவளுடன் சதா பேசிக் கொண்டேயிருக்க வேண்டும் என்னும் தாகமும் ஏக்கமும் என்னை ஆக்ர மிக்க ஆரம்பித்து விட்டன.

வார்த்தைக்கு வார்த்தை நகைச்சுவை இழையோடும் அவளது பேச்சு — ஏதோ ஒரு நகைச் சுவைச் சிறப்பிதழைப் படிக் கிறோமோ என்ற உணர்வை ஏற்படுத்துவது போல, பேச்சின் இடையிடையே அவள் சொல்லும் நகைச்சுவைத் துணுக்குகள் —

''சும்மா அறுக்காதீங்க காஞ்சனா....'' என்பேன், பொய்யான கோபத்தோடும், சீரியசான முகத்தோடும்.

''அய்யய்யோ! என்ன சார் இப்படிச் சொல்லீட்டிங்க? அதுக்குன்னே எம். ஃபில். வரைக்கும் படிச்சிட்டு வந்திருக்கேன் சார். அதைச் செய்யாதேன்னா எப்படி சார்?...'' — கொஞ்சம் கூடச்சிரிக்காமல் பதில் சொல்லி விட்டு என்னைப் பார்ப்பாள்.

அடக்க முடியாமல் நான் வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பிக்கும் போது, அவளும் சேர்ந்து சிரித்து விடுவாள்.

''இங்க பாருங்க மிஸ்டர் ராம்குமார், பழைய காலம் மாதிரியே வகுப்பிலே வெறும் பாடத்தை மட்டும் சீரியஸா நடத்திக்கிட்டி ருந்தா எல்லா மாணவர்களும் கொட்டாவி தான் விடுவாங்க. வாழ்க்கையோடு ஒன்றிய உதாரணங்களைக் கூறி, நகைச் சுவையுணர் வோடு கலந்து பாடத்தை ஊட்டிப் பாருங்க — கசப்பு மருந்தை இனிப்பிலே கலந்து கொடுக்கிற மாதிரி.... கிளாஸ் எவ்வளவு லைவ்லியா இருக்குன்னு நீங்களே உணரு வீங்க.....'' என்பாள்.

கொஞ்ச நாளிலேயே அவளது நகைச்

ராஜ்ஸ்ரீகாந்த்



''என் வாழ்வு முறையையே பெருமளவில் மாற்றியமைத்து விட்ட காஞ்சனா, என் வாழ்க் கைத் துணையாகவும் அமைந்து விட் டால்.....?''



''படப்பெட்டியோடு ஒருநீளப் பட்டிய லும் வந்திருக்சே... என்ன அது...?

''இந்தப் படத்துக்கு மாற்றுப் பெயர் கள். படம் சரியா ஓடலைன்னா அப்பப்ப தலைப்பை மாற்றி வைச்சு ஓட்டணும்னு, தயாரிப்பாளர் திட்டம் போட்டிருக் கார்...!''

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.

சுவையுணர்வை எனக்குத் தொற்ற வைத்து விட்டான்! வகுப்பில், வீட்டில், நண்பர்க ளிடத்தில்.... எல்லாப் பரிமாணங்களிலும் நான் கலகலப்பாகி விட்டேன்.

என் வாழ்வு முறையையே பெருமளவில் மாற்றிமைத்து விட்ட காஞ்சனா என் வாழ்க் கைத் துணையாகவும் அமைந்து விட்டால்...? என்னுள் கிளைவிடத் துவங்கி விட்ட ஆசையை என்னால் கட்டுப் படுத்த முடிய வில்லை.

அப்பா இல்லாத குடும்பம் — தங்கை பூங் கோதையை நான்தான் கரையேற்ற வேண் டும். அதனால் என்ன? அது வரை நான் பிரம்மசாரியாகவே காத்திருக்க வேண்டுமா என்ன? பிரச்னைகளை அவற்றின் வேர் வரை சென்று அலசி, தீர்க்கமான தீர்வு களைக் காணக் கூடிய காஞ்சனா, என் தங் கைக்காக நான் செலவு செய்வதை நிச்சயம் தடை செய்யமாட்டாள்.

நான் முடிவெடுத்து விட்டேன்.

அதை எப்படி காஞ்சனாவிடம் வெளிப் படுத்துவது? எத்தனையோ சந்தர்ப்பங்கள் வாய்த்தும், ஏதோ ஒரு தயக்கம் வாய் வரை வந்து விடும் வார்த்தைகளை வெளியேற விடாமல் தடுத்து விடுகிறது.

அடுத்த சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்து, தனிமையில் பேசும் வாய்ப்புக் கிட்டும் போது, எப்படியாவது விஷயத்தை உடைத் துப் பேசி விட வேண்டும்.

பேசாமல்.... ஒரு கடிதம் எழுதி இந்த விஷயத்தைக் காஞ்சனாவிற்குத் தெரியப் படுத்தி விட்டால் என்ன? தவறாக எடுத்துக் கொண்டு விடுவாளோ! சே, சே! இதி லென்ன தவறு?

மேஜை டிராயரைத் திறந்து ஒரு பேப் பரை எடுத்தேன். ஒரு முறை சுற்றிலும் பார்த் துக் கொண்டேன். நான் மட்டும் தனியாகத் தான் இருக்கிறேன் — காஞ்சனா உட்பட மற்ற எல்லோருமே வகுப்புகளுக்குப் போயி ருக்கிறார்கள்.

தைரியமாகப் பேனாவின் மூடியைத்திறந் தேன்.

என்ன எழுதுவது? எப்படி ஆரம்பிப்பது? என் கைகள் ஏன் இப்படி நடுங்குகின்றன?

''அன்பிற்கினிய காஞ்சனா அவர்களுக்கு, தங்கள் அன்பிற்கு ஏங்கும் ராம் குமார் எழுதுவது....'' என்று எழுத ஆரம்பித் தேன்.

சே! இது என்ன மடத்தனம்? இவ்வளவு சுதந்திரமாகவும் கலகலப்பாகவும் பேசும் காஞ்சனாவிடம் நேருக்கு நேர் கேட்காமல், இது எதற்குக் கடிதம்?

வேண்டாம்.

கடிதத்தை எழுதிய வேகத்திலேயே கிழித் துக்குப்பைக் கூடைக்குள் வீசியெறிந்து விட்டு, என்னை நானே நொந்து கொண் டேன்.

இன்று சம்பள நாள். இதோ வருகி றேன், இதோ வருகிறேன் என்று பல ஆண்டு களாக ஏமாற்றி வந்த, புதிய யு.ஜி.சி. சம் பளம் இந்த மாதம் வந்தே விட்டது. இந்த சந்தோஷமும், உற்சாகமும் எனக்குப் புதிய தோர் ஊக்கத்தைக் கொடுத்திருந்தன. இன்று காஞ்சனாவிடம் எப்படியும் கேட்டு விட வேண்டும்!

கல்லூரி முடிந்து எல்லோரும் வீட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். காஞ்சனா வும் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள். நான் தயங்கிய படியே நின்றிருந்தேன்.

''என்ன சார் கிளம்பியாச்சா? எதுவும் அவசர வேலையிருக்கா?'' — காஞ்சனா தான் கேட்டாள், கைப்பைக்குள் ஏதோ புத்த கத்தைத் திணித்தவாறே.

''இல்லையே...ஒன்னும்அவசரமில்லை.''

''அப்படின்னா வாங்களேன். கேண்டீன் போய் ஸ்ட்ராங்கா ஒரு காப்பி சாப்பிடணும் அதோட ஒரு முக்கியமான விஷயமும் பேசணும்....''

முக்கியமான விஷயமா?..... இவள் என்ன சொல்லப்போகிறாள்?..... யோசித்தவாறே, ''ஓ... யெஸ்.... தாராளமாப் போகலாம். நான் கூட உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் கேட்கணும்....'' என்றேன்.

''அப்படியா? சரி வாங்க போவோம்....''

இருவரும் கேண்டீனுக்கு நடந்தோம். ஆளுக்கு ஒரு கப் காப்பியோடு எதிர் எதிரே மேஜையில் அமர்ந்தோம்.

''என்ன முக்கியமான விஷயம்? சொல் லுங்க.....'' என்றேன்.

''முதலில் காப்பியை முடிப்போம். இல் லேன்னா ஆறிடும்.....''

அவசரமாகக் காப்பியை உறிஞ்சி முடித் தேன். நாக்கைச் சுட்டு விட்டது.

''உங்களுக்குக் கதிரேசன்கிற பேரைப் பிடிக்குமா மிஸ்டர் ராம் குமார்?....'' காப்பி கப்பைக் கீழே வைத்தவாறு கேட்டாள்.

''கதிரேசனா? இது என்ன சம்பந்தமில்

லாத கேள்வி?....''

''கதிரேசன்கிற பேரை எனக்கு ரொம்பப் பிடிக்கும்.''

நான் ஒன்றும் புரியாமல் மௌனமாக இருந்தேன்.

ஏன்னு கேளுங்களேன்.....'' என் மௌனத்தைக் கலைத்தாள்.

''ஏன்?.......

''கதிரேசன்கிறவர் காலேஜ்லே என்னோட எம்.ஃபில் படிச்சவர். என்னோட நெருங்கிய நண்பர். நைஸ் ஜெண்டில்மேன் — உங்களைப் போலவே.....

நான் கேள்விக்குறியோடு அவளைப் பார்த்தேன்.

''கதிரேசனை எனக்கு ரொம்பவும் பிடிக்கும் — அவர் தான் எனது.... வருங்காலக் கணவர்.....'' இதைச் சொல்லும் போது காஞ்சனா வெட்கப் பட்டாள். அதை அவளது முகத்தில் பார்க்க முடிந்தது. ஆனால் நான் தாக்கப் பட்டேனே — இதயத்தில் — அவளால் இதை உணர முடியவில்லையா?

நான் அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தேன்.

''என்ன அப்படிப் பார்க்கிறீங்க? ஊர் விஷயத்தையெல்லாம் சிரிச்சுச் சிரிச்சுப் பேசினவ, இந்த விஷயத்தை மட்டும் இவ்வளவு நாளாச் சொல்ல வில்லையேன்னு பார்க்கிறீர்களா? என்னோட காதல் விஷயம் ஊரே சிரிச்ச விஷயம் தான். அதனாலே தான் சொல்லப் பயந்தேன்......

''நான் இந்த ஊருக்கு டிரான்ஸ்ஃபர் வாங்கிட்டு வர்ரத்துக்குக் காரணமே அது தான்.

''கதிரேசனும் நானும் ஒருத்தரை ஒருத்தர் முழுசாப் புரிஞ்சு வைச்சிருக்கோம். எனக்கு வேலை கிடைச்சுடுச்சு. அவருக்கு இன்னும் கிடைக்கலை. அதனாலே கல்யாணப் பேச்சைத் தள்ளிப் போட்டிருக்கோம்.

''நான் அந்த ஊரிலே இருந்தப்போ கதிரேசன் அடிக்கடி கடிதங்கள் எழுதுவார். நேரிலும் வருவார். விஷயம் கல்லூரி முழுக்க விளம்பரமாகி விட்டது. ஸ்போர்டிவாக எடுத்துக்கொள்வார்கள் என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் கல்லூரியின் மாணவர்கள் சிலர் என்னையும் கதிரேசனையும் இணைத்துக் கொச்சையாக, அசிங்கமாக கல்லூரிச் சுவர்கள் முழுதும் எழுதும் அளவுக்கு மோசமாக நடந்து கொண்ட போது நான் துடித்துப் போனேன். மாணவர்கள் மட்டுமில்லை. சக ஆசிரியர்களே கிசு கிசு வென்று என்னைப் பார்த்துக் கேலி பேச ஆரம்பித்து விட்டார்கள். நான் அவமானத்தால் கூனிக்குறுகிப் போனேன்.

''சினிமாவிலும், நாடகத்திலும் காதலைக் கை தட்டி ஊக்குவிப்பவர்களெல்லாம், நிஜ வாழ்க்கையில் காதலிப்பவர்களை ஏனோ கேலிப் பொருள்களாக்கி விடுகிறார்கள்.

''எனக்கு அந்த ஊரிலே இருக்கப் பிடிக்கலை. டிரான்ஸ்ஃபர் வாங்கிட்டு இங்கே


ஒலி இனிமையானது
தோற்றம் புதுமையானது
படைப்பு அருமையானது
இது முதன்மையானது!
National/Panasonic
yanora® டைனுவிஷன் லிமிடெட், சென்னையின்
திவு செய்யப்பட்ட டிரேட்மார்க்.

வந்தேன். நத்தை ஓட்டுக்குள்ளே சுருங்குகிற மாதிரி, என் காதல் விஷயத்தை எனக்குள்ளே மறைத்துக் கொண்டேன். வெளியே தெரிந்தால் என்னை மீண்டும் சீண்டி வேடிக்கை பார்ப்பார்களே! அதனால்தான் உங்களிடம் கூட அதைப் பற்றிச் சொல்லவே இல்லை. இருந்தாலும் ஒரு நல்ல நண்பரிடம் எதையும் மறைக்கக் கூடாதுன்னு அடிக்கடி தோணிச்சு. அதான் இப்பச் சொல்லிட்டேன்.''

சொல்லி விட்டு அவள் என்னைப் பார்த்தாள். நான் என் கண்களில் ஏமாற்றத்தை மறைக்கச் சிரமப்பட்டேன்.

''நீங்க ஏதோ முக்கியமான விஷயம் சொல்லணும்னு சொன்னீங்களே?''

''அது.... அது வந்து பூங்கோதைக்கு ஒரு வரன் வந்திருக்கு......'' நான் சமாளிக்க முயற்சி செய்தேன்.....

''உண்மையை மறைச்சு, ஏன் இந்த பொய்ச் சமாளிப்பு?'' — காஞ்சனா கோபமாகக் கேட்டாள்.

நான் மீண்டும் அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தேன்.

''ஆமாம் மிஸ்டர் ராம் குமார், நீங்க என்ன சொல்ல நினைச்சிருந்தீங்கன்னு எனக்குத் தெரியும். பேனாவிலே கசிஞ்ச இங்கைத் துடைக்கிறதுக்காகக் குப்பைக் கூடையிலே ஒரு துண்டுப் பேப்பரை எடுக்கிறப்போ அதிலே உங்க கையெழுத்தைப் பார்த்தேன். 'அன்பிற்கினிய காஞ்சனா அவர்களுக்கு....' ன்னு அதிலே எழுதியிருக்கிறதைப் பார்த்ததுமே நான் உங்க மனசைத் தெரிஞ்சுக்கிட்டேன். சாரி சார்! உங்களோட இந்த ஏமாற்றத்துக்கு முழுக் காரணமும் நான் தான். நான் ஆரம்பத்திலேயே என் காதலைப் பற்றிச் சொல்லியிருக்கலாம். ஆனா இப்ப நான் எதையும் மறைக்கலே. உங்களை எனக்கு ரொம்பவும் பிடிச்சுத் தான் இருக்கு. நான் கதிரேசனைப் பார்க்கிறதுக்கு முன்னாடி, உங்களோட பழகியிருந்தா நிச்சயமா உங்களை விரும்பியிருப்பேன். அந்த அளவுக்கு யு ஆர் ரியலி எ ஜெண்டில்மேன்.... ஆனால்..... ப்ளீஸ் இப்ப என்னை மன்னிச்சிடுங்க.... ப்ளீஸ்......'' அவள் கண்கள் கலங்கி விட்டன.

''எனக்கு நீங்க ஒரு உதவி.... இல்லே ஒரு உறுதி தரணும்.....''

''என்ன காஞ்சனா, சொல்லுங்க?'' என்றேன் கரகரத்த குரலில்.

''இந்த ஏமாற்றத்தை நீங்க மறந்துடணும். பழையபடி ஓட்டுக்குள்ளே ஒளிகிற நத்தை மாதிரி, சோகமாகிடக் கூடாது. நான் கற்றுக் கொடுத்த சிரிப்பையும், கலகலப்பையும் எப்பவும் காப்பாத்திக்கணும்.....'' — அவள் குரல் தழுதழுத்தது.

''ஷ்யூர்! இனிமே என்னை யாரும் மாத்திட முடியாது. இப்பவே போயி, ஒரு கரிக் கட்டையை எடுத்து, சுவர் பூரா எழுதி, உங்க காதலை அம்பலமாக்குறேன், பாருங்க!....'' என்று உண்மையாகவே சிரித்தேன். காஞ்சனாவும் என்னோடு சேர்ந்து கலகலவென்று சிரித்தாள்.

கல்லூரியில் வளரும் கவிதை நந்தவனம்!



அப்துல் ரகுமான்

0 இனி,
ஒவ்வொருவருக்கும்
தனித்தனியே
சிதை வைக்கத் தேவையில்லை.
வாழ்க கூடங்குளம்!

0 அன்று,
சீதையால் தூய்மையடைந்தாய்.
இன்று,
ரூப்கன்வரால் அழுக்காகி விட்டாய்.

0 என் இருண்ட தேசம்
உன்னால்தான்
கொஞ்ச நேரம்
வெளிச்சத்தில் வாழ்கிறது!

— இவையெல்லாம் ஏதோ இன்றைய முன்னணிக் கவிஞர்களால் எழுதப்பட்டவையாக்கும் என்று யாரும் நினைத்துவிட வேண்டாம். அண்மையில் வாணியம்பாடி இஸ்லாமியாக் கல்லூரியில் நடந்த 'கவிராத்திரி'யில் 'சிதைத்தீ' என்ற தலைப்பில் அக்கல்லூரி மாணவர்களான மேதாவி, அ. விஜயன், இர. வெங்கடேசன் ஆகியோரால் எழுதி வாசிக்கப்பட்டவைதாம் இக்கவிதைகள்.

இவற்றைப் படிக்கும் போது வாணியம்பாடி கல்லூரியில் புதுக்கவிதைக்கென ஒரு தனித்துறையே செயல்படுகிறதோ என்று தான் தோன்றும்.

— இப்படியொரு நிலை வாணியம்பாடி இஸ்லாமியாக் கல்லூரிக்கு மட்டும் எப்படி வந்தது? எல்லாம் அங்கு தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றும் கவிஞர் அப்துல் ரகுமான் வேலைதான்! அப்படி என்னதான் செய்து கொண்டிருக்கிறார் அவர்? அந்தக் 'கவிராத்திரி'யில் அவரிடமே கேட்டோம்.

''மாணவர்களும் கவிதையெழுதிப் பழகுவதற்காக நான் முதலில் அவர்களுக்கு யாப்பிலக்கணத்தைச் சொல்லிக் கொடுத்தேன். அவர்கள் யாப்பைப் படித்தார்களே தவிர, கவிதையை விட்டு விட்டார்கள். அதனால் அதை விட்டுவிட்டு, வேறு வழியில் சிந்திக்க ஆரம்பித்தேன். ஏதாவதொரு தலைப்பைக் கொடுத்து அத்தலைப்பில் ஒரு சில வரிகளுக்குள் இலக்கணத்தை மறந்துவிட்டுக் கவிதையெழுதச் சொன்னேன். அப்படி முதலில் கொடுத்த தலைப்பு 'அந்தி சிவப்பதேன்?' என்பது.

''விண் சுவரில் சூரிய மூட்டைப் பூச்சியை நசுக்கியது யார்?' என்று தென்னன் என்ற மாணவர் எழுதினார். 'நாளெல்லாம் பறித்த குங்குமத்தை எமன் இங்கே குவித்தானோ?' என்று எழுதினார் க. வகாப் என்ற மாணவர். இப்படி பளிச் பளிச்சென்று மாணவர்கள் பலரும் எழுத ஆரம்பித்தார்கள். அவர்களை மேலும் மேலும் உற்சாகப்படுத்த ஆண்டுதோறும் கல்லூரியில் நடக்கும் முத்தமிழ் விழாவின் இறுதியில் 'கவிராத்திரி' என்று ஒரு நிகழ்ச்சியை வைத்து மாணவர்களைத் தங்கள் கவிதைகளைப் படிக்கச் சொன்னோம். அவ்வளவுதான்! இப்போது எங்கள் கல்லூரி மாணவர்கள் பெரிய பெரிய கவிஞர்களுக்குக் கூட தோன்றாத உவமானங்களைச் சர்வ சாதாரணமாகக்



அ. விஜயன்



* கவிராத்திரியை ரசிக்கும் மாணவர்கள்......

கையாள ஆரம்பித்துவிட்டார்கள்!

''இன்று மிகப் பிரபலமாகிவிட்ட வரிகளான, 'இரவிலே வாங்கினோம் சுதந்திரம்; இன்னும் விடியவே இல்லை' என்பதனை எழுதிய அரங்கநாதன் எங்கள் கல்லூரியின் பழைய மாணவர்தான். 77-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சென்னையில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தைக் கவிதையாக்கச் சொன்னபோது, 'பூமி விதவையான போது நீ மணக்க முன்வர வில்லை; அவள் கர்ப்பமான போது கலைக்க வந்து விட்டாயே....' என்று மழையைப் பற்றி எழுதினார் இ. சாகுல் அமீது என்ற மாணவர்.

''மாணவர்களின் உற்சாகத்தையும் கவிதையாற்றலையும் கண்டு பிறகு வடார்க்காடு, தருமபுரி மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளுக்கிடையிலான கவிதைப் போட்டிகளையும் நடத்தத் துவங்கினோம். பிற ஊர்களிலிருக்கும் கவிஞர்களையும் ஆண்டு தோறும் அழைத்து வந்து அவர்கள் பாடும் கவிதைகளையும் மாணவர்களைக் கேட்கச் செய்கிறோம். இவையெல்லாம் அவர்களுக்கு உற்சாகத்தைத் தருகிறது. எழுதுகிறார்கள். 'ஆக, கவிதை எழுதுவதற்கு நாங்கள் கற்றுத் தருகிறோம் என்பதைவிடக் கவிதை எழுதுவதற்கான சூழ்நிலையை நாங்கள் எங்கள் மாணவர்களுக்கு உருவாக்கித் தருகிறோம் என்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

''கல்லூரியில் படிக்கும் போது ஏற்படும் இந்தச் சூழ்நிலை இயல்பாகவே அவர்களுக்குக் கவிதை ஆர்வத்தைத் தூண்டிவிட்டு விடுகிறது. அதனால் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு வெளியே போன பிறகும் அவர்களால் கவிதை எழுதாமல் இருக்க முடிவதில்லை. உதாரணத்திற்கு... வாணியம்பாடியிலுள்ள எங்கள் கல்லூரியின் பழைய மாணவர்கள் 'எதேன்' என்னும் எங்கள் அமைப்பில் உற்சாகமாகப் பங்கு கொள்கிறார்கள். அது சிறுசிறு பிரச்னைகளுக்காகப் போராட்டம் செய்கிறது. அப்படிப் போராட்டம் செய்கையில் போராட்ட வாசகங்களைக் கூடக் கவிதையாகத்தான் எழுதுகிறார்கள்!



* விழா மேடை

'மேலும் ஆண்டுதோறும் எங்கள் கல்லூரியில் நடக்கும் 'கவிராத்திரி'யில் படிக்கப்படும் கவிதைகளைத் தொகுத்து நாங்களே எங்கள் கல்லூரியின் சார்பில் சிறு சிறு புத்தகங்களாகவும் வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். இதுவும் மாணவர்களின் உற்சாகத்தைத் தூண்டுவதாக இருக்கிறது...'' என்றார் கவிஞர் அப்துல் ரகுமான்.

உண்மையில், வெறும் கவிதைகளை மட்டும் படைக்கவில்லை அப்துல் ரகுமான். கவிஞர்களையும் படைக்கிறார் என்பது பாராட்டுக்குரிய விஷயம். இதில் அவருக்கு முழு ஒத்துழைப்பும் சுதந்திரமும் தரும் இஸ்லாமியாக் கல்லூரி நிர்வாகமும் நிச்சயமாகப் பாராட்டுக்குரியதே.

— பிரின்ஸ்


* இ. வெங்கடேசன்

படங்கள்: 'சுபா' ராமச்சந்திரன்



குளுமையோ குளுமை:
இதுவே அதன் திறம்
எல்லாம் புதிய கட்டுறுதியான
கம்ப்ரெஸர், கூடவே
பாலியூரத்தேன்
இன்சுலேஷன்.
இணையற்ற குளிர்விப்புத்
திறன் தருகிறது—புதிய கோத்ரெஜ்
165 லிட்டர் ரெ:ப்ரிஜிரேட்டர்.
நவீன தொழில்நுட்பத்தின்
உயர்வால் உருவான, எல்லாம் புதிய
கட்டுறுதியான கம்ப்ரெஸர், அத்துடன்
உலகத்தரத்திலான பாலியூரத்தேன்
இன்சுலேஷன் இரண்டும் இணைந்து
குளிர்விப்பு திறனை உயர்த்துகிறது;
மின் செலவைக் குறைக்கிறது.
உயர்தர கோத்ரெஜ் வடிவமைப்பு
காரணமாக, கண்டறியாத இடவசதி-
'டோர் பேனலி'லும், காய்கறி ட்ரேயிலும்.
மேலும், கோத்ரெஜ் தரும் சிறப்பான
நிறவரிசைகள் நீங்கள் தேர்ந்தெடுக்க;
எலெக்ட்ரிக் ரெட், ஸன்ஷைன் எல்லோ,
ஸ்பிரிங் கிரீன், டெஸர்ட் ஸாண்ட்
மற்றும் கூல் ப்ளு. கிளாஸிக் ஒயிட் கூட.
Godrej®
165 லிட்டர் ரெ:ப்ரிஜெரேட்டர்.
இதற்கு இணையேது !



நாளும் கோளும்

கையுறையை நீக்கி வெந்நீரில் போட்டு விட்டு, யோசனையுடன் நாற்காலியில் வந்து உட்கார்ந்தேன். பின்னாலேயே வந்த அந்தப் பெண் பிரபா என் எதிரிலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

'''நார்மல் க்ரோத்' இருக்கும்மா. அநேகமாக அடுத்த வாரம் 'டெலிவரி' ஆகலாம்'' என்றேன்.

''அடுத்த வாரமா?'' — ஏறக்குறையக் கத்தி விட்டாள். ஏற்கெனவே வெளுத்திருந்த அவளுடைய முகம்மேலும்வெளுத்தது. முகத்தில் கவலை ரேகை! பிரசவ பயமாக இருக்கலாம். முதல் பிரசவம் வேறு!

''ஏம்மா பயப்படறே? நார்மல் டெலிவரி தான்! தைரியமா இரு.''

''அதுக்கில்லே டாக்டர். அடுத்த வாரம் அமாவாசை வர்றது...''

''அதனால் என்ன?'' நான் புரியாமல் அவளைப் பார்த்தேன்.

''அமாவாசைல குழந்தை பிறந்தாத் இருடும்னு சொல்வாங்க. முதல் குழந்தையே இப்படியா பிறக்கணும்?'' — சலித்துக் கொண்டாள்.

நான் சிரித்து விட்டேன்.

''ஒரு குழந்தையை ஒழுங்காக வளர்த்து, நல்ல மனிதனாக உருவாக்குவது பெற்றோர் கையில்தாம்மா இருக்கு. அமாவாசைக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.''

என் பதிலில் அவள் சமாதானமடைந்ததாகத் தெரியவில்லை. தெளிவில்லாத முகத்துடனேயே என்னிடமிருந்து விடைபெற்றாள்.

மறுபடியும் பத்து நாட்கள் கழித்து அவள் அம்மாவுடன் ஆட்டோவில் வந்து இறங்கினாள். வயிறு நன்றாகத் தழைந்திருந்தது.

''அநேகமாக இன்னிக்கு 'நைட்' டெலிவரியாகிவிடும். ரொம்ப 'லேட்' ஆகப் பிறப்பதனால் பெண்ணாகத்தானிருக்கும்'' என்றேன்.

''ஐயோ! பெண்ணா?''

இந்த அலறல் எனக்குப் புதியதல்ல என்றாலும், ''ஏம்மா? பெண் ஒன்றும் இந்தக் காலத்தில் மட்டமில்லையே?'' என்றேன்.

''அதுக்கில்லே டாக்டர். இன்னிக்கு மூல நட்சத்திரம். 'பெண் மூலம் நிர்மூலம்'னு சொல்வாங்க'' என்றதும் நான் எரிச்சலுடன் நகர்ந்தேன்.

மறுநாள் பகல்தான் குழந்தை பிறந்தது. பெண் குழந்தை!

''என்னம்மா பிரபா! மூல நட்சத்திரம் தாண்டிடுச்சே? இப்ப திருப்திதானே உனக்கு?'' என்றேன் உண்மையான சந்தோஷத்துடன்.

அதற்கு அவள் சொன்ன பதில் என்னைத் திகைக்க வைத்துவிட்டது.

''மூல நட்சத்திரமாவது மாமியாரைத் தான் மூலைல வைக்கும்னு சொல்வாங்க. இவ பூராட நட்சத்திரத்திலே பிறந்திருக்கா. 'பூராடம் நூலாடாது'ன்னு சொல்லுவாங்க...'' அவள் முகத்தில் ஒரு வண்டிக் கவலை!

இதைக் கேட்டுக் கொண்டிருந்த, பக்கத்துப் படுக்கையில் இருக்கும் தம் பெண்ணைப் பார்க்க வந்த அந்த வயதான மூதாட்டி அருகில் வந்தார். முகம் நிறைந்த மஞ்சளும், நெற்றியில் பளீரிட்ட குங்குமமும் அவளைப் பழுத்த சுமங்கலியென அறிமுகம் செய்தது. அம்மூதாட்டிக்கு எண்பது வயதிருக்கும்.


''எனக்குப் பூராடம் நட்சத்திரம் தாம்மா. என் கணவர் இன்னும் நல்லாத் தாம்மா இருக்கார். பூராடம் நூலாடாதுன்னு சொல்றதெல்லாம் சும்மா. என்னையும் எல்லாரும் அப்படித்தான் சொன்னாங்க. சொன்னவங்களெல்லாம் போய்ச் சேர்ந்துட்டாங்க. 'பூராடம் நட்சத்திரம் என்றால், நூல் ஆடாமல் கெட்டியாக இருக்கும்' என்று அர்த்தம்'' என்றாள்.

அப்பெண்மணி சொன்னதைக் கேட்டவுடன் பிரபாவின் முகத்தில் பூரிப்பைப் பார்க்க வேண்டுமே! மகிழ்ச்சியுடன் குழந்தையை அணைத்துக்கொண்டு பால்கொடுக்கத் தொடங்கினாள்.

காஞ்சனா சந்திரசேகர்

"யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் தான் எவ்வளவு நல்லவர். என் வீட்டில், சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கு நவீன முறைகளை அறிமுகப்படுத்திய இனிய நண்பர் அவர்தான்"

திருமதி. அர்ச்சனா சம்பானி, பம்பாய்



வரும் நாட்கள் ஏதேனும் ஒன்றில் யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, அடையாளச் சீட்டுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வார்.

அவர் பேச்சில்தன்னம்பிக்கை தொனிக்கும் – இதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில், இவர் இந்தியாவிலே இது போன்ற நிறுவனங்களில் மிகப் பெரியதும் வெற்றி வாகை சூடியதுமாகிய விற்பனை நிறுவனத்தின் அங்கத்தினர் ஆவார். இந்நிறுவனம் விற்பனைக்குப் பின் நம்பகமான சேவை புரியும் பின்னணி கொண்டது.

தூசு, தும்பிலே அசுத்தம், அசுத்தமான நீர் மற்றும் வீட்டு வேலைகளில் உதவியின்மை போன்ற இன்றைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கென நவீன வீட்டுபயோக சாதனங்களை அவர் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார்.

செயல்முறை விளக்கத்திற்கு இவரிடம் இரண்டு இணையற்ற தயாரிப்புகள் உள்ளன: யூரோக்ளீன் – அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம். இது வேக்கம் க்ளீனரை விட சிறந்தது. மற்றும் அக்வாகார்ட் – நீர் குழாயிலேயே பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபயர்.

யூரோக்ளீன் – உங்கள் வீட்டில் உள்ள தூசு மற்றும் சிறு துரும்புகளையுங்கூட சிரமமின்றி எளிதில் அகற்றுகிறது. கண்ணிற்கு புலப்படாத தூசுகள்கூட அகன்று விடும். அக்வாகார்ட் – ஒரு ஸ்விட்சை இயக்கி, குழாயைத் திறந்தால், கிருமிகள் அற்ற பாதுகாப்பான, சுத்தமான குடிநீரை உங்கள் குழாயிலேயே நீங்கள் பெறலாம்.

உங்கள் குடும்பத்திற்கு, சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான நவீன முறையிலே இத்தயாரிப்புகள் எவ்விதம் வழங்குகின்றன என்பதை யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டிலேயே உபயோகித்து விளக்குவார். அதன் மூலம் உங்களைச் சுற்றிலும் சுத்தமும் சுகாதாரமும் நிறைந்த உலகம் உருவாகும்.

அவர் உங்கள் வீட்டிற்கு வரும் நாள் வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். விரைவில் வருகை புரிய கீழ்க்காணும் யூரேகா ஃபோர்ப்ஸ் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது இம் முகவரிக்கு எழுதுங்கள்: யூரேகா ஃபோர்ப்ஸ், பி.ஓ. பாக்ஸ் 936, ஜி.பி.ஓ. பம்பாய்-400 001.

யூரோக்ளீன்

அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம் – வேக்கம் க்ளீனரை விட சிறந்தது.

அக்வாகார்ட்

நீர் குழாயில் பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபயர்.

யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்

நவீன முறை சுத்தம் சுகாதாரத்தின் முன்னோடிகள்.

யூரோக்ளீன் சேல்ஸ் மற்றும் சர்வீஸ் சென்டர்களின் முகவரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நட்சத்திரக் குறியிட்ட இடங்களில் அக்வா கார்டும் கிடைக்கிறது.

யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்

தலைமை அலுவலகம் ஃபோர்ப்ஸ் பில்டிங், 4வது மாடி, சரண்ஜித்ராய் மார்க், ஃபோர்ட், பம்பாய் 400 001 ஃபோன் : 2047870 (5 லைன்கள்)

பம்பாய்

*1. ஆல் போனால், 50 பாலி ரோடு, பாந்த்ரா. ஃபோன் : 6442741/42.

*2. D-16, காமர்ஸ் சென்டர், தார்தேவ் மெயின் ரோடு. ஃபோன் : 4949183/6184.

*3. B-3, ஹேப்பி ஹோம் அபார்ட்மெண்ட்ஸ், 1வது மாடி, 66, வுடவுஸ் ரோடு, கொலாபா. ஃபோன் : 217458/217430.

*4. 71, நாகர், 2வது மாடி, ஹெக்ஸ்ட் ஃபாக்டரி எதிரே, எல்.பி.எஸ். மார்க், முலுண்ட், (மேற்கு) ஃபோன் : 5601082/5619148.

கல்கத்தா

*5. 7, சக்ரபேரியா ரோடு, (தெற்கு). ஃபோன் : 477964/5402

*6. 177, ராஜா தினேந்திரா சாலை, தேஷ்பந்து பார்க் எதிரே, ஷாம் பஜார் ஃபோன் : 555624.

டில்லி

*7. 402, அர்ச்சனா கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ், கிரேட்டர் கைலாஷ் பார்ட் 1, ஃபோன் : 6416143.

*8. 12/4, அஸப் அலி ரோடு, மித்தல் பில்டிங். ஃபோன் : 278065/270623.

*9. M/37, கிரேட்டர் கைலாஷ் II மார்க்கெட். ஃபோன் : 6449727/6433827.

*10. 203/204 ஜமுனா ஹவுஸ், பதம் சிங் ரோடு, கரோல் பாக். ஃபோன் : 5717722/5442.

சென்னை

*11. 733, அண்ணா சாலை, 2வது மாடி. ஃபோன் : 869846/861413.

*12. ஈஸ்ட் கோஸ்ட் சேம்பர்ஸ், 2வது மாடி, 92/ஜி.என் செட்டி ரோடு, தி. நகர். ஃபோன் : 446610/17.

பெங்களூர்

*13. ஃபாரூக் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ், 68, ஜே.சி. ரோடு. ஃபோன் : 224453/225673.

*14. 4305, ஹைற பாயின்ட்-4, 3வது மாடி, 45, பாலஸ் ரோடு. ஃபோன் : 27746.

கோயம்புத்தூர்

*15. எண். 61, மேற்கு, டி.வி. சாமி ரோடு, ஆர்.எஸ். புரம். ஃபோன் : 23180.

கோவா

16. சாந்திநிகேதன், இன்டோர் ஸ்டேடியம் அருகே, மிராமர், பணஜி.

ஹைதராபாத்

*17. 403, கலா மேன்ஷன், சரோஜினி தேவி ரோடு, செகந்திராபாத். ஃபோன் : 844128.

மதுரை

*18. 290, கே. கே. நகர் ஃபோன் : 45328.

சேலம்

*19. 19-C, சாரதா காலேஜ் ரோடு

திருச்சிராப்பள்ளி

*20. காவேரி, 79/80, ராஜா காலனி, சங்கம் ஹோட்டல் கன்டோன்மென்ட் பின்புறம்.

திருவனந்தபுரம்

*21. T.C. எண். 42/88, பங்கஜா பவன், கலிபங்குளம் தெரு, மணக்காடு. ஃபோன் : 79670.

87/EFL/470-R1-tm

இரும்பு விழா

விவேக் பதற்றப்பட்டான். "மிஸ்டர் காப்டன்! நீங்க ஏர்போர்ட்டை விட்டு வெளியே வரவேண்டாம். அர்ஜுன் கிருஷ்ணாவையும், சுஷ்மா பட்டேலையும் ஏற்றிக் கொண்டு போன மில்க் வேனை நாங்கள் ட்ரேஸ் அப் செய்து உங்களுக்குத் தகவல் அனுப்புகிறோம்."

"எனக்குக் கவலையாய் இருக்கிறது."

"கவலைப்படும்படியாக எதுவும் நடந்திருக்காது. பாதுகாப்புக் கருதி ஏர்போர்ட் வந்து சேர நேரம் எடுத்துக் கொண்டிருக்கலாம்..." விவேக் ரிஸீவரை வைத்துவிட்டு, அருகே நின்றிருந்த கமிஷனர் ஹில்லைக் கவலையாய் ஏறிட்டான்.

"ஏதோ நடந்திருக்கு ஸார். காப்டனுக்குத் தைரியம் சொன்னாலும் மனசு 'பக் பக்'னு இருக்கு."

"செக்யூரிடி கார்ட்களோடு ஏர்போர்ட் வரைக்கும் போய்ப் பார்த்துட்டு வந்துட்டா என்ன...?"

"அப்படித்தான் செய்யணும்..."

ரைஃபிள்ஸ் ஏந்திய செக்யூரிடி கார்ட்ஸ் நான்கைந்து பேர் ஜீப்பில் தொற்றிக் கொள்ள, விவேக்கும், கமிஷனர் ஹில்லும் புறப்பட்டார்கள். சோடியம்வேப்பர் விளக்குகளின் வெளிச்சத்தில் பிரகாசமாய் நனைந்திருந்த பம்பாய் ரோடுகளில், கசகசப்பான ட்ராபிக்கிற்கு நடுவில் ஜீப் சீறியது.

ஹில் சொன்னார். "நாம் போட்டுக் கொடுத்த திட்டப்படி வேன் முதலில் மில்க் சொஸைட்டி கட்டடத்திற்குள் நுழைந்து விட்டுப் பின் ஏர்போர்ட்டை நோக்கிப் போகணும். திட்டப்படி வேன் சொஸைட்டிக்குப் போயிருக்கா, இல்லையான்னு தெரிஞ்சுக்கணும்... மிஸ்டர் விவேக்..."

"அங்கே பார்த்துட்டுத்தான் ஏர்போர்ட் போகப் போறோம் ஸார்! ஜீப் டிரைவருக்கு ஏற்கெனவே இன்ஸ்ட்ரக்ஷன் குடுத்திருக்கேன்..."

"அர்ஜுன் கிருஷ்ணாவும், சுஷ்மா பட்டேலும் பேரர் யூனிஃபார்மில் மில்க் வேனில் ஏறியதை இந்தியக் கழுகுகள் மோப்பம் பிடித்திருக்க மாட்டாங்கன்னு உறுதியாக நம்பறீங்களா விவேக்...?"

"அந்த நம்பிக்கை இன்னமும் எனக்கு இருக்கு ஸார். திட்டத்தை நாமதுல்லியமாவே போட்டிருக்கோம். உண்மை எந்தெந்த மூலைகளில் கசியக்கூடும்ங்கிறதைத் தீர்மானம் பண்ணி, அதற்கேற்ற மாதிரி முன்னேற்பாடுகளையும் பண்ணியிருக்கோம்... வேன் டிரைவர் சீதாராமையும் கடந்த நான்கைந்து நாட்களா க்ளோஸ் அப்ஸர்வ் பண்ணி 'ஹிஸ் ஹார்ம்லெஸ்' என்கிற தீர்மானமான முடிவுக்கு வந்த பின்னாலேதான் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கோம்... ஸோ... தப்பு நடக்க வாய்ப்பே இல்லை..."

'மஹாராஷ்ட்ரா மில்க் சொஸைட்டி' நியான் போர்டு மின்னிய காம்பௌண்ட் கேட்டுக்கு முன்னால் ஜீப் நின்றது.

விவேக் கீழே இறங்கிப் போய் கேட்டிலிருந்த வாட்ச்மேனை விசாரித்தான். "சீதாராம் வேன் சொஸைட்டிக்கு வந்ததா...?"

"வந்துட்டுப் போயிடுச்சு ஸார்..."

"எத்தனை மணிக்கு வந்தது?"

"அரை மணி நேரம் இருக்கும் ஸார்."

விவேக் ஜீப்புக்கு விரைந்தான். கமிஷனரிடம் விஷயத்தைச் சொல்ல, அவர் நெற்றியைத் தேய்த்தார். "அப்போ... இங்கிருந்து ஏர்போர்ட் போகிற வழியில்தான் ஏதாவது நேர்ந்திருக்கணும்...! டிரைவர்! ஜீப்பை ஏர்போர்ட்டுக்கு விடு..."

ஜீப் முகத்தைத் திருப்பிக் கொண்டு, ஏர்போர்ட் இருந்த திசைப்பக்கம் வேகம் பிடித்தது. கொஞ்சம் கொஞ்சமாய் நகரச் சந்தடிகளை விட்டு விலகி, ஜீப் ஜுஹு பீச் ரோட்டுக்கு வந்து, கடற்காற்றை வாங்கிக் கொண்டே நிமிஷங்களைக் கரைத்தது. விவேக் கூப்பிட்டான்.

"டிரைவர்."

"ஸார்."

"ரோட்டோரமா வேன் ஏதாவது நிக்குதான்னு பார்த்துக்கிட்டே வாங்க..."

"எஸ்... ஸார்..."

தொலைவில் ஏர்போர்ட்டின் "ரன்வே பாதையின் சிவப்பு விளக்குகள் இருட்டின் பின்னணியில் ரத்தத் துளிகளாய் மின்னின. விவேக் அந்த அகலமான ரோட்டின் இரண்டு பக்கங்களையும் உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டே வந்தான்.

ஹில் கவலையான குரலில் சொன்னார்: "வேன் கடத்தப்பட்டிருக்கலாம்... விவேக்..." அவருடைய கவலை ஏற்கெனவே விவேக்கின் மனத்தில் உறைந்து போயிருந்தது. இருந்தாலும் கவலையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் புன்னகை செய்தான்.

"அப்படி கடத்தப்பட்டிருந்தால்... இந்நேரம்... அந்த இந்தியக் கழுகுகள் நம்மைத் தொடர்பு கொண்டு கொக்கரித்திருப்பார்கள் ஸார்..."

"பின்னே... அந்த வேனுக்கு என்னதான்

ராஜேஷ்குமார்

நடந்திருக்கும்...?'' — ஹில் அந்த இரவு நேரத்திலும் வியர்த்துப் போயிருந்த தம் முகத்தைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டார்.

ஏர்போர்ட் நெருங்கியது.

வெளியே பரந்திருந்த கார் பார்க்கிங்கில் காண்டஸாக்களும், மாருதிகளும் இறைந்து கிடக்க, டிரைவர் ஜீப்பை நிறுத்துவதற்காகத் தோதான ஓர் இடம் பார்த்துக் கொண்டிருந்த அதே விநாடி —

விவேக்கின் பார்வையில் —

ஓர் அம்பாசிடருக்கும் ஒரு பியட்டுக்கும் மத்தியில் நின்றிருந்த அந்த மில்க் சொஸைட்டி வேன் பட்டது.

மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்த ஜீப்பை விட்டுக் குதித்து, விவேக்கும் ஹில்லும் அந்த மில்க் வேனை நோக்கி ஓடினார்கள். வேனின் பானட்டைத் திறந்து வைத்துக் கொண்டு ஸ்பேனரால் எதையோ திருகிக் கொண்டிருந்த டிரைவர் சீதாராம் சத்தம் கேட்டு நிமிர்ந்தான்.

''ஸார்...''

''சீதாராம்! அவங்க ரெண்டு பேரும் எங்கே...?''

''ஏர்போர்ட்டுக்குள்ளே போயிட்டாங்க ஸார்.''

''இங்கே வர்றதுக்கு ஏன் இவ்வளவு நேரம்...?''

''வழியில் வண்டி நின்னுடுச்சு ஸார்... சரிப்படுத்தி ஏர்போர்ட் வர்றதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சு ஸார்.''

''எத்தனை மணிக்கு ஏர்போர்ட் வந்தே?''

''இப்பத்தான் ஸார்... ஒரு அஞ்சு நிமிஷம் இருக்கும்...''

''வேனை யாராவது ஃபாலோ பண்ணினாங்களா...?''

''இல்லே... ஸார்...''

''வேன் மக்கர் பண்ணினதைத்தவிர வேறு எந்தத் தொந்தரவும் இல்லையே?''

''இல்லை ஸார்...''

''சரி... நீ இங்கேயே இரு... இப்ப வந்துடறோம்'' ஹில்லும் விவேக்கும் உள்ளே லௌஞ்சை நோக்கிப் போனார்கள். என்கொயரி கௌண்டர் அருகே நின்று, டெலிபோன் டயலைச் சுழற்றிக் கொண்டிருந்த பைலட் அலெக்ஸாண்டர் இவர்களைப் பார்த்ததும் கையிலிருந்த ரிஸீவரை வைத்து விட்டு ஓடிவந்தார்.



''ஸார்... தே அரைவ்ட்...''

''எங்கே இருக்காங்க...?''

''ஃபிளைட்டிலே உட்கார்ந்துக்கிட்டிருக்காங்க...! அவங்க ஏர்போர்ட் வந்து சேர்ந்த விவரத்தை கன்வே பண்ணத்தான் டெலிபோன் டயலைச் சுத்திக்கிட்டிருந்தேன்...''

விவேக் பெருமூச்சு விட்டான்.

''ரெண்டு பேரும் ஏர்போர்ட் வந்து சேரலைன்னு நீங்க சொன்னதும் எக்கச்சக்கமா அரண்டு போயிட்டோம்...''

''இனிமே வி நீட் நாட் ஒர்ரி... அவங்க ஏர்போர்ட்டுக்குப் பத்திரமா வந்து சேர்ந்துட்டாங்க. அதே மாதிரி துபாய் ஏர்போர்ட்டுக்குப் பாதுகாப்பாக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது என்னோட கடமை...''

இருவரிடமும் அலெக்சாண்டர் கைகுலுக்கிவிட்டு, ரன்வேயில் காத்திருந்த அந்த ராணுவ விமானத்தை நோக்கிப் போனார்.

''காப்டன்.''

விவேக் கூப்பிட, அவர் நின்றார்.

''எஸ்...''

''நான் அர்ஜுன் கிருஷ்ணாவோடும், சுஷ்மா பட்டேலோடும் பேசணும்...''

''ஃபிளைட்டுக்கு வர்றீங்களா?''

''வேண்டாம். கண்ட்ரோல் ரூமிலிருந்து நான் பேசறேன். அவங்க ரெண்டு பேரையும் காக்பிட்டிலிருந்து பேசச் சொல்லுங்க...''

''ஓ. கே... நீங்க கண்ட்ரோல் ரூமுக்குப் போங்க... மிஸ்டர் அய்யங்கார் இருப்பார். ஹி வில் ஹெல்ப் யூ...''

விவேக்கும் ஹில்லும் கண்ட்ரோல் ரூமை நோக்கிப் போனார்கள். அடுத்த சில நிமிடங்களில், ஃபிளைட்டின் காக்பிட்டிலிருந்து அர்ஜுன் கிருஷ்ணாவின் குரலும், சுஷ்மா பட்டேலின் குரலும் மைக்ரோ ரிஸீவரில் வழிந்தது.

''வீ.. ஆர்... இன் ஸேஃப் ஸார்.''

விவேக்சிரித்தான். ''எல்லாக்கட்டங்களையும் தாண்டியாயிற்று. நீங்கள் இருவரும் துபாய் போய்ச் சேர்ந்தால் திட்டத்திற்கு முழு வெற்றி.''

''முன்பு... எங்களுக்கு இருந்த அந்த பயமும் பதற்றமும் போய்விட்டது.''

''குட்... விஷ்... யூ... ஆல்... த பெஸ்ட்...'' சொன்ன விவேக் ஹெட்போனைக் கழற்றிவிட்டு எழுந்தான். கண்ட்ரோல் ஆபீஸர் அதை வாங்கிப் பொருத்திக் கொண்டு அறையின் கண்ணாடிச் சதுரத்திற்கு வெளியே ரன்வேயில் நின்றிருந்த விமானத்தைப் பார்த்துக் கொண்டே க்ளியரன்ஸ் கொடுக்க ஆரம்பித்தார்.

''செவன் சிக்ஸ் நைன்... திஸ் ஈஸ் பாம்பே கண்ட்ரோல் டவர். க்ளியர் ஸ்கை. நோ... க்ளவுட்ஸ்... வெதர் ஈஸ்... ஓ...கே... பிக்கப் த ரன்வே நம்பர் த்ரீ... க்ளியர்... கோ... அஹெட்...''

அலெக்ஸாண்டரின் குரல் காக்பிட்டிலிருந்து வழிந்தது. ''திஸ் ஈஸ் செவன் சிக்ஸ் நைன்... ரெடி ஃபார் டேக் ஆஃப்.''

''க்ளியர் ஃபார் டேக் ஆஃப்.''

கண்ணாடி ஜன்னலுக்கு வெளியே — இருட்டான ரன்வேயில் அந்த ராணுவ விமானம் ஊர்ந்தது. வேகம் பிடித்தது. எதிரே கான்கிரீட் ரன்வே ஓடிவர, அசுர வேகத்தில் பாய்ந்து டயர்கள் சூடு பறக்க, 'கும்ய்க்க்க்க்' என்று கத்தி வீச்சாய்ச் சீறி —

ரன்வேயின் முடிவு வருவதற்குள் இருட்டான வானத்தில் வால் பகுதியிலும், இறக்கைப் பகுதிகளிலும் கலர் கலராக விளக்குகளைக் காட்டிக் கொண்டே எம்பியது. சாய்வாய் உயர்ந்தது.

விமானம் பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு கண்ட்ரோல் டவரினின்றும் கீழே இறங்கி, லௌஞ்சில் நடந்து, ஏர்போர்ட்டுக்கு வெளியே வந்தார்கள்.

மில்க் வேன் டிரைவர் சீதாராம் வாசலிலேயே காத்திருந்தான். விவேக் கேட்டான். ''என்ன ரிப்பேர் முடிஞ்சுதா?''

''முடிஞ்சுது ஸார்...''

''சரி, வேனை எடுத்துக்கிட்டு சொஸைட்டிக்குப் போயிடு.''

''நாளைக்கு வரணுமா ஸார்?''

''பின்னாடி சொல்றேன். உன்னோட வேன் மக்கர் பண்ணினதினாலே முதல் நாளே குளறுபடி. எதிரிகள் இந்நேரம் நம்மை ஸ்மெல் பண்ணியிருக்கலாம்...'' சொல்லிக் கொண்டே ஜீப்புக்கு வந்தான் விவேக்.

எல்லோரும் ஜீப்புக்குள் அடைக்கலமாகி, அது நகர ஆரம்பித்தபோது உள்ளேயிருந்த வயர்லெஸ் 'பீங்க்... பீங்க்' என்றது.

விவேக் ஹெட்போனை மாட்டிக் கொண்டான்.

''எஸ்...''

''வயர்லெஸ் கண்ட்ரோல்... போலீஸ் ஹெட்குவார்ட்டர்ஸ்... மிஸ்டர் விவேக்... மிஸ்டர் விவேக்!''

''எஸ்... நான் விவேக்.''

''ஸார்... ஒரு அவசரச் செய்தி...''

''சொல்லுங்கள்...''

''விமானம் புறப்பட்டு விட்டதா...?''

''இப்போதுதான் புறப்பட்டது...''

''அதை உடனே தரையிறக்க வேண்டும். டெலிபோனில் ஒரு செய்தி வந்தது!''

''என்ன செய்தி?''

''துபாய் புறப்பட்டுச் சென்றுள்ள அந்த விமானம் இன்னும் சில நிமிஷங்களுள் வெடித்துச் சிதறப் போவதாக ஒரு பெண் டெலிபோனில் பேசினாள்.''

''பெண்?''

''ஆமாம்...''

''வேறு ஏதாவது சொன்னாளா?''

''இல்லை. அந்த ஒரு வாக்கியத்தை மட்டும் சொல்லிவிட்டு ரிஸீவரைப் பலத்த சத்தத்தோடு அறைந்து வைத்துவிட்டாள்.''

விவேக் ஹெட்போனைக் கழற்றி விட்டு ஜீப்பினின்றும் குதித்து ஒரு சின்னப் புயல் மாதிரி ஏர்போர்ட் லௌஞ்சிற்குள் ஓடினான்.

(தொடரும்)

பிள்ளைக்காக...



தமது மனைவியை அநியாயமாய்க் கொலை செய்து, தம்மேல் அபாண்டப் பழியைச் சுமத்தித் தலைமறைவாய் வாழச் செய்த சதிகாரக் கும்பலைக் கூண்டோடு பழி தீர்த்துச் சாவுபுரம் சேர்கிறார் ஒரு காவல் அதிகாரி.

இந்தக் கதைக்குப் 'பிள்ளைக்காக' என்ற தலைப்பு எப்படிப் பொருந்தும் என்று கேட்காதீர்கள். கதாபாத்திரங்களில் ரொம்பப் பேர் 'பிள்ளைக்காக' என்று சொல்லிச் சொல்லித் தலைப்பை உறுதிப்படுத்துகிறார்களாக்கும்!

கதாநாயகன் பிரபு அடிதடியில், முறைப்பில், முரட்டுத்தனத்தில் தூள். அதை விடுங்கள். தம் மனைவிக்கு இனி குழந்தை பிறக்காது என்ற முடிவில் பெற்றோரற்ற ஒரு பெண் குழந்தையைத் தம் குழந்தையாய் எடுத்து வளர்க்கிறார். எதிர்பாராத விதமாய் மனைவி தாய்மை அடைகிறார். அப்போது அவளைத் தனியாய் அழைத்துப் போய், 'நமக்குத்தான் குழந்தை வந்துவிட்டதே' இனி அர்ச்சனா (வளர்ப்புக் குழந்தை) நம்முடன் இருக்கணுமா? அதை ஏதாவது ஹாஸ்டல்ல கொண்டு போய்ச் சேர்த்துடலாம்,' என்று சொல்லி மனைவியை ஆழம் பார்க்கும் அந்தப் பார்வையில், எதிர்பார்த்தபடி மனைவி ரேகா வளர்ப்புக் குழந்தையைப் பிரியாதிருக்கத் தன் வயிற்றுக் குழந்தையைப் பிரியத் தயாராய் இருப்பதாய்ச் சொன்னதும், புன்னகையில், 'இந்த மனநிலை உனக்கு இருக்கான்னு தெரிஞ்சிக்கத்தான் அப்படிக் கேட்டேன்,' என்று முகம் முழுக்க நிம்மதி காட்டும் அந்த நிறைவில் எத்தனை முதிர்ச்சி!

ரேகா ரொம்பத் தேறிவிட்டார். தான் கருத்தரிக்காதது ஏன் என்று இருவரும் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று கணவரிடம் பலமுறை வற்புறுத்தியும் அவர் தட்டிக் கழித்துக் கொண்டு வர, பொறுமையிழந்த கட்டத்தில், 'டாக்டரண்டை ஏன் கூட்டிப் போக மாட்டேங்கறீங்க? என்கிட்டே மறைக்காதீங்க. சொல்லுங்க, உங்களுக்கு என்ன குறை?' என்று பிரபுவின் சட்டையை இறுக்கி உலுக்கிக் குமுறும் ஆவேசத்திலாகட்டும்; பிரபு தன்னையும்மீறி, 'கோளாறு என்கிட்டே இல்லே; உன்னிடம்தான்,' என்று சொல்லிவிட்டுத் திணறும்போது ரேகா அப்படியே உடைந்து போய் உட்கார்ந்து விடுகிறாரே அந்தப் பரிதவிப்பிலும் சரி டிஸ்டிங்ஷன்.

ஸ்கேட்டிங் கௌதமி மனசுக்குள் பாய்கிறார் என்றாலும் சற்றுக் குழப்பக் காரெக்டர்.

பாவம் ரூபிணி! நாதியில்லாமல் உயிரை விடுகிறார். எதற்காக? பிள்ளைக்காக என்று இந்தப் படத்துக்குத் தலைப்புக் கொடுப்பதற்காக!

தம்மாத்தூண்டு நகைச்சுவையில் சின்னி ஜெயந்தின் பங்கு இருந்தாலும் நறுக்கென்ற மாவடுக் 'கடி' புதுமுகம் பாண்டுவிடம். பிரபு அடித்து நொறுக்கும் போது, ஓரம் கட்டிய ஜவான் பாண்டு, ஒவ்வோர் அடி, குத்து வகைக்கும் என்ன பேர் என்று, தன் இஷ்டத்துக்கு அளக்க, கேட்டுக் கொண்டிருந்த ஆசிரியர் கடி தாங்காமல் காணாமல் போவது குபீர்ச் சிரிப்பு.

டாக்டர் நாஸர் எந்த நிமிஷத்தில் திசை மாறப் போகிறாரோ என்று மனசுக்குள் ஓர் உறுத்தலாய் இருந்து கடைசிவரை யோக்கியராய் நின்றது ஆறுதலாய் இருக்கிறது. (மன்னிக்கவும், அவர் மேல் அப்படியொரு வில்லன் முத்திரை விழுந்துவிட்டதே!)

மணி கட்டித் தொங்கவிட்ட தேள் கொடுக்குக் குடுமியோடு ஒன்று, நீண்ட முடிக்கு எச்சில் தொட்டு நீவி விட்டுக் கொள்ளும் அசிங்கம் ஒன்று – இந்த மாதிரி வில்லன் ரகங்களை ஒற்றி எடுத்திருந்தாலும் தமிழுக்கு ஒட்டி எடுத்திருக்கக் கூடாதோ?

இத்தனைக்கும் நடுவில் அந்தக் குழந்தை சுஜி படும் அவஸ்தை – குறிப்பாக, குழந்தையைத் தேடி வரும் வில்லனை அது அடையாளம் கண்டு கொண்டு கட்டிலடியில் பதுங்கிய நேரத்தில் வலிப்புக்கு ஆளாகி மருண்டு நோக்கும் அந்தப் பார்வை மனசைப் பிழிகிறது.

செண்ட்டிமெண்ட்டுடன் செமை மசாலா கலந்து ஒரு படம் பண்ண முடியுமா? முடியும். உதாரணம்: பிள்ளைக்காக.

— பி. எஸ். எஸ்.

ரூ.560 சேமிப்பு, ஒவ்வொரு லைட் பாயிண்டிலும்! மைசூர் லாம்ப்ஸ் வாக்குறுதி.



அதிக ஒளி தந்து, நீண்ட காலம் உழைப்பவை மைசூர் லாம்ப்ஸ் ட்யூப் லைட்டுகள்

3.2 சாதாரண பல்புகள் தரக்கூடிய ஒளியை, ஒரே ஒரு மைசூர் லாம்ப்ஸ் ட்யூப் லைட் தருகிறது. அதுமட்டுமல்ல, 16 பல்புகளின் ஆயுள் காலத்திற்கு ஈடான ஆயுளை ஒரு ட்யூப் லைட் தருகிறது.

மேற்கூறிய 16 பல்புகளின் ஆயுள் காலத்தில் நீங்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் ரூ. 768* ஆனால் ஒரு மைசூர் லாம்ப்ஸ் ட்யூப் லைட்டுக்கு ஆகும் மின் கட்டணம் ரூ. 208/- மட்டுமே.

இந்த வகையிலே, 5000 மணி நேரம் ஒளிதரக் கூடிய மைசூர் லாம்ப்ஸின் ஒவ்வொரு ட்யூப் லைட் மூலமாகவும் ரூ. 560/- சேமிக்கிறீர்கள்.

வீட்டிற்கு மட்டுமல்ல, ஒவ்வொரு ஆண்டும் ரூ. 198 கோடி சேமிப்பை தந்து, நாட்டிற்கும் நாங்கள் நல்லதொரு சேவை புரிகிறோம்.

நம்பமுடியாத விஷயம்தான், ஆனால் உண்மை அதுதான்.



MYSORE Lamps

வீட்டிற்கு தருவது ஒளி,
நாட்டிற்கு தருவது சேமிப்பு.

* யூனிட்டிற்கு சராசரி 80 பைசா என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்டுள்ளது.

CLARION-BL/MLW/8895/TAM

10

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — VI

ராஜ்மோகன் காந்தி



● ஸி. ஆர்.: ...செப்பனிட முடியாத பாதிப்பு.

வெகுஜனக் கவர்ச்சி என்ற அம்சத்தில் சுதந்திரக் கட்சி மிகவும் பின்தங்கியிருந்தது மட்டுமல்ல; அதில் அங்கம் வகித்தவர்கள் பல் வேறு கருத்துக்களையும் நோக்கங்களையும் கொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் 'அரசாங்கத்தினிடம் குறைந்தபட்ச அதிகாரம் மக்களுக்கு அதிகபட்ச சுதந்திரம்' என்ற கொள்கையில் கருத்து ஒற்றுமை இருந்தது. ஆனால் இந்த ஒற்றுமையானது அவர்களிடையே நிலவிய வேறு பல வேற்றுமைகளை மறைத்துவிட முடியவில்லை. உதாரணமாக ராஜாஜி, முன்ஷி இருவருமே தலைவர்கள் பலருக்குஹிந்தி பற்றியராஜாஜியின் கருத்தை ஏற்பது மிகவும் கஷ்டமான ஒன்றாகவே இருந்தது.

கேரளத்தின் கம்யூனிஸ்ட் அமைச்சரவையைப் புதுதில்லி டிஸ்மிஸ் செய்து சட்டசபையையும் கலைத்தபோது மேலும் ஒரு வேற்றுமை தலையெடுத்தது. மத்திய அரசின் முடிவை மசானி வரவேற்றார். ஆனால் ராஜாஜியோ

ஜெயிக்கிற குதிரை மீது 'பெட்' கட்டு!

இந்தியப் பண்பாட்டில் தாங்கள் வேரூன்றியவர்கள் என்பதைக் காண்பித்துக் கொண்டார்கள். ராஜாஜி, தம்மை 'கன்ஸர்வேடிவ்' — அதாவது பழைமையில் உள்ள நல்லவைகளைப் பேணிப் பாதுகாப்பவர் என்று வகைப்படுத்திக் கொள்ள என்றுமே தயங்கியதில்லை. இதற்கு நேர்மாறாக மஸானியும் மோடியும் மேற்கத்திய நாகரிகங்களுக்குப் பழகிப் போயிருந்தார்கள். தொழில் துறையில் நவீனங்களைப் புகுத்துவதில் ஈடுபாடு கொண்ட 'லிபரல்'களாக இருந்தனர்.. ராஜாஜி ஹிந்தியை எதிர்த்து நடத்திய போராட்டத்தை முன்ஷியால் வரவேற்க முடியவில்லை. அவர் தீவிர ஹிந்தி ஆதரவாளராகவே இருந்தவர். முன்ஷி மட்டுமின்றி, ராஜாஜிக்கு ஆதரவு தந்த- வட இந்தியத்



● நேரு: தாக்குதல் பிரசாரம்.....

எதிர்ப்புத் தெரிவித்தார். ''கம்யூனிஸ்ட்டுகள் இப்போது நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பங்கேற்கிறார்கள். அவர்களை ஜனநாயக மரபுகள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. அவர்களை இந்த மாதிரி நடத்தினால் அவர்கள் மீண்டும் தலைமறைவாகிச் சதிச் செயல்களில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாவார்கள். மேலும் சட்டசபையில் அவர்களது பெரும்பான்மை பலம் குறையவில்லை என்பது தெளிவாக இருக்கும் போது ஆட்சியை டிஸ்மிஸ் செய்வது அரசியல் சாசனத்துக்கு விரோதமானது. எனக்கு கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கைகள் உடன்பாடானவை அல்ல. ஆனால் அவர்களை நடத்த வேண்டிய விதம் இதுவல்ல'' என்று சுயராஜ்யாவில் ராஜாஜி எழுதினார். மஸானி கருத்து மாறுபட்டார். 'ஓர் அமைச்சரவை மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளதா இல்லையா என்பதை ஆளுனரும் குடியரசுத் தலைவரும் சட்டசபைக்கு வெளியே நடக்கும் நிகழ்ச்சிகளின் அடிப்படையிலும் கணித்து ஒரு முடிவுக்கு வரலாம்'' என்றார் அவர்.

இப்படிப் பல அம்சங்களில் கட்சிக்குள் கருத்து மாறுபாடுகள் இருந்த போதிலும் அவை கட்சியை அதிகமாகப் பாதித்ததாகத் தெரியவில்லை. இதற்கு முக்கிய காரணம், கட்சியின் கொள்கைகளுள் கடைசியான இருபத்தோராவது கொள்கை. இருபது கொள்கைகளில் கட்சி உறுப்பினர்களின் ஏகோபித்தஒற்றுமையைவேண்டியசுதந்திரக் கட்சி, இந்தக் கொள்கைகளுக்கு அப்பாற்

பட்ட விஷயங்களில் உறுப்பினர்களுக்குப் பூரண கருத்துச் சுதந்திரம் வழங்கியது மட்டுமல்ல, அந்தக் கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்து அதனை இருபத்தோராவது அடிப்படைக் கொள்கையாக்கியது!

இந்த இருபத்தோராவது கொள்கை பற்றி ஸி. ஆர். மிகுந்த பெருமிதம் கொண்டிருந்தார். அதுபற்றி பம்பாய் மாநாட்டில் விளக்கிப் பேசவும் செய்தார்:

"நாட்டின் ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்க வேண்டும்; அதனைக் கைவிடக் கூடாது என்பதே என் கருத்து. ஆனால் கட்சியில் உள்ள பெரும்பான்மையினர் என் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே செய்வார்கள். பெரும்பான்மைக் கருத்துப் படிதான் இறுதியில் காரியங்கள் நடக்கும் என்றாலும் அதற்காக என் கருத்தை நான் மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இன்னோர் உதாரணம் கூறுகிறேன். மதுவிலக்கு தமக்கு உடன்பாடானது அல்ல என்று மோடி சொல்வார். ஆனால், நான் மதுவிலக்கு அதிகாரபூர்வமாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பேன். ஆனால் இந்தக் கருத்து சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று அல்ல. அவரவரும் நன்கு யோசித்து, தமது மனச்சாட்சிக்கு எது சரி என்று படுகிறதோ அந்தக் கருத்தைக் கொண்டிருக்கலாம்."

கட்சிக்குப் பணம் இல்லாதது பெரிய குறைபாடாக இருந்தது. 'சுதந்திரக் கட்சி பணக்காரர்களின் கட்சி' என்று நேரு குத்திய முத்திரை நன்கு ஒட்டிக் கொண்ட போதிலும் உண்மையில் கட்சி பணமில்லாததால் மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாயிற்று. ராஜாஜியும் அவரது தோழர்களும், அரசியல் கட்சிகளுக்குத் தொழில்—வர்த்தக நிறுவனங்கள் நன்கொடை அளிப்பதைத் தடை செய்து சட்டம் இயற்ற வேண்டும் என்று கூறினர். ஆனால் நேரு இந்த யோசனையை ஏற்கவில்லை. அநேகமாக எல்லா நிறுவனங்களுமே காங்கிரஸுக்குத்தான் நன்கொடைகள் அளித்தன. போதாக் குறைக்கு, "எந்த நிறுவனமாவது சுதந்திரக் கட்சிக்கு நன்கொடை தந்துவிட்டுக் காங்கிரஸுக்கும் நன்கொடை அளித்தால் அந்த நன்கொடையை நான் வேண்டாம் என்று மறுதலித்து விடுவேன்" என்றும் நேரு கூறினார். சில நிறுவனங்கள் சுதந்திர கட்சிக்குப் பணம் தந்தாலும் அதைப் போல் பல மடங்கு பணத்தைக் காங்கிரஸுக்கும் தந்தன. காங்கிரஸ் கட்சி எந்த நன்கொடையையும் திருப்பித் தந்து விடவில்லை. "தொழில்—வர்த்தக சமுதாயத்தின் இதயம் நம் பக்கம் உள்ளது; ஆனால் அவர்களுடைய பணம் பல நிர்ப்பந்தங்களின் காரணமாகக் காங்கிரஸிடம் இருக்கிறது" என்று குறிப்பிட்டார் ஸி. ஆர். இவ்விஷயத்தில் ஹோவர்ட் எர்ட்மன் என்ற அமெரிக்கரின் கூற்று, ஒரு நடுநிலையாளரின் தீர்ப்பாகவே அமைந்திருக்கிறது. அவர் சொன்னார்:


"சுதந்திரக் கட்சியின் கணக்கு வழக்குகளைப் பார்க்கின்ற வாய்ப்புப் பெற்ற யாருமே, அதனைப் பணக்காரர்களின் கட்சி என்பதாக ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள்."

'பணக்காரர்களின் கட்சி' 'குழப்பக்கட்சி' என்றெல்லாம் வர்ணித்தது போதாதென்று நேரு, சுதந்திரக் கட்சியை, 'ஜமீன்தார்களின் கட்சி' என்றும், 'ஃபாஸிஸக் கருத்துக்களை உடைய கட்சி' என்றும் கூட வர்ணித்தார். பிரதமருடைய பிரசாரத்தின் வீச்சினைச் சுதந்திரக் கட்சியால் ஈடு செய்ய முடியவில்லை என்பதோடு அதனால் கட்சிக்கு ஏற்பட்ட பாதிப்பினையும் செப்பனிட முடியவில்லை.

"அரசியல் சாசனத்தை லட்சியம் செய்யாமல் அதனை மீறிக் காரியங்கள் செய்வதும், வெகு ஜனங்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அதன் மூலம் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் தந்திரமும்தான் ஃபாஸிஸம் எனப்படும்" என்பதாக சுயராஜ்யாவில் விளக்கிவிட்டு, "எந்தக் கட்சி ஃபாஸிஸக் கொள்கை உடையது என்பதை மக்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்" என்று ராஜாஜி எழுதினார். ஆனால் இதனை அகில இந்திய ரேடியோ ஒலி பரப்புமா? ஒரு சில பத்திரிகைகளே இந்த மறுப்பை எடுத்துப் பிரசுரித்தன. ஆக மொத்தம், நேருவுடன் ஓர் ஒட்டப் பந்தயம் நடத்தி வெற்றி காண்பது என்பது மிகவும் கஷ்டம் என உணரப்பட்டது.

ஸி. ஆருடைய நிலை, கொள்கை ரீதியாக, அறிவுபூர்வமாக மிகச் சிறந்த ஒன்று. ஆனால் பணக்காரர்களும் சரி, அரசியல் வாதிகளும் சரி, ஜெயிக்கிற குதிரை மீதுதான் 'பெட்' கட்ட விரும்பினார்கள். அவர்களைப் பெருவாரியாகச் சுதந்திரக் கட்சி ஈர்க்கவில்லை.

(தொடரும்)



அடுத்த இதழில்...

எதிர்க்கட்சிகள் ஒற்றுமை: ஹெக்டே நிலை என்ன?

—கவர் ஸ்டோரி

தொச்சு போட்ட சோப்

அகஸ்தியன்

வீட்டிற்குள் நுழைந்தபோதே சமையலறையிலிருந்து தொச்சுவின் குரல் கேட்டது. என் முகத்தில் விழிக்காதே என்று சில வாரங்களுக்கு முன்பு அவனைக் கோபித்து அனுப்பியிருந்தேன். அதனால்தானோ என்னவோ, நான் இல்லாத சமயம் பார்த்து வீட்டிற்குள் (அதாவது சமையலறைக்குள்) படை எடுத்திருக்கிறான். உள்ளே படையலும் நடந்து கொண்டிருக்கும்!

அருமை அம்மாவிற்கும் அக்காவிற்கும் சோப் போட்டு விட்டு கையிலும் பையிலும் (தொப்'பை'யில் நிரம்பிய பிறகு!) வாங்கிக் கொண்டு போவான். ஆகவே என்ன சோப் போடுகின்றான் என்று கேட்க, பூனை போல் வீட்டிற்குள் நுழைந்தேன்.

என் மாமியார், ''ஆமாண்டி, கமலா, உழைச்சாத்தான் லாபம். லாபம் மட்டுமில்லை. நமக்குக் கிடைக்கிற பொருளும் உசத்தியாக இருக்கும்.... அப்ப என்னடா சொல்றே...நம்ப வீட்டிலேயே செய்யலாம்னு சொல்றியா?'' என்று கேட்டாள்.

''வீட்ல செய்யக் கூடியது என்பதால்தானே டீவியிலே சொன்னாங்க.... அக்கா எல்லாத்தையும் குறிச்சுக் கொடுத்தாள். நானும் மார்க்கெட்டெல்லாம் அலைஞ்சு எல்லாச்சாமானும் எங்கெங்கே கிடைக்கறதுன்னு கண்டு பிடிச்சுட்டு வந்தேன். ஆட்டோவிற்கே நூறு ரூபாய்க்குமேலே ஆயிடுத்தே?'' என்றான் தொச்சு.

''நூறு ரூபாய் தானேடா... நான் தறேன்...'' என்று கமலா சொன்னதும்....

''போதும் அக்கா... இதுக்கெல்லாம் போய் உன் கிட்ட பணம் வாங்கிப்பேனா?... போன வாரம் கூட பம்பாய்க்கு போன் பண்ணதுக்காக நூறு ரூபாய் கொடுத்தே...''

தொச்சு சொல்வதைக் கேட்ட போது எனக்கு ஒரே எரிச்சல். அதே சமயம் குழப்பம். இவர்கள் என்ன திட்டம் போடுகிறார்கள். என் அருமை சதி, பதிக்கு எதிராக என்ன சதி செய்கிறாள் என்று புரியவில்லை!

''தொச்சு... இன்னும் ஒரே ஒரு தோசை போடறேண்டா'' என்று மாமியார் சொன்னதும், சமையலறையில் நிசப்தம் நிலவியது. தொச்சுவின் வாய்க்கு வேறு வேலை கிடைத்து விட்டதே!

''என்ன கமலா... யாரு வந்திருக்கிறது, உன் தம்பிக்காரனா?'' என்று வார்த்தைகளைப் பாவக்காய் ஜூஸில் தோய்த்துக் கேட்டேன்.

கமலா கையில் காப்பியுடன் வந்தபடியே ''ஆமாம்... தொச்சுதான். டீவியிலே மனைமாட்சி புரோகிராம் பற்றிச் சொன்னேனே நினைவு இருக்கா? மனைமாட்சி புரோகிராம்'' என்று கேட்டாள்.

''என்ன கிராம்? என்ன கிலோ....? யாருக்கு நினைவு இருக்கு. முன்னுரை, முகவுரை, அணிந்துரை என்று சொல்லாமல் விஷயத்துக்கு வா...'' என்றேன்.

''வீட்டிலேயே சோப் பவுடர் பண்றதைப் பத்திச் சொன்னாளே...''

''ஆமாம். எல்லாம் வாங்கிப் பண்ணினால் 'சீப்'பாகத் தயார் பண்ணலாம். சுத்தமாகவும் இருக்கும்... அப்படி இப்படின்னு சொல்வாங்க. எந்த சாமான் என்ன விலை, எங்கே கிடைக்கும்னு சொல்ல மாட்டாங்க. டீ.வி. புரோகிராமைப் பார்த்து எல்லாரும் செய்ய ஆரம்பிச்சுட்டா, சோப் பவுடர் கம்பெனியெல்லாம் தலையிலே ஈரத் துணியைப் போட்டுக்க வேண்டியதுதான்... அதிருக்கட்டும், என்னமோ சொல்ல வந்தியே...?''

''தொச்சுகிட்டச் சொன்னேன். அவன்



''இந்தப் புத்தகத்தை ஒரே மூச்சில் படிக்காதீர்கள். மிகவும் போரடிக்கும். விட்டு விட்டுப் படியுங்கள். கொஞ்சமாகப் போரடிக்கும்!''

— இப்படித் தமது லேட்டஸ்ட் புத்தகம் பற்றி அந்த நூலிலேயே தாமே விமர்சனம் எழுதியுள்ளார் அகஸ்தியன். தலைப்பு: ''கமலாவும் கத்திரிக்காய் கூட்டும்!'' பிரசுரம்: நந்தினி பதிப்பகம், M 104/19, பெசன்ட் நகர், சென்னை — 600 090. விலை ரூ. 18/-.

அந்த நூலில் உள்ள இருபதுக்கு மேற்பட்ட கதைகளில் ஒன்று அல்ல இது. இந்த வாரக் கல்கிக்கென்றே அகஸ்தியன் எழுதி அனுப்பிய புதிய 'தொச்சு கதை.

செலவு, கஷ்டம்னு பார்க்காமல் மார்க்கெட்ல தேடி அலைஞ்சு எதெது எங்கெங்கே கிடைக்கும்னு விசாரிச்சுண்டு வந்திருக்கான்.''

''உன் தம்பிக்காரன் வந்தால் அதில் நஷ்டம் தவிர வேறு எதுவும் வராது. லாபம்னு சொல்லிண்டு ஆரம்பிச்சாலும், நிச்சயமா நஷ்டம்தான் வரும்.''

''ஏன் அவனைக் கரிக்கிறீங்க? அவனால் ஆயிரம் லாபம் கெடைக்கற போது மூச்சே விட மாட்டீங்களே'' என்று பாய்ந்தாள் கமலா.

''அடாடா... ஆயிரம் லாபம்... சொல்ல மாட்டே...''

''ஏன், போன மாசம் பட்டுப் புடைவை வாங்கிக் கொடுத்தானே 75 பர்சன்ட் தள்ளுபடி விலையிலே. அப்ப என்னமாய் இளிச்சீங்க...!''

சென்ற மாதம், ஒரு நாள் தொச்சு நாலைந்து பட்டுப் புடைவைகளுடன் வீட்டிற்கு வந்தான்.

அவன் மூட்டை கட்டிக் கொண்டு போயிருக்கிறானே தவிர மூட்டையுடன் வந்தான் என்ற வரலாறே கிடையாது. ஆகவே நான் வியப்புடன், ''என்னப்பா மூட்டை?'' என்று கேட்டேன்.

''அக்கா... அக்கா... என்ன கேட்டீங்க அத்திம்பேர்...? மூட்டைதானே? நமக்குத் தெரிஞ்ச ஒரு எக்ஸ்போர்ட்டர், கொஞ்சம் பட்டுப் புடைவையைத் தள்ளுபடி விலையிலே தர்றேன்னு கொடுத்தார்...

''எக்ஸ்போர்ட்டர் கொடுத்தார். நீ ரயில்வே போர்ட்டர் மாதிரி தூக்கிண்டு வந்தியா?'' என்று சிரித்தபடியே கேட்டேன்.

உடனே கமலா, ''நீங்கதான் பெரிய ரிபோர்ட்டர் ஆச்சேன்னு கொண்டு வந்திருக்கான்'' என்று தானாக ஜோக் அடித்தாள். பட்டுப்புடைவைகள் எதிரே இருந்



தால் கமலாவைப் போல் கலகலப்பான பெண்மணியைப் பார்க்க முடியாது!

"தள்ளுபடி விலையோ தள்ளாதபடி விலையோ பட்டுப்புடைவை வேண்டாம்பா. யார்கிட்ட ஆயிரம், இரண்டாயிரம் பணம் இருக்குது?" என்றேன்.

"அத்திம்பேர் ஆயிரம் என்கிற பேச்செல்லாம் எதுக்கு? கொஞ்சம் மடிப்பிலே அழுக்காயிடுத்து. அதனால் கால் விலைக்குக் கொடுக்கிறான்... இது என்ன விலை இருக்கும் சொல்லுங்க?" என்று வினாடி வினா மாதிரி கேள்வி ஒன்றைக் கேட்டான்.

நான் வேண்டுமென்றே விலையைக் குறைவாக மதிப்பிட்டு, "ஐந்நூறு ரூபாய் இருக்குமா?" என்று கேட்டேன்.

தொச்சு ஒரு துள்ளுத் துள்ளினான். "அக்கா, நான் உன்கிட்ட எத்தனை தடவை சொல்லியிருக்கேன்... இதோ பார்... அத்திம்பேர்தான் ஒரு ஜீனியஸ் என்பதை மறுபடியும் நிரூபிச்சு இருக்கார்... அத்திம்பேர் உங்க திறமைக்கும் கெட்டிக்காரத்தனத்துக்கும் இந்த தொச்சு தலை வணங்குகிறான்... எப்படி அத்திம்பேர் இவ்வளவு கரெக்டா விலையைச் சொன்னீங்க...? இரண்டாயிரம் ரூபாய் புடைவை... ஐந்நூறுக்குத் தர்றார்..." என்றான்.



"என்ன கமலா... புடைவை வேண்டுமா?" என்று கேட்டேன்.

"நீங்க கேட்கிற விதத்தைப் பார்த்தாலே, வேண்டாம்னு பதில் சொல்லணும்னு நீங்க நெனைக்கறீங்கன்னு..."

"சீச்சீ... வேணுமின்னா வாங்கிக்க..."

அந்தச் சமயம் என் அருமை மாமியார் திடீரென்று அங்கு பிரத்யட்சமாகி, "ஏண்டா தொச்சு.உன் பெண்டாட்டி அங்கச்சிக்கும்தான் ஒண்ணு வாங்கிக்கோயேன்" என்றாள்.

"வாங்கிடுவேன், அம்மா. பிஸினஸ்லே பணத்தைப் போட்டிருக்கேன். புரட்ட முடியாது" என்றான் தொச்சு! இவன் பிஸினஸே பணத்தை 'எடுப்பது'தான்.போட்டானாம். புரட்ட முடியாதாம். சரியான புரட்டு!

"அக்காவே இரண்டு வாங்கிக்கட்டும். இரண்டு வாங்கிண்டால்தான் இந்த விலை என்று சொன்னார் எக்ஸ்போர்ட்டர்."

"சரிதான். ஒண்ணு வாங்கறதுக்கே ஆயிரம் யோசனை... வேண்டுமா, வேண்டாமா என்று பட்டிமன்றம்... ஒண்ணும் வேண்டாம்டா தொச்சு... இந்த பாம்பே சேல் போடறான் பாரு. கர்சீப் வாங்கினா. புடைவை இலவசம்னு அதிலே போய் ஒரு சுருணை வாங்கிக்கறேன்" என்றாள்.

கமலா தனது வழக்கமான அஸ்திரங்களை எடுத்துவிட்டாள்!

"சரி, கமலா... இரண்டு புடைவையை எடுத்துக்க... ஒன்னை அங்கச்சிகிட்ட கொடுத்துடு... பணம் நிதானமாகத் தரட்டும்..." என்றேன்.

கமலா புன்னகை அரசியானாள். தொச்சு புன்னகை மன்னன் ஆனான். என் மாமியார் புன்னகை சர்வாதிகாரியானாள். நான் ஆயிரம் ரூபாய் இழந்த பரிதாப கேஸ் ஆனேன். கமலா, நீலக் கலர் புடைவையைத் தனக்கு எடுத்துக் கொண்டாள். அங்கச்சிக்கு சிவப்புக் கலர் புடைவையைத் தேர்ந்தெடுத்தாள்.

உண்மையிலேயே பட்டுப்புடைவையை லாபகரமான விலையில் வாங்கியிருந்ததால், கமலா அதைச் சுட்டிக் காட்டியபோது, நான் ஒன்றும் பேசவில்லை.

"சோப் பவுடர் பண்றதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை..."

"ஆட்சேபணை இல்லைதானே... விடுங்கள். நீங்கள் பணம் கூடக் கொடுக்க வேண்டாம். தொச்சுவே எல்லா சாமானும் வாங்கிண்டு வர்றானாம்" என்றாள் கமலா.

"அக்கா... முதல்ல ஆசிட் ஸ்லர்ரியை அளந்து வெச்சுடு... அம்மா... இந்த எஸ்.டி.



பி.பி.யை நன்னாக் குழவியில பொடி பண்ணிச் சலிச்சு வை... அப்புறம் இந்த டி.எஸ்.பி.யையும் கட்டியில்லாமல் பொடி பண்ணு...'' என்று தொச்சு சொல்லிக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றி ஏகப்பட்ட பொட்டலங்கள். வாஷிங் சோடா, ப்ளீச்சிங் பவுடர், அல்ட்ராமரைன், டீ—பால் என்று பலப்பல.

அடுத்த இரண்டு மணி நேரம் என் வீட்டுக் கூடத்தைத் தொழிற்பேட்டை ஆக்கி, சோப் பவுடர் தயாரிப்பில் தொச்சு ஈடுபட்டிருந்தான். அவ்வப்போது என் மாமியார் 'இக்'காகக் காப்பி கொடுத்தாள். தொச்சுவுக்கு 'இக்' காப்பியுடன் 'தின்'னுவதற்கும் முறுக்கு, தட்டை கொடுத்தாள். பெரிய ஃபாக்டரி மாதிரி (அவன் வாயிலும்) வேலை நடந்து கொண்டிருந்தது. கமலா அவன் சொன்ன பொருட்களை எல்லாம் எடை போட்டுக் கொடுத்தாள். ஒருவாறாக எல்லாவற்றையும் கலந்து நிழலில் உலர்த்தி அட்டகாசமான ஒரு பவுடரைத் தயார் பண்ணி விட்டார்கள்.

அப்போது 'விசுக்'கென்று காற்று வீச, பவுடர் வீடெல்லாம், கட்டில் மேஜைக்குக் கீழேயெல்லாம் ஓரளவு பறந்து சென்றது.

என்ன வீடோ, என்ன காத்தோ... பேய்க் காற்றுதான் எப்போதும்!'' என்று கமலா அலுத்துக் கொண்டாள். (முன் தினம்தான், 'இது என்ன வீடு. கிடங்கு மாதிரி. காற்று, வெளிச்சம் எதுவுமில்லை' என்று முனகியிருக்கிறாள்!)

மூன்று பேரும் தவழ்ந்து போய் எல்லாவற்றையும் திரட்டினார்கள்.

''அத்திம்பேர்... சோப் பவுடர் ரெடி... முதல் முதல்ல உங்க கையால துவக்க விழா நடத்தணும்'' என்றான் தொச்சு.

''துவக்க விழா இல்லை. இது துவைக்கற விழா'' என்றேன்.

பக்கெட்டில் இரண்டு ஸ்பூன் பவுடரைப் போட்டுக் குழாயைத் திறந்தேன். தண்ணீர் விழுந்த வேகத்தில் அபாரமாக நுரை உண்டாயிற்று.

''சரி... ஏதாவது துணியை நனைக்கலாம்... கமலா... அழுக்குத் துணி கொண்டு வா...'' என்றேன்.

''முதல் முதல்லே அழுக்குத் துணியையாப் போடறது...? சரி... தொச்சு வாங்கிக் கொடுத்தானே அந்தப் பட்டுப் புடைவை. மடிப்புல அழுக்கா இருந்தது. அதைப் போடலாம்'' என்றாள் கமலா.

''நானே சொல்லணும்னு நெனைச்சேன். நீ சொல்லிட்டே அக்கா'' என்றான் தொச்சு.

கமலா பீரோவைத் திறந்து சிவப்புக் கலர் பட்டுப் புடைவையைக் கொண்டு வந்தாள். (''இது அங்கச்சி புடைவையில்லையா? இன்னும் அவள் எடுத்துக் கொண்டு போகவில்லையா?)

புடைவையைப் பிரித்துத் தண்ணீரில் அமுக்கினாள், கமலா.

''ஏண்டா தொச்சு... கையில லேசா எரிச்சலா இருக்கே'' என்றாள் கமலா.

''பவுடர் புதுசோன்னோ, அப்படித்தான் இருக்கும்...'' என்றான்.

''என்னவோ, சரசரவென்று நீர்க்குமிழி வருதே'' என்றேன்.

''அழுக்கை வெளியே எடுத்துடறதுன்னு நினைக்கிறேன். பத்து நிமிஷம் ஊறட்டும். அப்புறம் அலசித் தோய்ச்சிக்கலாம்'' என்றான் தொச்சு.

பத்து நிமிஷம் கழித்து (லைட்டாக ஒரு கப் டீ சாப்பிட்டுவிட்டு) தொச்சு பக்கெட்டில் கையை விட்டுப் பட்டுப் புடைவையை எடுத் —

கையோடு ஒரு கைக்குட்டை அளவு பட்டுப்புடைவை வந்தது. ''என்னது இது... துண்டா வர்றது?'' என்று டீ. வி. நாடகங்களில் வருவது போல் தனக்குத் தானே டயலாக் பேசிக் கொண்டே, திரும்பவும் கையைத் தண்ணீருக்குள் விட்டு எடுத்தான்.

இந்தத் தடவையும் துண்டாக வந்தது.

''என்னடா இது அநியாயம். பட்டுப் புடைவை துண்டு துண்டா வர்றது?'' என்று அக்கா கேட்டாள்.

இதில் ஏதோ அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரிந்து விட்டது. ஆகவே வாயைத் திறக்காமல் டீ. வி. நாடக நடிகர்கள் சிலரைப் போல் உணர்ச்சியேயில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''பக்கெட்டைக் கவிழுடா... சோப் பவுடர்லே எதுவோ ஜாஸ்தியாயிட்டது. துணியை ஆஸிட் சாப்பிடற மாதிரி அரிச்சுடுத்தே... என்னடா இது போறாத காலம்'' என்று கமலா அங்கலாய்த்தாள்.

''தொச்சு நிறையப் பச்சைத் தண்ணீரை விடு. சோப் பவுடரெல்லாம் கரைஞ்சு போயிடும்'' என்றேன். (அங்கச்சியின் புடைவைதான் இப்படிக் கெட்டுப் போயிற்று என்று எனக்குள் இருந்த வில்லன் சிரித்தான்!)

புடைவை பல டஜன் துண்டுகளாகப் போயிருந்தது. வழக்கமாக இந்த மாதிரி சமயங்களில் என் மேல் எரிந்து விழும் கமலா கூட அதிர்ச்சியால் வாயடைத்துப் போயிருந்தாள்!

''அத்திம்பேர்... நான்தான் சின்னத் தப்பு பண்ணிட்டேன். பவுடர் தயாரிப்பில் ப்ளீச்சிங் பவுடரின் அளவு தப்பாகப் போய் விட்டது. ஒரு கி. என்று போட்டிருந்ததை ஒரு கிலோ என்று எடுத்துக் கொண்டு விட்டேன். அது ஒரு கிராம்தான்'' என்றான் தொச்சு...

''அடாடா...'' என்றேன், சோகமான குரலில்.

''அதுவும் அக்கா ஆசைப்பட்டு வாங்கிண்ட புடைவை... இது அங்கச்சி முதலில் எடுத்துண்ட புடைவை... கலர் தனக்குப் பிடிச்சிருக்குன்னு அக்கா, புடைவையை மாத்திண்டா, அங்கச்சி கிட்டேயிருந்து...'' என்றான் தொச்சு.

எனக்குத் தலை சுழன்றது!

வட்டமேஜை

“என் போன்றவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்”

* 'விண்ணளாவிய ஊழல்' தலையங்கம் துணிவுடன் கூறிய உண்மையாகும். 'ஆண்டொன்றுக்கு நூறு கோடி ரூபாய் ஊழலை மூடி மறைத்துப் பூசி மெழுகுவதுதான் தமிழர் பண்பாடு எனில், தமிழர் பண்பாட்டின் இலக்கணம் திருத்தி எழுதப்பட வேண்டும்!' என்ற தங்கள் கருத்து அற்புதமானது. பொது மக்கள் நலனுக்குப் பாதகமாக யார் குற்றம் செய்திருந்தாலும் அவசியம் கண்டிக்கப்பட வேண்டும். துணிவுடன் தலையங்கம் எழுதிய தங்களைப் பாராட்டுகிறேன்.

மதுரை — 7,

ச. சங்கரநாராயணன்.

* வேலூர் ஊரிசுக் கல்லூரி மாணவர்களைப் போல் அனைத்துக் கல்லூரி மாணவர்களும் தங்களால் இயன்ற பொதுச் சேவையைக் கிராமங்களில் செய்தால் ஓரளவுக்காவது மக்கள் தெளிவு பெறுவார்கள்.

மேட்டுப்பாளையம். பி. ஏ. வஹாத்.

* சொந்த வீடு கட்ட ஆகாயக் கோட்டை கட்டும் என் போன்ற நடுத்தரவாசிகளுக்குச் சென்ற வாரக் கல்கி ஒரு திமர் வரப்பிரசாதமாகவே என் கண்களுக்குப் பட்டது. எந்தப் புத்தகம் வாங்கினாலும் படித்து முடித்ததும் அலட்சியமாய்த் தூக்கிப் போடும் நான், கல்கியைப் பத்திரப்படுத்தினேன்.

கடலூர் — 2, எம். ஏ. பாஷா.

* 'படம் பழசு; கமெண்ட் புதுசு' பகுதி புதுமையாகவும், அதே சமயம் சிந்திக்கும்படியாகவும் இருந்தது.

தோட்டக்குறிச்சி,

இரா. வளையாபதி.

* நம்மால் உருவாக்கப்பட்ட ஒன்றே நம்மை உருமாற்றுவதா? தமிழன்பனின் 'கம்ப்யூட்டர்' கவிதை ஓர் எச்சரிக்கை!

சென்னை — 85.

உதயா. அழகப்பன்.

* 'எரிதழல்' சிறுகதை ஒரு குடும்பப் பெண்ணின் பொறுப்புக்களையும், மகளின் உள்ள உணர்வுகளையும் பரிபூரணமாக எடுத்துக் காட்டியது. பாராட்டுக்கள்.

தலைவாசல், என். ஏகம்பவாணன்.

* 'உங்கள் மனைவியைப் பற்றிச் சில உண்மைகள்' கதை சிறிய, ஆனால் சீரான சிறந்த கருத்தோட்டமான கதை.

வேலூர் — 12,

காமாட்சி சத்தியநாராயணன்.

* 'தடுமாற்றம்' சிறுகதை யதார்த்தமாக இருந்தது. தன் மனைவியைத் தவறான எண்ணத்தோடு அடுத்தவன் பார்த்துச் சிரித்தால் மனித மனம் எப்படிக் குமுறும் என்பதை அழகாக விளக்கி விட்டார் கதாசிரியர்.

கொடைக்கானல், வி. ராஜசக்தி.

* பெண்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய காவல் நிலையங்களே கற்பழிப்பு நிலையங்களாய் மாறி வருவது கொடுமையிலும் கொடுமை. இம்மாதிரியான குற்றங்களுக்குக் கடுந்தண்டனை வழங்க வேண்டும். தண்டனையைக் குறைத்தால், தவறிழைப்போருக்குத் துணிவு பிறந்து விடும். எல்லாவற்றையும் விட, அமைச்சர் கப்புலட்சுமி ஜகதீசன் சொல்வது போல், பொது மக்கள் ஒன்று திரண்டு போராடுவதுதான் பெண்ணினத்திற்குப் பாதுகாப்பானது.

வேதாரண்யம்,

செல்வி வடுகன்.

* 'இராஜிநாமா' சிறுகதை அருமை. 'ஒரு பிரச்னை ஏற்பட்டால் அதைத் தன் கோணங்களில் மட்டும் பாராது, பல கோணங்களில் ஆராய்ந்து தெளிவான நல்லதொரு முடிவை எடுப்பதுதான் சிறந்தது' என்ற கருத்தை உணர்த்தியிருப்பது வெகுசிறப்பு.

மதுரை — 9, கே. செல்வலெட்சுமி

* கல்கி 5.3.89 இதழில் வீடு வாங்க எல். ஐ. ஸி. கடன் திட்டம் குறித்து எழுதியிருந்தீர்கள். 'பீம நிவாஸ் யோஜனா' திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:

- அதிகபட்ச லோன் தொகை ரூ. இரண்டு லட்சம். எனினும், மனுதாரருக்கு ஏற்கெனவே ஆயுள் இன்சூரன்ஸ் பாலிசி ரூ. 1 லட்சம் மூன்றாண்டுகளுக்கு இருந்தால், அவருக்கு ரூ. மூன்று லட்சம் வரை கடன் தரலாம்.
- மனுதாரர் முதலிலேயே பாலிஸிதாரராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. 'லோன்' ஒப்புதலான பிறகு, பாலிஸி எடுத்துக் கொள்ளலாம்.
- கடந்த ஐந்து மாதங்களில் நானூறு கடன்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒப்புதலுக்கு நாங்கள் எடுத்துக் கொள்ளும் காலம், பன்னிரண்டு நாட்கள் மட்டுமே.

38, அண்ணாசாலை,

சென்னை — 2,

பி. எம். நடராஜன்.

நிர்வாகி, பீமநிவாஸ்யோஜனா,

எல். ஐ. ஸி.

* கல்கி 5.3.89 இதழில் நீங்கள் கேட்டவை பகுதியில் வீரமணி பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ருஷ்டி — கொமேனி விவகாரத்தில் வீரமணி சிந்தனைத் தெளிவுடன் கருத்துத் தெரிவித்திருக்கிறார்: "ருஷ்டி மாறுபட்ட கருத்தைச் சொன்னார் என்பதற்காக அவரைக் கொன்று விடுவது என்பது எந்த மனித நாகரிகத்துக்கும் பொருந்தாது. கருத்தைக் கருத்தாலேயே வெல்ல வேண்டும். கொமேனியின் கூற்று அறிவியல் யுகத்துக்குப் பொருந்தாது." வீரமணியின் இக்கருத்து 'தினப் புரட்சி'யில் வெளியாகியுள்ளது.

நெய்வேலி — 2, இல. மதியழகன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.


பாலின் சத்து.
ட்ருவின் அன்பு.
புதிய
ட்ரு
ப்யூர்
மில்க் பிஸ்கட்
Milk Biscuits
TRUE
PURE
Milk Biscuits
சிறந்த பொருட்களைக் கொண்டு அன்புடனும்
அக்கறையுடனும் தயாரிக்கப்படுவது

REGISTERED No. M. 4362
Registered as a Newspaper in Sri Lanka



ஸ்டெல்லா

உஷாவின் பாணி!

உன்னதமாக சீரிய
வடிவமைப்பு
முத்து வெண்மை
மற்றும்
பளிச்சிடும் பழுப்பில்
உஷாவின் 40 ஆண்டிற்கு
மேலான நிபுணச்சிறப்பின்
நுட்பத்திறனுடன்
உருவாக்கப்பட்டது.
டபுள் பால் பேரிங்ஸுடன்

உங்கள் பாணி!

2.73 கோடிக்கு மேற்பட்ட
உஷா ஃபேன்கள்
வாடிக்கையாளர்களைத்
திருப்திப்படுத்தியிருக்கின்றன.
இந்தியாவிலும் 60க்கும்
மேலான
வெளிநாடுகளிலும்
பற்பல ரகங்களில்
கிடைக்கின்றன.
சீலிங், டேபிள், பெடஸ்டல்,
வால், கேபின் மற்றும்
எக்ஸாஸ்ட் ஃபேன்கள்.
அதனால்தான் மேலும்
அநேக மக்கள் உஷாவை
நம்புகிறார்கள்...
இந்தியாவின் அதிக
விற்பனையாகும் ஃபேன்.

